




# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

CHENNAI | Volume- 3 | Issue:122 | 17-11-2025 | திங்கட்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி







## இன்றைய பஞ்சாங்கம்

17.11.2025 கார்த்திகை 1
திங்கட்கிழமை

சூரிய உதயம் 6.15

திதி:
இன்று காலை 6.53 வரை
துவாதசி பின்பு திரயோதசி.

நட்சத்திரம்:
இன்று அதிகாலை 4.49 வரை
அஸ்தம் பின்பு சித்திரை

யோகம் :
இன்று காலை 9.31 வரை ப்ரீதி
பின்பு ஆயுஷ்மான்.

கரணம் :
இன்று காலை 6.53 வரை
தைதுலம் பின்பு இரவு 7.42
வரை கரசை பின்பு வணிசை

அமிர்தாதி யோகம் :
இன்று அதிகாலை 4.49 வரை
அமிர்த யோகம் பின்பு
சித்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று அதிகாலை 4.49 வரை
சதயம் பின்பு பூரட்டாதி

நல்ல நேரம்
காலை 6.15 – 7.15.
மாலை 4.45 – 5.45
இராகு காலம்
காலை 7.30 – 9.00.

எமகண்டம்
காலை 10.30 –12.00.

குளிகை
பிற்பகல் 1.30 – 3.00.

இன்று பிரதோஷம் நாள்

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# நிதிஷ்குமார் பீகார் முதல்வராக மீண்டும் விரைவில் பதவியேற்கிறார்

## பாட்னா காந்தி மைதானத்தில் விழா ஏற்பாடுகள் தீவிரம்



**பாட்னா, நவ.17:**
பீகார் சட்டசபை தேர்தலில் 243 தொகுதிகளில் 202 தொகுதிகளில் தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றி பெற்று, பெரும்பான்மையைப் பிடித்தது. இதில் பாஜக 89 இடங்களில் வென்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது, அதைத் தொடர்ந்து நிதிஷ்குமாரின் ஐக்கிய ஜனதா தளம் 85 இடங்களை வென்றது. லோக் ஜனசக்தி (ராம்விலாஸ்) 19 இடங்களையும், எச்ஏஎம் 5 இடங்களையும், ராஷ்ட்ரிய லோக் மோர்ச்சா 4 இடங்களையும் வென்றன. எதிக்கட்சிகளின் மகா கூட்டணி 35 இடங்களை மட்டுமே வென்றது. ஓவைசி கட்சி 5 இடங்களிலும், பிஎஸ்பி ஒரு இடத்திலும் வெற்றி பெற்றது. இதனையடுத்து பீகார் முதல்வராக ஒருங்கிணைந்த ஜனதாதளத்தின் நிதிஷ் குமாரே, மீண்டும் முதல்வராக பதவியேற்கவுள்ளார். இந்த நிலையில் புதிய அரசு அமைக்கும் பணிகள் விறுவிறுப்பாக நடந்து வருகின்றன.

இந்த பதவியேற்பு நிகழ்ச்சியில் பிரதமர் மோடி, மத்திய அமைச்சர்கள் மற்றும் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களின் முதல்வர்கள் பங்கேற்பார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் பிரதமர் மோடியின் அட்டவணைப்படி, பதவியேற்பு விழா தேதி மாற்றியமைக்கப்படலாம் என்றும் தெரிகிறது.

**24 அமைச்சர்கள் மீண்டும் வெற்றி**

சட்டசபை தேர்தலில் ராஷ்ட்ரீய ஜனதா தளம், காங்கிரஸ், இடதுசாரிகளின் இந்தியா கூட்டணிக்கு பலத்த அடி விழுந்தது. இக்கூட்டணியால் 34 இடங்களில் மட்டுமே வெல்ல முடிந்தது.

பாஜகவைச் சேர்ந்த துணை முதல்வர்கள் சாம்ராட் சௌதரி, விஜய் குமார் சின்ஹா உள்பட மாநில அமைச்சர்கள் 25 பேர் (பாஜக 15, ஐக்கிய ஜனதா தளம் 10) மீண்டும் போட்டியிட்டனர். இவர்களில் ஐக்கிய ஜனதா தளத்தின் சுமித்குமார் சிங் தவிர மற்ற அனைவரும் வெற்றி பெற்றனர். அமைச்சர் சுமித் குமார் சிங், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட ஆர்ஜேடி வேட்பாளர் சாவித்ரி தேவியிடம் சுமார் 13,000 வாக்கு வித்தியாசத்தில் தோல்வியை தழுவினார்.

பாஜகசார்பில்போட்டியிட்ட 15 அமைச்சர்களும் மீண்டும் தேர்வாகியுள்ளனர். மேலவை உறுப்பினராக இருந்த துணை முதல்வர் சாம்ராட் சௌதரி, தாராபூர் தொகுதியில் 45,000 வாக்கு வித்தியாசத்தில் ஆர்ஜேடி வேட்பாளர் அருண் குமாரை தோற்கடித்தார். இவர், கடைசியாக கடந்த 2010 சட்டசபை தேர்தலில் ஆர்ஜேடி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார்.

மற்றொரு துணை முதல்வர் விஜய் குமார் சின்ஹா, லக்கிசராய் தொகுதியில் 1,22,408 வாக்குகளுடன் தொடர்ந்து 4-வது முறையாக தேர்வானார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் அமரேஷ் குமாருக்கு 97,468 வாக்குகள் கிடைத்தன.

**8-வது முறையாக தேர்வான இருவர்**

பாஜகவின் பிரேம் குமார் (கயை), ஐக்கிய ஜனதா தளத்தின் பிஜேந்திர யாதவ் (சுபௌல்) ஆகிய இரு அமைச்சர்களும் தொடர்ந்து 8-வது முறையாக தேர்வாகியுள்ளனர்.

இந்த தேர்தலில் 3 தொகுதிகளில் வாக்கு வித்தியாசம் 100-க்கும் குறைவாகும். மேலும் 3 தொகுதிகளில் 250-க்கும் குறைவான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிதோல்வி நிர்ணயமானது. சந்தேஷ் தொகுதியில் வெறும் 27 வாக்கு வித்தியாசத்தில் ஆர்ஜேடியின் திபு சிங்கை தோற்கடித்தார் ஐக்கிய ஜனதா தளத்தின் ராதா சரண் ஷா. ராம்கர் தொகுதியில் வெறும் 30 வாக்கு வித்தியாசத்தில் பாஜகவின் அசோக் குமார் சிங்கை வீழ்த்தி, பகுஜன் சமாஜ் வேட்பாளர் சதீஷ் குமார் சிங் வெற்றி பெற்றார். அகியான் தொகுதியில் 95 வாக்கு வித்தியாசத்தில் கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) லிபரேஷன் கட்சி வேட்பாளர் சிவ பிரகாஷ் ரஞ்சனைதோற்கடித்தார் பாஜகவின் மகேஷ் பாஸ்வான்.

நபி நகர் தொகுதியில் வெற்றி பெற்ற ஐக்கிய ஜனதா தளத்தின் சேத்தன் ஆனந்துக்கும், ஆர்ஜேடியின் அமோத் குமார் சிங்குக்கும் இடையிலான வாக்கு வித்தியாசம் 112. தாகா தொகுதியில் 178 வாக்கு வித்தியாசத்தில் பாஜக வேட்பாளர் பவன் குமார் ஜெயஸ்வாலை தோற்கடித்தார் ஆர்ஜேடியின் பைசல் ரஹ்மான்.

போர்ப்ஸ்கஞ்ச் தொகுதியில் காங்கிரசின் மனோஜ் விஸ்வாஸிடம் 221 வாக்கு வித்தியாசத்தில் வெற்றியைப் பறிகொடுத்தார் பா.ஜ.க.வின் வித்யா சாகர் கேசரி.

# நவ.19-ல் பிரதமர் மோடி கோவை வருகை

## விமான நிலையத்தில் பாதுகாப்பு அதிகரிப்பு



**கோவை, நவ.17:**
பிரதமர் நரேந்திர மோடி கோவை வருகையை முன்னிட்டு கோவை விமான நிலையத்தில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. புதிய கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கோவையில் இயற்கை வேளாண் மாநாடு நவம்பர் 19,20-ம் தேதிகளில் நடக்கிறது. நவம்பர் 19-ம் தேதி நடைபெறும் நிகழ்வில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொள்கிறார். இதையொட்டி விமான நிலையத்தில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. புதிய கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து கோவை விமான நிலைய நிர்வாகம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: பாதுகாப்பு காரணங்களுக்காக பயணிகள் மற்றும் பொதுமக்களுக்கு கோவை விமான நிலையத்தில் தற்காலிகமாக சில கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதன்படி விமான நிலைய வளாக நுழைவாயில் முன் நவம்பர் 18-ம் தேதி காலை 6 மணி முதல் நவம்பர் 19-ம் தேதி மாலை 6 மணி வரை வாகனங்களை நிறுத்த முற்றிலும் தடை விதிக்கப்படுகிறது.

நுழைவாயில் பகுதியில் பயணிகளை இறக்கி விடவும், ஏற்றிச் செல்லவும் மூன்று நிமிடங்கள் வழங்கப்படும் கால அவகாசம் வழக்கம் போல் நடைமுறையில் இருக்கும். பாதுகாப்பு காரணங்களுக்காக மேற்கொள்ளப்படும் இந்நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கவும், நவம்பர் 18, 19-ம் தேதிகளில் பயணம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ள பயணிகள் மேற்குறிப்பிட்ட புதிய கட்டுப்பாடுகளை பின்பற்றவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோவை விமான நிலைய இயக்குநர்(பொறுப்பு) சம்பத் குமார் கூறும் போது, பிரதமர் வருகை மற்றும் உளவுத்துறை அறிவுறுத்தலின்பேரில் கோவை விமான நிலையத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. பயணிகளுக்கு வழக்கமாக மேற்கொள்ளப்படும் சோதனை தவிர அனைவரும் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு ஒரு சிலருக்கு இரண்டு அல்லது மூன்று முறை சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பயணிகள் மட்டுமின்றி விமான நிலையத்தில் பணியாற்றும் ஊழியர்கள், விமான நிறுவனத்தினர் உள்ளிட்ட அனைத்து துறையினரும் விமான நிலையத்திற்குள் மட்டுமின்றி வெளியே அவர்கள் மேற்கொள்ளும்நடவடிக்கைகளும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மத்திய தொழிற்பாதுகாப்பு படையினர் அதிதீவிர கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர் என்றார்.

# சபரிமலை ஐயப்பன் கோவில் நடை திறக்கப்பட்டது




**சென்னை, நவ.17:**
சபரிமலை ஐயப்பன் கோவிலில் நடப்பு மண்டல, மகர விளக்கு சீசனுக்காக சபரிமலை ஐயப்பன் கோவில் நடை நேற்று மாலை 5 மணிக்கு திறக்கப்பட்டது. பக்தர்கள் சரண கோஷங்கள் முழங்க தந்திரி கண்டரரு மகேஷ் மோகனரு முன்னிலையில், மேல்சாந்தி அருண்குமார் நம்பூதிரி நடையை திறந்து வைத்தார்.

நாளைமுதல் அதிகாலை 3 மணிக்கு நடை திறக்கப்பட்டு வழக்கமான பூஜை, வழிபாடுகள் தொடர்ந்து நடைபெறும். கோவில் தந்திரி கண்டரரு மகேஷ் மோகனரு முன்னிலையில் புதிய மேல்சாந்தி பிரசாத் நம்பூதிரி தலைமையில் தினசரி அதிகாலை 3 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டு நிர்மால்ய தரிசனம், கணபதி ஹோமம், தொடர்ந்து காலை 11.30 மணி வரை நெய் அபிஷேகம், உச்ச பூஜைக்கு பிறகு மதியம் 1 மணிக்கு நடை அடைக்கப்படும்.

மீண்டும் பிற்பகல் 3 மணிக்கு நடை திறக்கப்பட்டு மாலை 6.30 மணிக்கு சிறப்பு தீபாராதனையும், இரவு 7 மணிக்கு புஷ்பாபிஷேகமும் நடைபெறும். அத்தாள பூஜைக்கு பிறகு இரவு 11 மணிக்கு அரிவராசனம் பாடல் இசைக்கப்பட்டு நடை அடைக்கப்படும்.

நடப்பு சீசனையொட்டி அடுத்த மாதம் (டிசம்பர்) 27-ந் தேதி மண்டல பூஜையும், ஜனவரி 14-ந் தேதி மகர விளக்கு பூஜையும் நடைபெறும்.

# வங்கக் கடலில் புயல் சின்னம் 7 மாவட்டங்களுக்கு நேற்று ‘ஆரஞ்ச் அலெர்ட்’



**சென்னை, நவ. 17:**
தென்மேற்கு வங்கக்கடலில் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளதால், தமிழகத்தில் சென்னை உள்ளிட்ட 7 மாவட்டங்களுக்கு நேற்று மிக கனமழை பெய்வதற்கான ஆரஞ்ச் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தென் இலங்கை மற்றும் அதையொட்டிய தென்மேற்கு வங்கக் கடலில் நிலவிய வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக நேற்று காலை இலங்கை கடலோரப்பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்மேற்கு வங்கக்கடலில் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவானது. நேற்று காலை அதே பகுதியில் நிலவுகிறது.

இதன்காரணமாக நேற்று முதல் 22ம் தேதி வரை கடலோர தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், உள் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

நேற்று கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் கன முதல் மிக கனமழையும், விழுப்புரம், அரியலூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுவையிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

நேற்று (17ந்தேதி) சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் கன முதல் மிக கனமழையும், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களிலும், புதுவையிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

18ந்தேதி கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், தென்காசி மற்றும் தேனி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

19ந்தேதி மயிலாடுதுறை மற்றும் கடலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

20ந்தேதி கடலூர், மயிலாடுதுறை, விழுப்புரம், செங்கல்பட்டு மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

**இடி, மின்னலுடன் கூடிய மழை**

சென்னையில்நேற்று வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான முதல் கன மழையும், ஓரிரு இடங்களில் மிக கன மழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு விவரம்: திற்பரப்பு 6 செ.மீ., செம்பனார் கோவில் 4 செ.மீ., பரங்கிப்பேட்டை 3 செ.மீ., மயிலாடுதுறை, சிதம்பரம், தரங்கம்பாடி, வேளாங்கண்ணி தலா 2 செ.மீ. மழை பதிவாகி உள்ளது.

இந்த நிலையில் புதுச்சேரி ஆட்சியரும், மாவட்ட பேரிடர் மேலாண்மை மைய தலைவருமான குலோத்துங்கன் கூறுகையில், ‘வடகிழக்கு பருவ மழையின் தொடர்ச்சியாக, வங்காள விரிகுடா கடற்பரப்பின் மீது காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ளது. நேற்று மற்றும் நாளை கன மற்றும் அதி கனமழை பெய்யக்கூடும் என்றும் காற்று மணிக்கு 55 கி. மீ. வரை வீசக்கூடும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**புதுச்சேரிக்கும் அலெர்ட்**

மேலும் புதுவை பகுதிக்கு ஆரஞ்ச் அலர்ட் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் அனைவரும் மிக பாதுகாப்பாகவும், எச்சரிக்கையுடனும் இருக்கும் படியும் தேவை இருந்தாலன்றி வெளியே வர வேண்டாம். அரசு அளித்துள்ள வழிகாட்டுதல்களை பின்பற்றுவதுடன், வதந்திகளை நம்பாமல் அரசு அளிக்கும் செய்திகளை மட்டுமே பின் பற்றுங்கள். புகார்களை இலவச அழைப்பு எண்களான 1077, 1070, 112 அல்லது 94889 81070 என்கிற எண்ணில் வாட்ஸ்அப் தகவல் ஆகியவற்றின் வழியாக தெரிவிக்கலாம்’ எனத் தெரிவித்துள்ளார்.

கடந்த அக்டோபர் 15-ம் தேதி முதல் வடகிழக்கு பருவ மழை தொடங்கியது, அவ்வப்போது மழையும் பெய்தது. இதனிடேயே வங்கக் கடலில் அக்டோபர் 27-ம் தேதி மோந்தா புயல் உருவானது. இந்தப் புயல் புதுவையை தாக்கும் என வானிலை மையம் எச்சரித்தது. ஆனால் புயல் ஆந்திராவை நோக்கி நகர்ந்தது.

இருப்பினும், புதுவை மற்றும் புதுவையை சுற்றி உள்ள தமிழகப் பகுதிகளில் கன மழை பெய்தது. புதுவையிலும் கன மழை கொட்டியது.








# திருக்குறள் குறள்-442

**உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்**
**பெற்றியார்ப் பேணிக் கொளல்**



வந்துள்ள துன்பத்தை நீக்கி, இனித் துன்பம் வராதபடி முன்னதாகவே காக்கவல்ல தன்மையுடையவரைப் போற்றி நட்புக் கொள்ள வேண்டும்.

## சிந்திக்க ஒரு நொடி



நாம் வாழ்க்கையில்
நேர்மையாக இருப்பதில்
எந்தவித தவறும்
இல்லை....
ஆனால்.....
அதே நேர்மையை நாம்
பிறரிடமும் எதிர்பார்ப்பது
தான் மிகவும் தவறு ...

**உஷா முத்துராமன்**

## ரயில் நிலையம் முற்றுகை போராட்டம்



ஆம்பூரில் SIR என்னும் வாக்காளர் சீரிய திருத்தம் செய்யும் தேர்தல் ஆணையத்தை கண்டித்து மனிதநேய ஜனநாயக கட்சி, இந்திய தேசிய காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள் கட்சி,AIMIM உள்ளிட்ட கூட்டணி கட்சிகள் ரயில் நிலையம் முற்றுகை போராட்டம் நடத்தினர்

## திருக்குறள் திருப்பணிகள் பயிற்சி வகுப்பு



தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித்துறை மதுரை மாவட்டமும், மதுரை வடக்குமாசி வீதி மணியம்மை மழலையர்&தொடக்கப் பள்ளியும் இணைந்து நடத்தும் திருக்குறள் திருப்பணிகள் பயிற்சி வகுப்பு நடந்தது. புரட்சிப்பாவலர் மன்றத்தின் தலைவர் பி.வரதராசன் தலைமையில் சப்ரா பீவீ அல்அமீன் காந்தி அருங்காட்சியகம் உதவிப் பேராசிரியர் பணிநிறைவு அவர்கள் திருக்குறள் பயிற்சி அளித்தார்.உடன் பள்ளியின் தலைமையாசிரியர் அமுதுரசினி, தமிழ்ச்செம்மல் கவிஞர் இரா.இரவி ,கவிஞர் குறளடியான்.

## கள்ளக்குறிச்சியில் தவெக வினர் ஆர்ப்பாட்டம்



கள்ளக்குறிச்சியில் நேற்று தவெக வினர் ஆர்ப்பாட்டம் செய்தனர்,

## கட்சி நிர்வாகிகளிடம் ஆலோசனை



கடலூர் மாவட்டம் திட்டக்குடியில் உள்ள தமிழக வாழ்வுரிமைக் கட்சி அலுவலகத்திற்கு தமிழக வாழ்வுரிமைக் கட்சி நிறுவனத் தலைவரும் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை அரசு உறுதிமொழிக் குழுத் தலைவருமான தி.வேல்முருகன் எம்.எல்.ஏ நேரில் வருகை புரிந்து நகர மன்ற கவுன்சிலர் ரெங்க.சுரேந்தர் குடும்பத்தினரை சந்தித்து வாழ்த்தினார். மேலும் கட்சி நிர்வாகிகளிடம் ஆலோசனை நடத்தினார்.

## 25 இணைகளுக்கு அமைச்சர் வேலு திருமணத்தை நடத்தி வைத்தார்



துணை முதல்வர் உதயநிதி பிறந்தநாளான மனிதநேய உதயநாளை முன்னிட்டு, சென்னை வேப்பேரி, பெரியார் திடலில் சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் நேற்று அமைச்சர் சேகர்பாபு முன்னிலையில், 25 இணைகளுக்கு அமைச்சர் வேலு திருமணத்தை நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார். உடன் மேயர் பிரியா , சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், மற்றும் திமுகவினர் பங்கேற்றனர்.

# சளுக்கை ஸ்ரீசுகநாராயணப் பெருமாள் பவித்ரோத்சவம்

**வந்தவாசி, நவ 17:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த சளுக்கை கிராமத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீசுகந்தவல்லி நாயிகா சமேத ஸ்ரீசுகநாராயணப் பெருமாள் கோவிலில் மூல மூர்த்திகள் மற்றும் உற்சவ மூர்த்திகளுக்கு பவித்ரோத்ஸவம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

முன்னதாக பால், தயிர், சந்தனம், இளநீர் உள்ளிட்ட வாசனை திரவியங்கள் கொண்டுவிசேஷ திருமஞ்சனம் நடைபெற்றது. பிறகு திருப்பவித்ரம் சமர்ப்பிக்கப்பட்டு, மேள வாத்தியங்களுடன் மாலை மஹாபூர்ணாஹுதியுடன் பெருமாள் உள்புறப்பாடு நடந்தேறியது.



இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பங்கேற்ற அனைவருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

**பா. சீனிவாசன்,வந்தவாசி.**

## சீர்காழியில் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் சார்பில் எஸ்ஐஆர் - 2025 விழிப்புணர்வு முகாம்

**சீர்காழி , நவ , 17 :**

தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத், மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி கிளையின் சார்பாக, கிளை நிர்வாகத்தினால் கடந்த 12-ம் தேதி முதல் தினந்தோறும் மாலை 4 மணி முதல் 7 மணி வரை சீர்காழி கிளை மர்க்கஸ்ஸில் மக்களுக்கான விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டு வருகின்றது.

இதில் இந்திய தேர்தல் ஆணையத்தால் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்ட எஸ்ஐஆர் 2025 படிவத்தினை பூர்த்தி செய்ய தேவையான ஆவணங்கள் குறித்தும், முந்தைய எஸ்ஐஆர் 2002



வரைவு பட்டியலில் இருந்து எவ்வாறு தகவல்களை சேகரிப்பது குறித்தும் விழிப்புணர்வு செய்யப்பட்டது. பயனாளர்கள் ஐயமின்றி தங்கள் படிவங்களை பூர்த்தி செய்துக் கொண்டனர். இந்த முகாமில் அனைத்து தரப்பு மக்களும் ஆர்வமாக கலந்துக் கொண்டனர்.

## தஞ்சையில் இரண்டாம் நாள் ஆசிரியர் தகுதித் தேர்வு



தஞ்சாவூர் வேலம்மாள் போதி கேம்பஸ்ஸில் இரண்டாம் நாள் தேர்வு எழுதிய மாணவ மாணவிகளை எதிர் பார்த்து பெற்றோர் கள் காத்திருந்தனர் .**செய்தி குடந்தை பரிபூரணன்.**

## கோவையில் ஆசிரியர் தகுதி தேர்வு



கோவை ராஜவீதி துணி வணிகர் சங்க அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நேற்று ஆசிரியர் தகுதி தேர்வு நடந்தது.

## எஸ்ஐஆர் படிவங்களை திரும்பப் பெறும் பணிகளை கலெக்டர் சுப்புலட்சுமி ஆய்வு செய்தார்



வேலூர் பென்னாத்தூர் பேரூராட்சியில் எஸ்ஐஆர் படிவங்களை திரும்பப் பெறும் பணிகளை கலெக்டர் சுப்புலட்சுமி ஆய்வு செய்தார்.

## எஸ்ஐஆர் பணி



சேலம் ஏத்தாப்பூரில் எஸ்ஐஆர் பணிகளை கலெக்டர் பிருந்தாதேவி பார்வையிட்டார்

## அறிஞர் அண்ணா பட்டு வளாகத்தினை அமைச்சர் காந்தி பார்வையிட்டார்



காஞ்சிபுரம் வள்ளல் பச்சையப்பன் சாலையில் புனரமைக்கப்பட்ட அறிஞர் அண்ணா பட்டு வளாகத்தினை அமைச்சர் காந்தி பார்வையிட்டார்.எம்எல்ஏக்கள் சுந்தர், எழிலரசன், மேயர் மகாலட்சுமி, டிஆர்ஓ முருகேசன் உடன் உள்ளனர்.

## வேலூரில் தமிழக வெற்றி கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!



**வேலூர், நவ .17:**

வேலூர் அண்ணா கலையரங்கம் அருகில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணியில் உள்ள பல்வேறு குளறுபடிகளை கண்டித்து தமிழக வெற்றி கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

வேலூர் ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட தமிழக வெற்றி கழகம் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் வேலூர் மாவட்ட தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டு கண்டன கோஷங்களை எழுப்பினர். பின்னர் அனைவரும் அமைதியாக கலைந்து சென்றனர்.

இந்த கண்டன ஆர்ப்பாட்டம் பொது மக்களின் கவனத்தை ஈர்த்தது குறிப்பிடத்தக்கது.

## சங்க பயனாளர்களுக்கு அமைச்சர் காந்தி கடனுதவி



காஞ்சிபுரத்தில் நேற்று நடந்த கூட்டுறவு வார விழாவில் சங்க பயனாளர்களுக்கு அமைச்சர் காந்தி கடனுதவிகளை வழங்கினார். எம்எல்ஏக்கள் சுந்தர், எழிலரசன்,டிஆர்ஓ முருகேசன், மேயர் மகாலட்சுமி,ஒன்றியக்குழு தலைவர் கள் மலர்க்கொடி, தேவேந்திரன், மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் சிவமலர் உடன் உள்ளனர்.

## நாம் தமிழர் வேட்பாளர்களை சீமான் அறிவித்தார்



திருவையாறு சட்டமன்றத்தொகுதி பூதலூரில் நடந்த தண்ணீர் மாநாட்டில் 15 சட்டமன்றத் தொகுதிகளுக்கான நாம் தமிழர் வேட்பாளர்களை தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அறிவித்தார்.

## எஸ்ஐஆரை கண்டித்து தவெக கட்சியினர் ஆர்ப்பாட்டம்




கடலூரில் எஸ்ஐஆரை கண்டித்து தவெக கட்சியினர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

## கல்விக்கடன் வழங்கும் முகாம் 152 மாணவர்களுக்கு ரூ.8.76 கோடி கடனுதவி

**விருதுநகர், நவ.17:**

விருதுநகரில் கல்லூரி மாணவ, மாணவி யர்களுக்கு சிறப்பு கல்விக்கடன் வழங்கும் முகாம் மாவட்ட ஆட்சியர் சுகபுத்ரா தலை மையில் நடைபெற்றது. இதில், தேசியமயமாக்கப்பட்ட மற்றும் தனியார் வங்கிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். கல்விக்கடன் பெறுவதில் மாணவர்கள், பெற்றோர்களின் சந்தே கங்கள் நிவர்த்தி செய்யப்பட்டது. மேலும், விண்ணப்பித்த தகுதியான மாணவர்களுக்கு 20 நாட்களுக்குள் கல்விக் கடன் வழங்கப்படும். நடப்பு நிதி ஆண்டில் கல்விக்கடன் இலக்காக ரூ.38.11 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. செப்டம் பர்-2025 வரை 576 மாணவர்களுக்கு ரூ. 27.61 கோடி கல்விக் கடன் வழங்கப்பட்டுள்ளது. இந்த முகாமில் 152 மாணவர்களுக்கு ரூ.8.76 கோடி கல்விக்கடன் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன என மாவட்ட ஆட்சி யர் தெரிவித்தார். இந்நிகழ்வில், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் சு.பாண்டிச்செல்வன் உட் பட பலர் கலந்து கொண்டனர்.

## சிறையில் அடைப்பு

**கோவை, நவ.17:**

கோவை மாணவி கும்பல் பாலியல் வன்கொடுமை வழக்கில், போலீசாரால் சுட்டு பிடிக்கப்பட்ட மூன்றுபேரில் ஒரு வர் ஏற்கனவே சிறையில் அடைக்கப்பட்ட நிலையில், மேலும் ஒருவர் சிகிச்சைப் பின் வியாழனன்று கோவை மத்திய சிறை யில் அடைத்தனர். கோவை விமான நிலையம் அருகே மாணவியை மூன்று பேர் கடத்தி கும்பல் பாலியல் வன்கொடுமை செய்தனர். இச்சம்பவம் தொடர்பாக சதீஷ் என்கிற கருப்புசாமி, காளீஸ்வ ரன் மற்றும் குணா என்கிற தவசி, ஆகிய மூவரை போலீசார் சுட்டு பிடித்தனர். கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த மூன்று பேரில் தவசி என்பவரை சிகிச்சைக்கு பின் புதனன்று போலீசார் கோவை மத்திய சிறையில் அடைத்தனர். இந்நிலையில் காளீஸ்வரன்னையும் வியாழனன்று சிகிச் சைக்கு பின் கோவை மத்திய சிறையில் அடைத்தனர்.

## முன்னாள், இந்நாள் ஆட்சியர்கள் ஆஜராக நீதிமன்றம் உத்தரவு

**கோவை, நவ.17:**

வட்டாட்சியர் பதவி உயர்வு விவகாரத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் கோவை முன்னாள் ஆட்சியர் கிராந்தி குமார் மற்றும் தற்போதை ஆட்சியர் பவன் குமார் ஆகியோர் வருகிற 19 ஆம் தேதி நேரில் ஆஜராக வேண்டும் என்று நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணையம் டி.என். பி.எஸ்.சி கடந்த 2029 - 2011 ஆம் ஆண்டுகளில் நடந்த தேர்வில் வெற்றி பெற்ற வருவாய் உதவியாளராக கோவையில் பணி யில் சேர்ந்த உமாபதி, நாட்ராயன் ஆகியோர் துணை வட்டாட்சி யராக 2018 ஆம் ஆண்டும், சிறப்பு வட்டாட்சியராக 2022 ஆம் ஆண்டு பதவி உயர்வு பெற்றனர். பின்னர், மீண்டும் துணை வட்டாட்சியராக இவர்கள் பதவி இறக்கம் செய்யப்பட்டனர். இதை எதிர்த்து முறையிடப்பட் டது. அதே நேரம் உயர்நீதிமன்றம் வழக்கு தொடரப்பட்டது. இதற்கிடையில் முதலில் பிறப்பித்த சுற்றறிக்கை அரசு திரும்ப பெற்றுள்ளது. இதையடுத்து தங்களுக்கு மீண்டும் வட்டாட்சியர் பதவி உயர்வு வழங்கக் கோரி நீதிமன்றத்தில் இருவரும் முறையிட்டனர். இதனை நீதிமன்றம் ஏற்றது. ஆனால், இதன்பிறகு வெளியி டப்பட்ட வட்டாட்சியர், துணை வட்டாட்சியர் பதவி உயர்வு பட்டியலில் இவர்கள் பெயர் இல்லாத தால், சென்னை உயர்நீதிமன்றத்தில் கோவை மாவட்ட ஆட்சியருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கை இருவரும் தாக்கல் செய்தனர். இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதி ஜி.கே இளந்திரையன், கோவை ஆட்சியரை நேரில் ஆஜராகும்படி உத்தரவிட்டார். அவர் ஆஜராகாததால், அவருக்கு எதிராக ஜாமினில் வரக்கூடிய பிடிவாரண்ட் பிறப்பிக்கப்பட்டது. இந்நிலையில் இந்த வழக்கு நீதிபதி ஜி.கே இளந்திரையன் முன் புதனன்று விசாரணைக்கு வந்தது. கோவை மாவட்ட ஆட்சியர் பவன்குமார் நேரில் ஆஜரா னார். கூடுதல் அட்வகேட் ஜெனரல் ரவீந்திரன் ஆஜராகி, கோவை மாவட்ட ஆட்சியாராக கடந்த பிப்ரவரி மாதம் தான் பவன் குமார் பதவியேற்றார். உயர்நீதி மன்ற உத்தரவின் போது கோவை ஆட்சியராக ஐ.ஏ.எஸ் அதி காரி கிராந்தி குமார் தான் பதவி வகித்தார், என்றார். இதை ஏற்றுக் கொண்டு நீதிபதி இந்த வழக்கை வருகிற 19 ஆம் தேதிக்கு தள்ளி வைத்தார். அன்று கோவை மாவட்ட முன்னாள் ஆட்சி யர் கிராந்தி குமார், தற்போதைய ஆட்சியர் பவன் குமார் நேரில் ஆஜராக வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

# மார்ச் மாத இறுதிக்குள் படுக்கை வசதி கொண்ட வந்தே பாரத் 8 ரயில்கள் தயாரிக்க இலக்கு



**சென்னை, நவ.17:**

அடுத்த ஆண்டு மார்ச் மாத இறுதிக்குள் படுக்கை வசதி கொண்ட 8 வந்தே பாரத் ரெயில்கள் தயாரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

சென்னை பெரம்பூரில் ஒருங்கிணைந்த ரெயில் பெட்டி தொழிற்சாலை (ஐ.சி.எப்.) அமைந்துள்ளது. இங்கு, ஆண்டுக்கு சுமார் 4 ஆயிரம் ரெயில் பெட்டிகள் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதற்கிடையே, வந்தே பாரத் ரெயில்கள் தயாரிப்பு பணியில் ஈடுபட்டது. இதுவரையில் இந்தியா முழுவதும் 92 வந்தே பாரத் ரயில்கள் தயாரித்து வழங்கப்பட்டுள்ளன. வந்தே பாரத் ரெயில்கள் இருக்கை வசதி கொண்டதாக இருப்பதால் பகல் நேரத்தில் மட்டுமே இயக்கப்பட்டு வருகிறது.

எனவே இரவு நேர பயணிகளின் தேவைக்காக படுக்கை வசதி கொண்ட வந்தே பாரத் ரெயில்களை தயாரிக்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி, கர்நாடக மாநிலம் பெங்களூரில் உள்ள பி.இ.எம். எல். நிறுவனத்தில், கடந்த ஆண்டு முதல் படுக்கை வசதி கொண்ட வந்தே பாரத் ரெயில் தயாரிப்பு பணிகள் நடைபெற்றது. பின்னர், ஐ.சி.எப். ஆலைக்கு கொண்டுவரப்பட்டது. மொத்தம் 16 பெட்டிகள் கொண்ட இந்த ரெயில் பலகட்ட பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர், டெல்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதுகுறித்து தெற்கு ரெயில்வே அதிகாரிகள் கூறியதாவது:-

வரும் ஜனவரி மாதம் 2 படுக்கை வசதி கொண்ட வந்தே பாரத் ரெயில்கள் கண்டிப்பாக பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். இதற்கான பணிகள் முழுவீச்சில் நடந்து வருகிறது. படுக்கை வசதிகொண்ட வந்தே பாரத் ரெயிலின் தேவை அதிகமாக இருக்கும் என்பதால் மார்ச் மாத இறுதிக்குள் கூடுதலாக 8 வந்தே பாரத் ரெயில்களை தயாரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் தேவைக்கேற்ப ரெயில் பெட்டிகள் தயாரிப்பு பணி நடைபெறும். இதேபோல, பெங்களூரில் இருந்து சென்னை வழியாக கன்னியாகுமரி வரையில் ஒரு படுக்கை வசதி கொண்ட வந்தே பாரத் ரெயிலை இயக்குவதற்கான ஆலோசனை நடந்து வருகிறது.

இவ்வாறு கூறினார்கள்.

# சம்பா பயிர்க் காப்பீடு நவ.30 வரை கால நீட்டிப்பு!

**சென்னை, நவ.17:**

வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே. பன்னீர்செல்வம் விடுத்துள்ள செய்திக் குறிப்பு:

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் தற்போது, விவசாயிகள் சம்பா நெற்பயிரை முழு வீச்சில் சாகுபடி செய்து வருகின்றனர்.

இதுவரை 26.25 லட்சம் ஏக்கர் பரப்பில் சம்பா நெற்பயிர் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நாள் வரை, 6.27 லட்சம் விவசாயிகளால் 15 லட்சம் ஏக்கர் சம்பா நெற்பயிர் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது மொத்த சாகுபடி பரப்பில் 57 சதவீதமாகும். இதே நாளில் கடந்த வருடம் 10 லட்சம் ஏக்கர் சம்பா நெற்பயிர் காப்பீடு செய்யப்பட்டது.

இந்நிலையில், தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், மதுரை, புதுக்கோட்டை, கரூர், சேலம், திருப்பூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, தேனி, ராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, அரியலூர், வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை, தருமபுரி, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், சிவகங்கை, கடலூர், திருவள்ளூர் மற்றும் ஈரோடு ஆகிய 27 மாவட்டங்களில் சம்பா நெற்பயிரை காப்பீடு செய்வதற்கான கடைசி தேதி 2025 நவம்பர் 15ஆம் தேதி என அறிவிக்கை செய்ய ப்பட்டது.

எனினும் பல மாவட்டங்களில் தொடர் மழையின் காரணமாக குறுவை நெல் அறுவடை மற்றும் சம்பா நெல் நடவு பணிகள் தாமதமானதாலும், வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்த பணிகளில் கிராம நிர்வாக அலுவலர்கள் ஈடுபட்டுள்ளதால் அடங்கல் வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டதாலும், சம்பா/ தாளடி/ பிசானம் நெற்பயிர் காப்பீட்டுக்கான கடைசி தேதியை நீட்டிக்க வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கைக்கிணங்க, விடுபட்ட அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்துடன், தமிழ்நாடு அரசின் கோரிக்கைக்கிணங்க சம்பா/ தாளடி/ பிசானம் நெற்பயிர்க் காப்பீட்டுக்கான கடைசி தேதியை 2025 நவம்பர் 30ஆம் தேதி வரை நீட்டித்து ஒன்றிய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

முதல்வர் ஸ்டாலினின் துரித நடவடிக்கையின் பேரில் சம்பா/ தாளடி/ பிசானம் நெற்பயிர் செய்யும் விவசாயிகளின் நன்மையை கருதி பயிர் காப்பீடு செய்யும் காலக்கெடுவானது நவம்பர் 30 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

எனவே வேளாண்மைத் துறை அலுவலர்கள் தத்தம் பகுதிகளில் உள்ள விவசாயிகளை அணுகி பயிர் காப்பீடு செய்திடும் நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ள ப்படுகிறது.

எனவே, அரியலூர், செங்கல்பட்டு, கடலூர், தருமபுரி, ஈரோடு, கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், கரூர், மதுரை, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம், ராணிப்பேட்டை, சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், தேனி, திருச்சி, திருப்பத்தூர், திருப்பூர், திருவள்ளூர், திருவண்ணாமலை, திருவாரூர், வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில், இதுவரை சம்பா நெற்பயிரை காப்பீடு செய்யாத விவசாயிகள் உரிய ஆவணங்களுடன் பொது சேவை மையங்கள், தொடக்க வேளாண் கடன் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் நவம்பர் 30ம் தேதிக்குள் பதிவு செய்து பயனடையுமாறு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

# 72வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா: சிவகங்கையில் பெரியகருப்பன் துவக்கிவைத்தார்



**சிவகங்கை, நவ.17:**

72வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவின் தொடக்க நாளான நேற்று (14ந் தேதி) சிவகங்கையில் உள்ள திருக்கோஷ்டியூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் வளாகத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் கூட்டுறவு கொடி ஏற்றி வைத்தார்.

இந்த ஆண்டும் கூட்டுறவுச் சங்கங்கள் "தற்சார்பு இந்தியா" ஒரு கருவி என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு 72வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவின் தொடக்க நாளான நேற்று சிவகங்கையில் உள்ள திருக்கோஷ்டியூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் வளாகத்தில் அமைச்சர் பெரியகருப்பன் கூட்டுறவு கொடி ஏற்றி வைத்து அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் மரக்கன்றுகளை நடவு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பேசும் போது தெரிவித்ததாவது:-

டெல்லியில் நடைபெற்ற மாநிலங்களுக்கு இடையேயான கூட்டுறவுத்துறை ஆலோசனைக் கூட்டத்தில் மத்திய கூட்டுறவுத் துறைஅமைச்சர் அமித்ஷா, கூட்டுறவுத்துறை தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்று பாராட்டினார். இச்செயல்பாடுகளை மற்ற மாநிலங்களும் பின்பற்ற வேண்டும் என தமிழ்நாட்டுக்கு புகழாரம் சூட்டினார்.

இதுபோன்ற சிறப்பு வாய்ந்த கூட்டுறவுத்துறையாக தமிழ்நாடு அரசின் கூட்டுறவுத்துறை செயல்பட்டு வருகிறது.

மேலும், இந்த கூட்டுறவு வாரவிழாவில் இன்னும் மென்மேலும் கூட்டுறவுத்துறையின் சிறப்புகளை மக்களிடத்தில் எடுத்துச் செல்லவும் நலத்திட்ட உதவிகள் மக்களிடத்தில் சென்றடைவதை உறுதி செய்யும் நோக்கிலும் செயல்பட வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் பெரியகருப்பன் தெரிவித்தார்.

கூட்டுறவு வார விழா கருப்பொருளின் அடிப்படையில் ஒவ்வொரு நாளும் மாணவ, மாணவியர்களின் கலைநிகழ்ச்சிகள், கூட்டுறவு சங்கங்களின் திட்டங்களை விளக்கும் சிறப்பு முகாம்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் எளிதில் கடன் பெறுவதற்கு ஏதுவாக சிறப்பு முகாம்கள், கூட்டுறவு வங்கிகளில் வங்கி கணக்குகள் துவங்குவதற்கான சிறப்பு முகாம்கள், ரத்த தான முகாம், கால்நடை மருத்துவ முகாம், கட்டுரை மற்றும் பேச்சு போட்டிகள், கூட்டுறவு தயாரிப்புகளின் கண்காட்சி மற்றும் விற்பனை போன்ற பல்வேறு நிகழ்வுகள் நடை பெறும்.

இந்நிகழ்ச்சியில் சிவகங்கை கலெக்டர் பொற்கொடி கலந்து கொண்டார்.

மேலும் கூட்டுறவு உயர் அலுவலர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



# நலம் தரும் மருத்துவம்

## பண்ணைக்கீரையின் மருத்துவ குணங்கள்



கீரைகள் நமது ஆரோக்கியத்தை மேம்படுத்தும் ஒரு அற்புத மூலிகை ஆகும். இவற்றில் பல வகைகள் இருந்தாலும் நடைமுறையில் ஒரு சில கீரை வகைகளே அனைவராலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் பலராலும் அறியப்படாத கீரை வகைகளில் ஒன்று பண்ணைக் கீரை. பண்ணைக்கீரையின் அறிவியல் பெயர் செலோசியா அர்ஜென்டியா ஆகும். இது அமராந்திசியே எனும் தாவரக்குடும்பத்தைச் சார்ந்தது, இக்கீரை இந்தியா, இலங்கை, சீனா மற்றும் ஆப்பிரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் காணப்படுகிறது. இருப்பினும் தமிழகத்தில் வயல்வெளிகளில் சாதாரணமாக வளர்ந்து காணப்படுகின்றது.

பண்ணைக்கீரையில் சிறுபண்ணை, நறும் பண்ணை, புறப்பண்ணை, புனல் பண்ணை எனப் பல வகைகள் உண்டு. அதில் ஒன்றுதான் கோழிக்கொண்டை ஆகும். பண்ணைக் கீரைக்கு மயிலிகீரை, மகிலிக்கீரை, மௌலிக்கீரை, மசிலிக் கீரை எனப் பல பெயர்கள் உண்டு. இக்கீரையில் பல்வேறு நன்மையளிக்கும் வேதிப் பொருட்களும், ஊட்டச்சத்துகளும் நிறைந்துள்ளதால் இதனை நமது முன்னோர்கள் மூலிகைக் கீரையாக பயன்படுத்தி வந்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பண்ணைக்கீரையின் பூக்கள் வெள்ளை மற்றும் இளம் சிவப்பு கலந்த நிறத்திலும் காணப்படும்.

பண்ணைக் கீரையின் ஊட்டச்சத்துகள்

தாதுக்கள் - இரும்பு, கால்சியம், பாஸ்பரஸ், மெக்னீசியம் உள்ளிட்ட பல்வேறு நன்மை தரும் தாதுக்கள் பண்ணைக் கீரையில் உள்ளன. வைட்டமின்கள் - வைட்டமின்கள் ஏ, பி மற்றும் சி ஆகியவை பண்ணைக் கீரையில் நிறைந்து உள்ளன. பண்ணைக்கீரையில் உள்ளடங்கிய தாவர மூலக்கூறுகள்:

பிளேவோனாய்டுகள்: கேம்ப்பெரால், குயிர்சிடின் போன்ற சக்தி வாய்ந்த ஆன்டி ஆக்ஸிடென்டுகள் உள்ளன.பீட்டா சயனின் மற்றும் பீட்டாசாந்தைன் உள்ளன. இது ஆக்ஸிடேட்டிவ் ஸ்டிரஸை குறைத்து கல்லீரல் பாதுகாப்பினை உறுதி செய்ய உதவுகிறது.

ஸ்டிராய்டுகள் உடல் திசுக்களை பாதுகாக்க உதவுகிறது. பீனாலிக் அமிலங்கள் செல்கள் சேதமடைவதை தடுக்க உதவுகிறது.சாப்போனின்கள், கொலஸ்டிரால் அளவினை குறைத்து இதய ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது. அமராந்தைன், ஆக்சாலிக் அமிலம் உள்ளிட்ட பல்வேறு தாவர மூலக்கூறுகள் பண்ணைக் கீரையில் உள்ளன.

### மருத்துவ குணங்கள்

*மூட்டுவலி, இடுப்பு வலி போன்ற பிரச்னைகளுக்கு சிறந்ததாக விளங்குகிறது.

*வயிற்றுக்கோளாறு, குடல்புண், சருமவியாதி போன்றவற்றிற்கு தீர்வளிக்கிறது.

*சிறுநீரகக் கற்களை கரைக்க உதவுகிறது. வயிற்றில் உள்ள புழுக்களை அழிக்க உதவுகிறது.

*ரத்தத்தில் உள்ள சிவப்பணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கிறது. அனிமியாவை தடுக்கிறது.

*தோல் மற்றும் முடி ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவுகிறது. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. உடல் வெப்பத்தை குறைக்கிறது. வலி நிவாரணியாக செயல்படுகிறது. நரம்பு மண்டல செயல்பாட்டினை மேம்படுத்துகிறது.

*பண்ணைக் கீரை கல்லீரல் செயல்பாட்டினை மேம்படுத்தி உடலில் உள்ள நச்சுக்களை வெளியேற்றி கல்லீரலை பாதுகாக்கிறது.

*பெண்களுக்கு ஏற்படும் ஹார்மோன் சமநிலை மாற்றத்தை சரிசெய்ய உதவுகிறது.

*இந்த கீரை உடலில் உள்ள நுண்கிருமிகளை அழிக்கும் தன்மை கொண்டது, மேலும் ரத்தத்தை உறைய வைக்கும் தன்மையும் கொண்டது. *புற்று செல்களின் வளர்ச்சியை தடுத்து புற்றுநோயைக் குணப்படுத்த உதவுகிறது.

# சிறப்பு தீவிர திருத்த பணிக்கான கணக்கீட்டுப் படிவங்களை நிரப்ப மக்களுக்கு உதவியாக இருக்க வேண்டும்: மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்

**சென்னை, நவ.17:** சென்னை, கொளத்தூர் தொகுதியில் நடைபெற்ற "என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி" என்ற தலைப்பில் நடைபெற்ற வாக்குச்சாவடி பாக முகவர்கள் மற்றும் நிர்வாகிகள் கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு பேசியதாவது:-

எங்கு சென்றாலும் எஸ்.ஐ.ஆர். பற்றித்தான் பேசிக்கொண்டிருக் கிறார்கள். மக்கள் ஒவ்வொருவரும், "நாங்கள் இந்திய குடிமக்கள் தான்" என்று நிரூபிக்க வேண்டிய சூழ்நிலையில், கட்டாயத்தில் இருந்து கொண்டிருக்கிறோம். காரணம், தேர்தல் ஆணையம் அப்படிப்பட்ட ஒரு பெரும் சுமையை நம்மீது சுமத்தியிருக்கிறது. மக்களின் வாக்குரிமையே பறிபோகும் அளவிற்கு ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மத்தியில் ஆட்சி செய்து கொண்டிருக்கும் ஆட்சியாளர்கள் இதை உருவாக்கி இருக்கிறார்கள். வழக்கமாகத் தேர்தலில் கட்சியை வெற்றிபெற வைக்கும் பொறுப்பைத்தான் உங்களிடத்தில் ஒப்படைப்பதுண்டு. ஆனால் இந்த முறை, மக்களுடைய வாக்குரிமையைப் பெற்றுதரும் பெரும் பொறுப்பையும் கூடுதலாக உங்களிடம் ஒப்படைத்திருக்கிறோம்.




மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி மிகப்பெரிய போராட்டங்களை நடத்தித் தன்னுடைய எதிர்ப்பை வெளிப்படுத்தி இருக்கிறார். கேரளாவில் ஆளுங்கட்சி மட்டுமல்லாமல் அங்கு இருக்கும் எதிர்க்கட்சியும் ஒன்றுசேர்ந்து போராட்டம் நடத்தி சட்டமன்றத்தில் தீர்மானம் போட்டு அவர்களும் எதிர்ப்பைவெளிப்படுத்தி இருக்கி றார்கள். ஆனால், தமிழ்நாட்டில் எதிர்க்கட்சியாக இருக்கும் அண்ணா தி.மு.க. அதை ஆதரித்து சுப்ரீம் கோர்ட்டிற்கு செல்லும் வெட்கக் கேடு நாட்டில் நடந்து கொண்டிருக்கிறது. மக்களைச் சந்திக்க அவர்களுக்குத் தெம்பு இல்லை. அதனால்தான் இந்தக் குறுக்கு வழியை அவர்கள் நாடியிருக்கிறார்கள்.

எனவே, இப்படிப்பட்ட நிலையில் உங்களை எல்லாம் நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, தொகுதி முழுவதும் ஒரு பூத் விடாமல் சுற்றிச் சுழல வேண்டும். அந்தக் கணக்கீட்டுப் படிவங்களை நிரப்ப நாமெல்லாம் மக்களுக்கு உதவியாக இருக்க வேண்டும். தேர்தல் ஆணையம் நியமித்திருக்கும் வாக்குச்சாவடி அதிகாரிகளுக்கும், மக்களுக்கும் இடையே நம்முடைய வாக்குச்சாவடி முகவர்கள் தான் துணை நிற்க வேண்டும். உதவி செய்ய வேண்டும். ஆலோசனைகளை வழங்க வேண்டும். அதைப் பூர்த்தி செய்ய அனைத்து வகையிலும் நீங்கள் துணை நிற்க வேண்டும் என்று உங்களையெல்லாம் இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.




## இந்திய ஜவுளி ஏற்றுமதி 10% அதிகரிப்பு

**சென்னை, நவ.17:** உலகளாவிய சவால்கள் மற்றும் முக்கிய சந்தைகளில் வரி சிக்கல்கள் இருந்தநிலையிலும், 111 நாடுகளுக்கான இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதி கடந்த ஏப்ரல்-செப்டம்பர் காலகட்டத்தில் 10 சதவீதம் உயர்ந்துள்ளது.

இது குறித்து மத்திய ஜவுளித்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: 2025 ஏப்ரல்-செப்டம்பர் காலகட்டத்தில், 111 நாடுகளுக்கு நாட்டின் ஜவுளி ஏற்றுமதி 8,489.08 கோடி டாலராக உள்ளது. கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தோடு ஒப்பிடுகையில் இது 10 சதவீதம் அதிகம். அப்போது இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதி 7718.55 கோடி டாலராக இருந்தது.

மதிப்பீட்டு காலகட்டத்தில் ஒட்டுமொத்த ஜவுளி, ஆடைகள் மற்றும் அவை தொடர்பான தயாரிப்புகளின் ஏற்றுமதி 2024-ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 0.1 சதவீதம் உயர்ந்துள்ளது.

கடந்த ஏப்ரல் - செப்டம்பர் காலகட்டத்தில் உயர் வளர்ச்சி கண்ட முக்கிய ஏற்றுமதி சந்தைகள் ஐக்கிய அரபு அமீரகம் (14.5 சதவீதம்), பிரிட்டன் (1.5 சதவீதம்), ஜப்பான் (19 சதவீதம்), ஜெர்மனி (2.9 சதவீதம்), ஸ்பெயின் (9 சதவீதம்), பிரான்ஸ் (9.2 சதவீதம்) ஆகியவை ஆகும். எகிப்து (27 சதவீதம்), சவுதி அரேபியா (12.5 சதவீதம்), ஹாங்காங் (69 சதவீதம்) ஆகிய பிற சந்தைகளிலும் மதிப்பீட்டுக் காலாண்டில் ஜவுளி ஏற்றுமதி அதிக வளர்ச்சி கண்டுள்ளது. மதிப்பீட்டுக் காலகட்டத்தில் ஜவுளி ஏற்றுமதியின் வளர்ச்சிக்கு ஆயத்த ஆடைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அந்த காலகட்டத்தின் ஆயத்த ஆடைகள் ஏற்றுமதி வளர்ச்சி 3.42 சதவீதமாகவும், சணல் ஏற்றுமதி வளர்ச்சி 5.56 சதவீதமாகவும் உள்ளன. இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதி புதிய சந்தைகளுக்கு பரவுவது, அரசின் தன்னிறைவு இந்தியா, இந்தியாவில் தயாரிப்போம் திட்டங்களை வலுப்படுத்துகிறது .

# 'நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தால் புற்றுநோய் ஆபத்திலிருந்து தப்பினேன்'

**ஈரோடு, நவ.17:** சக்திவேல்- நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தால், புற்றுநோய் அபாயத்திலிருந்து விவசாய தொழிலாளி விடுபட்டார்.

ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டம், ஊஞ்சலூர் அருகே உள்ள பகுதியைச் சேர்ந்த சண்முகவள்ளி. விவசாயத் தொழிலாளி யான இவர், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட பயனாளி ஆவார். அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் தலைமையில் விவசாயிகளை ஒருங்கி ணைத்து, அவர்களின் உரிமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி, பல்வேறு போராட் டங்களை நடத்தும் களப்பணியாளரும் ஆவார். இந்நிலையில், சிவகிரியில் நடை பெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் முகாமில் பங்கேற்க இவருக்கு




அழைப்பு வந்துள் ளது. உடன் பணியாற்றும் தொழிலாளர்களு டன், இவரும் பங்கேற்றார்.

அனைத்து பிரிவு மருத்துவர்களும் முகாமில் பங்கேற்றிருந்த னர். சாதாரண பரிசோதனைகள் முதல் சிறப்பு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட் டன.

முடிவில் பாதிக்கப்பட்ட வர்களுக்கு தேவையான ஆலோசனைகள், மருந்துகள் உள் ளிட்டவை அளிக்கப்பட்டன. மேற்சிகிச்சை தேவைப்படுவோருக்கு உரிய பரிந்துரைகள் செய்து தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. பெண்களுக்கு தனியான மருத்துவர் கள் பணியமர்த்தப்பட்டு முகாம் நடைபெற்று வந்தது. ரத்தம் உள்ளிட்ட பரிசோதனைக ளின் முடிவில் சண்முகவள்ளிக்கு, கர்ப் பப்பை வாய் தொற்று இருப்பது கண்டறிய ப்பட்டது.

அப்போது பரிசோதனை செய்த மருத்துவர்கள், 'திடீர் என தலைவலி, மயக் கம் வந்திருக்குமே. தாங்க முடியாத அள விற்கு வந்திருக்குமே' என்று கேட்டதற்கு ஆம் என்று கூறியுள்ளார். இதனையடுத்து உரிய பரிந்துரைகளுடன் மேல்சிகிச்சைக்கு அனுப்பப்பட்டார்.

தொடர்ந்து மருத்துவர் கள் அறிவுறுத்தலின் படி சிகிச்சை மேற் கொண்டு வருகிறார். இந்நிலையில் அவரி டம் விசாரித்த போது, நடந்த விபரங்களை பகிர்ந்து கொண்டார். இதன் அடுத்த கட் டம் அதாவது கருப்பை தொற்றின் அடுத்த கட்டம் புற்றுநோயாகும் என்பது மருத்துவர் கள் கூறினர்.

இதன் அபாயம் சாதாரண விவ சாயத் தொழிலாளர்களுக்கு தெரிவதில்லை. தங்கள் உடல் நலன் குறித்த விழிப்புணர்வு பெரிதாக கிராமப்புற மக்களுக்கு இல்லை. இந்நிலையில் நலன் காக்கும் ஸ்டாலின் முகாம் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு நடை முறைப்படுத்தியுள்ளது சிறப்பானது. இதன் மூலம் புற்றுநோய் ஆபத்திலிருந்து தப்பி னேன், என்றார்.

# குழந்தைகள் பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி: திருப்பத்தூர் கலெக்டர் துவக்கி வைத்தார்

**திருப்பத்தூர், நவ.17:** தேசிய குழந்தைகள் தினத்தை முன்னிட்டு, குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் குற்றங்கள் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக விழிப்புணர்வு பேரணியை மாவட்ட கலெக்டர் சிவசௌந்திரவல்லி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வி.சியாமளா தேவி ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர்.

குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை, திருப்பத்தூர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பில் தேசிய குழந்தைகள் தினம் (14ம் தேதி), சர்வதேச குழந்தைகளுக்கு எதிரான சீண்டல்கள் தினம் மற்றும் சர்வதேச குழந்தைகள் தினம் (நவம்பர் 19ம்தேதி), முன்னிட்டு குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் குற்றங்கள் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது, இந்த விழிப்புணர்வு பேரணி மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் துவங்கி,

நகரின் முக்கிய சாலைகள் வழியாக தூய நெஞ்ச கல்லூரி வரை சென்று மீண்டும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நிறைவடைந்தது.

இப்பேரணியில் கல்லூரி மாணவ, மாணவியர்கள், தன்னார்வலர்கள் உட்பட 150-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த விழிப்புணர்வு பேரணியில் குழந்தை திருமணம் தடுத்தல், குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்பு, பாலியல் வண்கொடுமைகளில் இருந்து குழந்தைகளை பாதுகாத்தல், குழந்தைகள் இடைநிற்றலை தடுத்தல், குழந்தைகள் உதவி எண்.1098 ஆகியன குறித்து விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தியபடி கல்லூரி மாணவ, மாணவியர்கள், தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர். மேலும் கலைநிகழ்ச்சிகள் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.நாராயணன், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் ஜெயகமல், குழந்தைகள் நல குழு தலைவர், உறுப்பினர்கள், இளஞ்சிறார் நீதி குழும உறுப்பினர்கள் மற்றும் பலர் கலந்துக்கொண்டனர்.

## முருங்கைக்காய் விலை உயர்வு

**பொள்ளாச்சி, நவ.17** பொள்ளாச்சி சுற்றுவட் டார பகுதிகளில் விவசாயி கள் அதிக அளவில் முருங் கைக்காய் பயிரிட்டு வருகின் றனர். தற்போது முருங்கைக் காய் விளைச்சல் குறைந்த தால் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. தமிழகத்தில் அனைத்து வகை மண்ணிலும் வளரக் கூடியது முருங்கை. வறட்சி யைத் தாங்கி வளரும் முருங்கை மரத்தில் குறைந்த நீரில் அதிக மகசூல் எடுக்க முடியும். பெரும்பான்மை யான விவசாயிகள் முருங் கைக்காய் விளைவித்து சந் தையில் விற்று லாபம் ஈட்டி வருகின்றனர். தற்போது பொள்ளாச்சி பகுதியில் அடிக்கடி மழை செய்து வரு வதால், முருங்கை மரங்களி லுள்ள பூக்கள் பாதிக்கப் பட்டு உதிர்ந்து விடுகிறது. இதனால் விளைச்சல் குறைந்து தற்போது கிலோ ரூ.100 வரை முருங்கைக் காய் விலை உயர்ந்து விட் டது. சராசரியாக ரூ.30 முதல் 40 ரூபாய் வரை விற்பனையா கும் முருங்கைக்காய், விளைச்சல் குறைந்துள்ள தால் தற்போது 100 ரூபாய் அளவுக்கு விலை உயர்ந் துள்ளது.

## சுவர் இடிந்து விழுந்து 3 பெண்கள் படுகாயம்

**உதகை, நவ.17:** கூடலூர் அருகே அரசு தோட்டக்கலைத்துறை பண்ணை செயல்பட்டுவருகிறது. இந்த பண்ணையில் தொழிலாளர்கள் வியாழனன்று வழக்கம் போல பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது பண்ணையில் பயன்பாட்டில் இல்லாத பழைய கட்டிடத்தின் பின்புறம் உள்ள களைச் செடிகளை வெட்டும் பணி ஈடுபட்டிருந்தனர். திடீரென கட்டிடத்தின் சுவர் இடிந்து பணியில் ஈடுபட்டிருந்த பெண்கள் மீது விழுந் துள்ளது. இதில் பணியில் ஈடுபட்டிருந்த மலர்விழி, காஞ்சனா, சந்திரமதி ஆகியோ ருக்கு படுகாயம் ஏற்பட்டது.

## டிஎன்பிஎஸ்சி இலவச பயிற்சி வகுப்பு

**திருப்பூர், நவ.17:** தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் அறிக்கை யின்படி, தொழிலாளர் உதவி ஆய்வாளர், இளநிலை வேலை வாய்ப்பு அலுவலர், நன்னடத்தை அலுவலர், சார் பதிவாளர் நிலை II போன்ற தொகுதி II பணிகளுக்கும் முதுநிலை ஆய் வாளர், உதவி ஆய்வாளர், தணிக்கை ஆய்வாளர், உதவியா ளர் போன்ற தொகுதி II எ பணிகளுக்கும் என மொத்தம் 645 காலிப்பணியிடங்களுக்கு கடந்த செப்டம்பர் 28 அன்று முதல் நிலைத் தேர்வு நடைபெற்றது. இதைதொடர்ந்து முதன்மைத் தேர்வு விரைவில் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள் ளது. திருப்பூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையத்தின் தன்னார்வ பயிலும் வட்டத்தில் டிஎன்பிஎஸ்சி தொகுதி II மற்றும் IIஎ முதன்மை தேர்வுக்கான வகுப்புகள் நவ.17 காலை 10 மணிக்கு அறை எண். 439-ல் தொடங்கப்படவுள்ளது.

மேலும், இப்பயிற்சியில் மாதம் இரு முறை மாதிரித் தேர்வுகள் நடத்தப்பட உள்ளன. இத்தேர்வுக் கான இலவசப் பயிற்சியில் கலந்து கொள்ள தங்கள் பெயரை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நேரிலோ அல்லது 0421- 2999152, 9499055944 என்ற எண்ணிலோ தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளலாம். மாவட்ட ஆட்சியர் மனிஷ்நாரண வரே, தெரிவித்துள்ளார்.

# ஐப்பசி கடைமுழுக்கையொட்டி மயிலாடுதுறை துலாகட்டத்தில் துலாஸ்நானம் தீர்த்தவாரி: பக்தர்கள் புனித நீராடினர்!

மயிலாடுதுறை: ஐப்பசி கடைமுழுக்கையொட்டி மயிலாடுதுறை துலாகட்டத்தில் துலாஸ்நானம் தீர்த்தவாரி நேற்று நடந்தது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் புனித நீராடினர். ஐப்பசி மாதத்தில் ஏழு புண்ணிய தீர்த்தங்களில் ஒன்றான காவிரியில் நீராடுவது கங்கையில் நீராடுவதற்கு சமமென்று புராணங்களில் கூறப்படுகிறது. குடகிலிருந்து புறப்பட்டு பூம்புகாரில் கடலோடு கலக்கும் வரை இப்புண்ணியநதிக்கரையில் 3 இடங்கள் மிக விஷேசமான தீர்த்த கட்டங்கள் ஆகும். இதில் முதலாவது திருப்பராய்த்துறை, 2 வது கும்பகோணம், 3 வது மயிலாடுதுறை. ஐப்பசி முதல் நாளன்று திருப்பராய்த்துறையிலும், கடைசி நாளில் மயிலாடுதுறை துலாகட்டத்திலும் நீராடி அத்தலங்களில் உள்ள சிவமூர்த்திகளை வழிபடுவோருக்கு துன்பம் நீங்கி இன்பம் பெருகும் என்பது ஐதீகம்.

அக்டோபர் 18ம் தேதி துலா மாத பிறப்பையொட்டி திருப்பராய்த்துறை துலாகட்டத்தில் புனித நீராடல் நடந்தது. அதனை தொடர்ந்து ஐப்பசி மாதம் முழுவதும் காவிரியில் புனித நீராடினால் இந்த பலன் கிடைக்கும் என்பதால் திருப்பராய்த்துறை, திருச்சி ஸ்ரீரங்கம் அம்மா மண்டபம் உள்பட காவிரி கரைகளில் பொதுமக்கள் அதிகாலை நீராடி வருகின்றனர். இந்நிலையில் ஐப்பசி கடைசி நாளில் மயிலாடுதுறை துலாகட்டத்திலும் நீராடி அத்தலங்களில் உள்ள சிவமூர்த்திகளை வழிபடுவோருக்கு துன்பம் நீங்கி இன்பம் பெருகும் என்பது ஐதீகம்.





மயிலாடுதுறையில் மாயூரநாதசுவாமி கோயில் உள்ளது. அங்கே சிவலிங்கத்தில் இறைவன் எழுந்தருளி அருள்பாலித்து வருகிறார். அன்னையானவள் மயில் உருகொண்டு சிவலிங்கத்தைப் பூஜித்த பெருஞ்சிறப்பு உடையது. பெரியகோயிலின் வடபுறத்தில் உள்ள துலாக்கட்டக் காவிரியில் கங்கை உட்பட அனைத்து புண்ணிய நதிகளும் இங்குவந்து பாவங்களை போக்கிக்கொண்டதால் இங்கே புனித நீராடுவது இந்தியாவில் உள்ள ஏழு புண்ணியநதிகளிலும் நீராடிய பலன் கிடைப்பதாக ஐதீகம். அதன்படி ஐப்பசி கடை முழுக்கையொட்டி நேற்று காலை 5 மணி முதலே பக்தர்கள் காவிரி துலாக்கட்டத்தில் குவிந்து புனித நீராடினர்.

மயிலாடுதுறை சிவாலயங்களில் ஐப்பசி மாதம் கடைசி பத்து நாட்கள் விழா நடைபெறும். கடந்த 3ம் தேதி அமாவாசை தீர்த்தவாரி விழா நடந்தது. தொடர்ந்து கடந்த 6ம் தேதி கொடியேற்றத்துடன் விழா துவங்கிய உற்சவம் திருக்கல்யாணம், தேர், தீர்த்தவாரி நிகழ்ச்சிகள் நிறைவுற்ற நிலையில், விழாவின் முக்கிய நிகழ்ச்சியான காவிரி தீர்த்தவாரி நேற்று மதியம் நடந்தது.

அப்போது திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமான அபயாம்பிகை சமேத மாயூரநாதர், அறம்வளர்த்தநாயகி சமேத அய்யாரப்பர், தருமபுரம் ஆதீனத்துக்குச் சொந்தமான தெப்பக்குளம் விசாலாட்சி சமேத காசி விஸ்வநாதர், படித்துறை விசாலாட்சி சமேத காசி விஸ்வநாதர் ஆகிய கோயில்களிலிருந்து சுவாமி, அம்பாள் உள்ளிட்ட பஞ்ச மூர்த்திகள் புறப்பாடு செய்யப்பட்டு துலாக்கட்ட காவிரி தென் கரையிலும், தருமபுரம் ஆதீனத்துக்குச் சொந்தமான ஞானாம்பிகை சமேத வதான்யேஸ்வரர், காசி விசாலாட்சி சமேத காசி விஸ்வநாதர் ஆகிய கோயில்களிலிருந்து சுவாமி, அம்பாள் உள்ளிட்ட பஞ்ச மூர்த்திகள் புறப்பாடு செய்யப்பட்டு காவிரி வடக்கு கரையிலும் எழுந்தருளினர். தொடர்ந்து அஸ்திரதேவருக்கு சிறப்பு அபிஷேக, ஆராதனைகள் செய்யப்பட்டு தீர்த்தவாரி நடந்தது.

கார்த்திகை 1ம் தேதியான இன்று முடவன் முழுக்கு விழா நடைபெறுகிறது.

# காலம் மாறிப்போச்சு



" காலம் ரொம்பத் தான் மாறிப்போச்சு என்று மனம் வெம்பி புலம்பியபடியே வந்து வாசலில் அமர்ந்தார் நாடக நடிகர் நந்தகுமார் .

இன்னிக்கும் அதே புலம்பல் தானா தினமும் இதை கேட்டு கேட்டு காதே புளிச்சு போச்சு என்று சிடுசிடுத்த வண்ணம் பேசிக் கொண்டே வாசல் பகுதிக்கு வந்தாள் நந்தகுமார் மனைவி நளினி .

நாடகம்ன்னா என்னன்னு நினைச்சே மனம் உடல் உணர்வு குரல் எல்லாம் அச்சு அசலா சேர்ந்து ஒண்ணா மேடையில நடிப்புல வெளிப்படனும் . இடை இடையில் மக்கள் தேவையை சுயமா நாமே எடுத்து விடனும் , கூட்டத்தை களைய விடாம நம்ம பக்கம் திருப்பி கட்டுக்குள்ள வெச்சிருக்கனும் என்றார் உணர்ச்சி பொங்க நந்தகுமார்.

வயித்துக்கும் வாய்க்கும் எதுவும் இல்லைன்னாலும் பேச்சுக்கு இந்த கம்பீரத்துக்கு குறைச்சல் ஏது என்று மீண்டும் கோபத்தை ஆதங்கத்தை கொட்டித் தீர்த்தாள் நளினி . எத்தனை வசனம் கதாபாத்திரம் எடுப்பு கொடுத்த உடம்பு மனது இது தெரியுமா என்று கர்ஜித்தார் நந்தகுமார் .

இதற்கு மேல் வாயை திறந்தால் இங்கே நடக்கிறதே வேற வேலை வெட்டிக்கு போய் ஏதாவது நாலு காசு கொண்டு வராம இன்னும் பழைய பஞ்சாங்கமா பழைய பாட்டு பாடினா எப்படி எடுபடும் என்று பொரிந்து தள்ளினாள் நளினி .

" உண்மையான நடிப்பு பேச்சு இதையெல்லாம் யாரு இப்ப பார்க்கறாங்க கேட்கறாங்க நாடிகம் தெருக்கூத்து எல்லாம் மாறிப்போச்சு , சினிமா சீரியல் ,டுப் , இதுக்கு தான் காலம் என்ற கண்ணீர் சிந்தியபடியே கடந்த காலம் பொற்காலம் திரும்பி வராது என்று புலம்பினார் நந்தகுமார் .

வாசலில் பந்தல், கட்டிட வேலைக்கு வர்றியா என்று கேட்ட கான்ட்ராக்டர் ஆறுமுகம் அழைப்பு தேனாய் இனித்தது நாலு நாளா பட்டினி பசி என்று இருக்கும் தன் குடும்பம் பற்றி யோசித்த நந்தகுமார் உடன் புறப்பட்டார் .

காயமே அது பொய்யடா அது காற்று அடைத்த வெறும் பையடா என்ற வசனம் பலமாய் ஒலித்தது நந்தகுமார் காதில் ......"

- சீர்காழி.
ஆர். சீதாராமன்.

# அன்பின் ஆழம்



தீபக் ஒரு தனியார் பள்ளியில் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தான். அவனது எளிமையும், மாணவர்களிடம் காட்டும் அன்பும், பாடத்தை எளிமையாகப் புரியவைக்கும் திறமையும் அனைவராலும் பாராட்டப்பட்டது. தீபக் குறைந்த வருமானம் பெறும் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவன்.
ஒருநாள் கல்லூரியில் தன்னுடன் படித்த கயலை சந்திக்கிறான். அப்போது அவளிடம் நட்பு ஏற்பட்டது. கயல் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவள். ஆனால் தீபக்கின் அறிவு, நேர்மை, மாணவர்களிடம் காட்டும் பாசம் ஆகியவை கயலைக் கவர்ந்தன.
அவர்களின் நட்பு நாளடைவில் காதலாக மாறியது.
இருவரும் ஒருவருக்கொருவர் அன்பைப் பரிமாறிக்கொண்டனர்.
ஒருநாள் இந்த விஷயம் கயலின் வீட்டிற்குத் தெரியவந்தது. தீபக் ஒரு சாதாரண பள்ளி ஆசிரியர், அவனது வருமானம் கயலின் குடும்ப எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றதாக இல்லை என்பதால், கயலின் பெற்றோர் தீபக்கை மருமகனாக ஏற்றுக்கொள்ள மறுத்தனர்.
கயலின் பெற்றோர் அவளைத் தீபக்கிலிருந்து பிரிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். கயல், தீபக்கிற்காகத் தன் குடும்பத்தினருடன் போராடினாள்.
ஒருநாள், கயல் தன் வீட்டில் இருந்து தீபக்கிற்கு ஒரு குறுஞ்செய்தி. அதில், "என் குடும்பத்தினரின் மனதை மாற்ற எனக்குக் கொஞ்சம் அவகாசம் வேண்டும். என் அப்பா, சமூகத்தில் நல்ல பெயர், கௌரவம் உள்ள ஒருவரைத்தான் மருமகனாகப் பார்க்க விரும்புகிறார். நீங்கள் உங்கள் ஆசிரியப் பணியின் மூலம் சமூகத்தில் ஒரு மாற்றத்தைக் காட்டுங்கள். இரண்டு வருடங்கள் காத்திருப்போம். அதற்குள் நீ அதை நிரூபிக்க வேண்டும்," என்று குறிப்பிட்டாள்.
தீபக் கயலின் சவாலை ஏற்றுக்கொண்டான். அவன் வெறும் பாடங்களை நடத்துவதோடு நின்றுவிடவில்லை. தன் மாணவர்களின் வாழ்க்கையை மேம்படுத்த வேண்டும் என்பதில் தீவிரம் காட்டினான். அவன் விடுமுறை நாட்களில் வசதி குறைந்த மாணவர்களுக்கு இலவசமாக சிறப்பு வகுப்புகள் எடுத்தான். ஆங்கிலத்தில் பின்தங்கிய பல மாணவர்களை, அவனது சிறப்புப் பயிற்சி மூலம் அரசுத் தேர்வுகளில் வெற்றிபெறச் செய்தான். தீபக், தன் பள்ளியில் புதிய கற்பித்தல் முறைகள் கொண்டு வந்து, பள்ளியின் தரத்தை உயர்த்தினான்.
தீபத் அரசு வேலைக்கு விண்ணப்பித்து.
இரண்டு ஆண்டுகள் கடந்தன. ஒரு நாள் கயல் ஒருவருடன் காரில் செல்வதை கண்டான். தீபக்கிற்கு பெரும் அதிர்ச்சி, கயல் வேறு ஒருவரைத் திருமணம் செய்துவிட்டாரோ என்ற சந்தேகமும் ஏற்பட்டது. 'அவள் என் காதலை மறந்துவிட்டாளா?' என்று அவன் இதயம் உடைந்தது.
காரின் கண்ணாடி வழியே தீபக்கை கண்ட கயல், காரை நிறுத்துங்கள் என்று கத்தினாள். காரும் நின்றது காரை விட்டு இறங்கி கண்ணீருடன் தீபக்கை கட்டியணைத்தாள். உண்மையைத் தெரிந்துகொண்ட தீபக் மேலும் உத்வேகம் அடைந்தான்.
தீபக் மேலும் சிறப்புப் பயிற்சிகள் பெற்றான், பெரும் போராட்டத்திற்கு நடுவே அரசு பள்ளியில் முதுகலை ஆசிரியரானான்.
கயலின் அப்பாவிடம் வந்து பெருமையாக. "ஒரு நல்ல ஆசிரியர் பணம் சம்பாதிக்காவிட்டாலும், சமூகத்தில் மதிக்கத்தக்க ஒரு கௌரவத்தைப் பெற முடியும். என்று கயலின் அப்பாவிற்கு புரிய வைத்தான்.
கடைசியில், கயலின் குடும்பத்தார் பணத்தையும் வசதியையும் மட்டுமே பார்க்காமல், தீபக்கின் சமூகப் பணி, அவனது மதிப்புமிக்க ஆசிரியர் பணி, மற்றும் கயல் மீதான உண்மையான காதலின் ஆழத்தைப் புரிந்துகொண்டனர்.
தீபக் பணக்காரன் ஆகவில்லை, ஆனால் தகுதியானவனாகவும், சமூகத்தால் மதிக்கப்படும் ஒரு சிறந்த ஆசிரியராகவும் மாறினான்.




-டாக்டர் ப.பாண்டியராஜன்
மதுராந்தகம்

# திருவிளையாடல் புராணம் 9



சிவ.முத்து லட்சுமணன்
போச்சம்பள்ளி.

## ஏழுகடல் அழைத்த படலம்





இந்தப் படலத்தில், இறைவி மீனாட்சியின் தாயான காஞ்சனமாலை, கௌதம முனிவர் மூலம் ஆறு மற்றும் கடல் நீராடல் புண்ணியம் என்று அறிந்து, அதை நிறைவேற்ற சிவபெருமானிடம் வேண்டுகிறாள். இறைவனும் அவளது விருப்பத்தை நிறைவேற்றுகிறான். காஞ்சனமாலைக்காக இறைவன் ஏழுகடலையும் மதுரையில் வரவழைத்த திருவிளையாடலைக் கூறும் படலமாகும்.

சுந்தரபாண்டியனார் மதுரையின் அரசுப் பொறுப்பை ஏற்று ஆட்சி செய்து கொண்டிருக்கும் காலத்தில் கௌதம முனிவர் மதுரைக்கு வந்து சுந்தரபாண்டியனாரைச் சந்தித்தார்.

பின் அவர் மீனாட்சியின் தாயான காஞ்சன மாலை தங்கி இருந்த அரண்மனைக்கு வருகை தந்தார். காஞ்சன மாலையும் கௌதம முனிவரை வரவேற்று உபசரித்து அவரை தகுந்த ஆசனத்தில் அமர்த்தினாள்.

காஞ்சன மாலை கௌதம முனிவரிடம் “தவத்தில் சிறந்தவரே, என் மகளான தடாதகைக்கு சிறந்த முறையில் திருமணம் முடிந்து ஆட்சி பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டு விட்டது.

ஆதலால் பிறவா நிலையாகிய வீடுபேற்றினை அடையக் கூடிய வழியினை எனக்கு கூறுங்கள்” என்று கேட்டாள்.

அதற்கு கௌதம முனிவரும் “காஞ்சன மாலையே நீ செய்த தவத்தின் காரணமாக உலகத்தின் அம்மையான மீனாட்சியை மகளாகவும், இறைவனான சிவபெருமானை மருமகனாகவும் பெற்று உள்ளாய்.

உனக்கு வழிகாட்டும் தகுதி எனக்கு இல்லை. இருப்பினும் வீடுபேற்றினை அடையக் கூடிய வழியை நீ கேட்டதால் உனக்கு நான் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

மானதம், வாசிகம், காயகம் என மூன்று வழிகளில் வீடுபேற்றினை அடையலாம். தருமமும், தானமும் செய்தல், பிறஉயிர்களுக்கு இரங்கல், பொறுமை காத்தல், உண்மை கூறல், ஐம்பொறிகளையும் அடக்கி ஆளல், இறைவனை தியானம் செய்தல் ஆகியவைகளான மானதம் என்னும் முதல்வழி ஆகும்.

நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தை கூறுதல், இறைவனின் துதிப்பாடல்களைப் பாடுதல், வேதநூல்களைப் படித்தல், யாகங்கள் செய்தல், திருக்கோவிலை வலம் வருதல் ஆகியவைகளான வாசிகம் என்னும் இரண்டாவதுவழி ஆகும்.

சிவபெருமானின் ஆலயங்களுக்கு சென்று வணங்குதல், ஆலயத்திருப்பணி செய்தல், தலயாத்திரை செல்லல், தீர்த்தங்களில் நீராடுவது ஆகியவைகள் காயகம் என்னும் மூன்றாவது வகையாகும். தீர்த்தங்களில் நீராடுவது என்பதில் கடலில் நீராடுவது மிகவும் நல்லது” என்று கூறிச் சென்றார்.

கௌதம முனிவரின் வழிகாட்டுதலை ஏற்றுக் கொண்ட காஞ்சன மாலை கடலில் நீராட விருப்பம் கொண்டாள். ஆதலால் தன்னுடைய விருப்பத்தை தன் மகளான மீனாட்சியிடம் கூறினாள்.

மீனாட்சியும் சுந்தரபாண்டியனாரிடம் சென்று “கௌதம முனிவரின் வழிகாட்டுதலின்படி பிறவா நிலையாகிய வீடுபேற்றினை அடைய என் தாயான காஞ்சன மாலை கடலில் சென்று நீராட விரும்புகிறாள். ஆனால் மதுரையிலோ கடல் இல்லை. இதற்கு தாங்கள்தான் வழிகாட்ட வேண்டும்” என்று கோரிக்கை விடுத்தாள்.

மீனாட்சியின் கோரிக்கையை கேட்ட சுந்தரபாண்டியனார் “மீனாட்சி நீ கவலை கொள்ள வேண்டாம். உன் தாயாரின் விருப்பத்தை நிறைவேற்ற ஏழுகடல்களையும் மதுரையில் எழுந்தருளச் செய்கிறேன்” என்று கூறி ஏழுகடல்களையும் மதுரையில் எழுந்தருளச் செய்தார்.

ஏழுகடல்களும் இறைவனின் ஆணைப்படி ஆர்ப்பாரித்து மதுரையின் எழுந்தருளின. ஏழுகடல்களும் மக்களின் கண்களுக்கு தெரியவில்லை. ஆனால் கடலின் பேரிரைச்சலினை மட்டும் மக்கள் கேட்டனர்.

கண்ணுக்குத் தெரியாத கடல்களின் பேரிரைச்சல் கேட்ட மதுரை நகர மக்கள் நடுக்கி சுந்தரபாண்டியனாரிடம் சென்று அச்செய்தியைத் தெரிவித்தனர்.

சுந்தர பாண்டியனாரும் ஏழுகடல்களையும் மதுரையில் மீனாட்சி கோவின் கீழ்புறத்தில் உள்ள ஒரு கிணற்றுக்குள் செல்ல ஆணையிட்டார்.

ஏழுகடல்களும் கிணற்றினுள் எழுந்தருளின. பின்னர் மக்கள் கடலின் பேரிரைச்சலைக் கேட்கவில்லை. மதுரையில் ஏழுகடல்களும் எழுந்தருளியதன் விளைவாக மீனாட்சிஅம்மன் கோவில் கிழக்குகோபுரத்திற்கு எதிரே உள்ள புதுமண்டபத்தை கடந்தால் வரும்தெருவானது எழுகடல் தெரு என்று இன்றும் அழைக்கப்படுகிறது.

கடலில் நீராடுவது உடலுக்கும் உள்ளத்திற்கும் உறுதியைத் தருவதோடு வீடுபேற்றினையும் அளிக்கும் என்பதே ஏழுகடல் அழைத்த படலத்தின் கருத்தாகும்!

(தொடரும்)

# ஆதாரம் புன்னகை



இயற்கையில் இருந்து கற்றுக் கொள்ள நிறையவே உண்டு.*_

குதிரைகள் குடிக்கும் நீர் நிலைகளில் இருந்து நீரருந்தவும். குதிரை ஒருபோதும் கெட்ட தண்ணீரை குடிக்காது.

பூனை தூங்கும் இடத்தில் உங்கள் படுக்கையை இடுங்கள். அமைதி தராத இடத்தில் பூனை உறங்காது.

புழு துளைத்த கனிகளை உண்ணுங்கள். நச்சுக் கனிகளை புழு துளைக்காது.

பூச்சிகள் உட்கார்ந்திருக்கும் காளானை தைரியமாக உணவாக எடுத்துக் கொள்ளுங்கள். விஷக் காளான்கள் மீது பூசிகள் உட்காராது.

முயல்கள் குழி பறிக்கும் இடத்தில் மரத்தை நடலாம். மரம் செழிப்பாக வளரும்.

பாம்பு ஓய்வெடுக்கும் இடத்தில் உங்கள் வீட்டைக் கட்டுங்கள். பாம்புகள் குளுமையான இடங்களில் மட்டுமே ஓய்வெடுக்கும்.

பறவைகள் வெப்பத்தை தவிர்க்க ஓய்வெடுக்கும் இடத்தில் உங்களுக்கான நீர் ஊற்றினை தோண்டுங்கள்.

பறவைகள் தூங்கப் போகும் நேரத்தில் தூங்கச் சென்று, அவை விழிக்கும் நேரத்தில் எழுந்திருங்கள்.. நீங்கள் தொட்டதெல்லாம் பொன்னாகும்.

அதிகம் இயற்கையான உணவுகளை உண்ணுங்கள். வலுவான கால்களையும், துணிச்சல் மிக்க இதயத்தையும் பெறுவீர்கள்.

மீன்களை போல அடிக்கடி நீரில் நீந்துங்கள். நீங்கள் பூமியில் நடக்கும் போது கூட மீன்களைப் போலவே உணர்வீர்கள்.

அடிக்கடி வானத்தைப் பாருங்கள். உங்கள் எண்ணங்களில் வெளிச்சமும், தெளிவும் பிறக்கும்.

நிறைய அமைதியாக இருங்கள், கொஞ்சம் பேசுங்கள். _உங்கள் இதயத்தில் மௌனம் குடிகொள்ளும். உங்கள் ஆன்மா எப்போதும் அமைதியாக இருக்கும்...

-எம்.அசோக்ராஜா
அரவக்குறிச்சிப்பட்டி
திருச்சி _620015

தினம் ஒரு தலைவர்கள்

# நாவலர் சோமசுந்தர பாரதியார் வரலாறு

நாவலர் சோமசுந்தர பாரதியார் (ஜூலை 27, 1879 - டிசம்பர் 14, 1959) தமிழறிஞர், கவிஞர், எழுத்தாளர், கட்டுரையாளர் மற்றும் சொற்பொழிவாளர். தமிழிலக்கிய, இலக்கண ஆராய்ச்சியிலும் படைப்பிலக்கியத்திலும் ஈடுபட்டவர். இவரின் வஞ்சி நகரம் பற்றிய ஆராய்ச்சியும், பண்டைத் தமிழகத்தில் தாய்வழி சமூக மரபு பற்றிய ஆராய்ச்சியும் தமிழிலக்கியத்தில் குறிப்பிடத்தகுந்தவை.

## பிறப்பு, கல்வி

நாவலர் சோமசுந்தர பாரதியார் ஜூலை 27, 1879 அன்று எட்டயபுரத்தில் சுப்பிரமணிய நாயகருக்கும் முத்தம்மாளுக்கும் ‘ பிறந்தார். இவருடைய இயற்பெயர் சத்தியானந்த சோமசுந்தரம். சோமசுந்தர பாரதியார் எட்டயபுரம் அரண்மனையில் அரசியாரின் அரவணைப்பில் வளர்ந்தார். இளமையில் பாரதியாருடன் நட்பு கொண்டிருந்தார். தனது தொடக்கக் கல்வியை எட்டயபுரத்திலும் இடைநிலைக் கல்வியை நெல்லையிலும் முடித்ததார்.

எஃப்.ஏ. முடித்ததும் கிறிஸ்தவக் கல்லூரியில் (இன்றைய தாம்பரம் கிறிஸ்தவக் கல்லூரி) பி.ஏ. வரலாறு படித்தார். 1901-1903 வருடங்களில் இக்கல்லூரியில் மறைமலையடிகளும், பரிதிமாற்கலைஞரும் தமிழாசிரியர்களாக இருந்தனர். சென்னை சட்டக் கல்லூரியில் படித்து 1905-ம் ஆண்டில் சட்ட இளவர் பட்டமும் (BACHELOR OF LAW) பெற்றார். தேர்வு எழுதிய உடனேயே வருவாய்த்துறையில் வேலையும் கிடைத்தது. அங்கு ஓர் ஆண்டு வேலை பார்த்து, பின் தூத்துக்குடியில் குடியேறினார். தூத்துக்குடியில் வழக்கறிஞராகத் தொழிலாற்றியபொழுது தானே பயின்று 1913-ம் ஆண்டில் முதுகலைப்பட்டம் பெற்றார்.

## தனிவாழ்க்கை

1894-ல் சோமசுந்தரத்திற்கு 15 வயதில் கடம்பூர் மீனாட்சியுடன் திருமணம் நடந்தது. இவர்களுக்கு இராசராம் பாரதி, இலக்குமிரதன் பாரதி என்னும் மகன்களும் இலக்குமி பாரதி என்னும் மகளும் பிறந்தனர். தனது 48-ம் வயதில் சோமசுந்தர பாரதியார் திருவெட்டாற்றில் டிசம்பர் 1, 1927-ல் வசுமதியை மணந்தார். இவர்களுக்கு மீனாட்சி மற்றும் லலிதா ஆகிய இரு மகள்கள் பிறந்தனர். 1906-1959 ஆண்டுகளில் சோமசுந்தர பாரதியார் முழுநேர வழக்குரைஞராக இருந்தார்.

## இலக்கியவாழ்க்கை

நாவலர் சோமசுந்தர பாரதியார் பத்து நூல்கள் எழுதியுள்ளார். பெரும்பாலும் இலக்கியக் கூட்டங்களிலும் காங்கிரஸ் மேடைகளிலும் பேசுவதிலேயே இவரது நேரம் கழிந்திருக்கிறது. இளமையிலேயே தமிழிலக்கியத்தில் ஈடுபாடுகொண்டிருந்த சோமசுந்தர பாரதியார், பின்னாளில் தமிழிலக்கிய, இலக்கண ஆராய்ச்சியிலும் படைப்பிலக்கியத்திலும் ஈடுபட்டார். தனது ஆராய்ச்சிகளைச் சொற்பொழிவின் வழியாகவும் ஆய்வுநூல்கள் எழுதுவதின் வழியாகவும் வெளியிட்டார். 1932 -1933-ம் ஆண்டுகளில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் செயலாளராக இருந்தார். தமிழிசைத் துறைக்கும் தலைவராக இருந்தார். இக்காலத்தில் பண்டிதமணி கதிரேசன் செட்டியார். ஏ.சி. செட்டியார், வேங்கடசாமி நாட்டார் போன்றோர் இவரின் சக ஆசிரியர்களாய் இருந்தனர். நாவலரின் மாணவர்கட் க. வெள்ளைவாரணர், அ.ச.ஞானசம்பந்தம், அ.மு. பரமசிவானந்தம் போன்றோர்.

## நூல்கள்

சோமசுந்தர பாரதியார் சங்ககால வஞ்சி நகரம் பற்றி எழுதிய நூலும், ’சேரர் தாய் முறை’ என்ற நூலும் நாவலரின் ஆராய்ச்சி நெறிமுறைக்குச் சான்றாக இருப்பன. வஞ்சி நகரம் பற்றிய நூல் ’SOME STUDIES ABOUT THE CHERA OF YORE’ என்னும் தலைப்பில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது சேரர் தாய்முறை என்ற நூல் பண்டைத் தமிழகத்தில் தாய்வழி சமூக மரபு இருந்திருக்கிறது என்று நிறுவுகிறது. இந்த நூல் பதிற்றுப்பத்தின் வழி பண்டைய உறவுமுறைகளையும், வம்சாவழியையும் ஆராய்கிறது. இதுவும் ’SYSTEM OF SUCCESSION IN CHERA KINGDOM’ என்ற தலைப்பில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

## கவிதைகள்

நாவலர் எழுதிய ’மாரிவாயில்’, ’மங்கலக் குறிச்சியில் பொங்கல் விழா’ இரண்டும் கவிதை நூல்கள். அர்ஜுனன் பாண்டியன் மகளுக்குத் தூது விடுப்பது போன்ற அமைப்புடைய 122 பாடல்களைக் கொண்ட சிற்றிலக்கியம் ’மாரிவாயில்’. ’மங்கலக்குறிச்சியில் பொங்கல் விழா’ நூல் பொதியமலையில் நிகழ்வதாகப் புனையப்பட்ட காதல் கதை.

## உரைகள்

சோமசுந்தர பாரதியார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதுகலை வகுப்பு மாணவர்களுக்குத் தொல்காப்பியம் பொருளதிகாரத்தைப் பாடம் நடத்தியபோது மாணவர்கள் எழுதிய குறிப்புகளின் அடிப்படையில் எழுதப்பட்ட நூல் ’தொல்காப்பியம், பொருட்படலம் - புதிய உரை’. இது 1942-ல் வெளியானது. தொல்காப்பியத்தின் பொருள் இலக்கணப்பகுதியில் உள்ள அகத்திணை, புறத்திணை, மெய்ப்பாட்டியல் ஆகிய மூன்று இயல்களுக்கும் முழுமையாக உரை



எழுதினார். மீதமுள்ளவற்றுள் களவியல், கற்பியல், செய்யுளியல் ஆகியவற்றில் இன்றியமையாச் சில நூற்பாக்களுக்கு மட்டும் புத்துரை எழுதினார்.

1997-ல் ’நாவலர் ச. சோமசுந்தர பாரதியாரின் நூல் தொகுதி - 2, தொல்காப்பியர் பொருட்படலப் புத்துரை’ என்னும் தலைப்பில் பொ.வெ. சோமசுந்தரனார் தொல்காப்பிய பொருளதிகாரத்திற்கு எழுதிய உரைகள் அனைத்தையும் திரட்டி மதுரை ச. சாம்பசிவனாரை பதிப்பாசிரியராகக் கொண்டு நாவலரின் மகள் மருத்துவர் லலிதா காமேசுவரன் அந்நூலை வெளியிட்டார்.

சிலப்பதிகாரத்தைப் பாடம் நடத்தியபோது மாணவர்கள் எழுதிய குறிப்புகளைக் ’கானல்வரி’ என்னும் தலைப்பில் தெ.பொ.மீனாட்சிசுந்தரம் நூலாக வெளியிட்டார். நச்சினார்க்கினியர், பரிமேலழகர் இருவருமே வடமொழி நூல்களை மேற்கோள் காட்டுபவர்கள். இவர்கள் தங்கள் காலக்கட்டத்தைப் பிரதிபலிப்பவர்கள் அல்லர் என்று கருதினார்.

## கட்டுரைகள்

சோமசுந்தர பாரதியார் பல்வேறு இதழ்களிலும், மலர்களிலும் எழுதிய கட்டுரைகள் ’நற்றமிழ்’, ’பழந்தமிழ் நாடு’ என்னும் தலைப்புகளில் நூல்களாக வந்துள்ளன. தொகுக்கப்படாத கட்டுரைகளும் உள்ளன. இவரது ஆங்கில நூல் ’TAMIL CLASSICS AND TAMILAKAM’. சங்கப்பாடல்களில் குறிக்கப்படும் கரிகாலனும் திருமாவளவனும் வேறானவர்கள். மதுரை கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை சீத்தலைச் சாத்தனாரினின்று வேறானவர், மெய்கண்டாரின் சிவஞானபோதம் மொழி பெயர்ப்பல்ல என்பன போன்ற கருத்துகள் இவரது கட்டுரைகளில் காரசாரமாய் விவாதிக்கப்படுகின்றன.

## சொற்பொழிவாளர்

சோமசுந்தர பாரதியார் ஆகஸ்ட் 16, 1916 அன்று கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் ’தசரதன் குறையும் கைகேயி நிறையும்’ என்னும் தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவு இதே தலைப்பில் பின்னர் நூலாக வெளியிடப்பட்டது.

மதுரைத் தமிழ்ச் சங்கமும் இளம் கிறித்துவ ஆடவர் சங்கமும் (YMCA) மதுரையில் ஜனவரி 26, 1926 அன்று நடத்திய ஆய்வரங்கிலும், மார்ச் 11, 1929-ல் சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற கூட்டத்திலும் சோமசுந்தர பாரதியார் திருவள்ளுவர் பற்றி ஆற்றிய உரைகள் பின்னர் ’திருவள்ளுவர்’ என்னும் நூலாக மதுரைத் தமிழ்ச் சங்கம் வழியாக உ.வே.சா உதவியுடன் வெளிவந்தது.

## திராவிடக் கழகம்

கம்பராமாயணத்தையும் பெரிய புராணத்தையும் எரிக்க வேண்டும் என இயக்கம் நடத்தியது. அதன் ஒருபகுதியாக நடைபெற்ற பட்டிமன்றத்தில் சோமசுந்தர பாரதியார் கலந்துகொண்டு கம்பராமாயணத்தை எரிக்கக் கூடாது என அண்ணாதுரையுடன் வாதிட்டார். அச்சொற்பொழிவு ’தீபரவட்டும்’ என்னும் நூலில் இடம்பெற்றிருக்கிறது.

கரந்தைத் தமிழ்ச்சங்கக் கூட்டம் ஒன்றில் (1916) ’தசரதன் நிறையும் கைகேயியின் குறையும்’ என்னும் தலைப்பில் இவர் பேசினார். இலக்கியக் கதாபாத்திரங்களை முழுமையான விமர்சனத்துக்கு உட்படுத்தும்போது பொதுவான சட்டங்களையும் காலப்பின்னணியையும் துணையாகக்கொள்ள வேண்டும் என்னும் முன்னுரையுடன் தசரதனை விமர்சிக்க ஆரம்பித்த இவரின் வாதம் அப்போதே சிறு பிரசுரமாக வந்தது. 1916 - 1919-ம் ஆண்டுகளில் இதே தலைப்பில் மதுரை, தூத்துக்குடி, திருநெல்வேலி எனப் பல இடங்களில் பேசிய பேச்சு விரிவாக அப்போது நூலாக வந்தது. சோமசுந்தர பாரதியார் முன்வைத்த கருத்துகள் இவருக்கு எதிரான ஒரு கூட்டத்தையும் உருவாக்க காரணமாயிருந்திருக்கின்றன.

# ‘லப்பர் பந்து’ தெலுங்கு ரீமேக் படப்பிடிப்பு தொடக்கம்: நடிகர்கள் விவரம்



’லப்பர் பந்து’ படத்தின் தெலுங்கு ரீமேக் படப்பிடிப்பு தொடங்கப்பட்டுள்ளது. இதன் நடிகர்கள் யாரெல்லாம் நடிக்கிறார்கள் என்பது தெரியவந்துள்ளது.

தமிழில் மாபெரும் வரவேற்பைப் பெற்ற படம் ‘லப்பர் பந்து’. விமர்சன ரீதியாகவும், வசூல் ரீதியாகவும் கொண்டாடப்பட்டது. பல்வேறு திரையுலக பிரபலங்கள் இப்படத்தை பார்த்துவிட்டு படக்குழுவினரை பாராட்டி இருந்தார்கள். இதன் மூலம் இயக்குநராக அறிமுகமானார் தமிழரசன் பச்சமுத்து.

இப்படத்தின் இந்தி ரீமேக்கில் நடிக்க விருப்பம் தெரிவித்திருந்தார் ஷாரூக்கான். தற்போது இதன் தெலுங்கு ரீமேக் படப்பிடிப்பு தொடங்கப்பட்டுள்ளது. முன்னணி இயக்குநர் ஐ.வி சசியின் மகன் அனி ஐ.வி சசி இயக்கி வருகிறார். இப்படம் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு எதுவுமே வெளியிடப்படவில்லை.


இதில் தினேஷ் கதாபாத்திரத்தில் ராஜசேகர், ஸ்வாசிகா கதாபாத்திரத்தில் ரம்யா கிருஷ்ணன், சஞ்சனா கிருஷ்ணமூர்த்தி கதாபாத்திரத்தில் ராஜசேகரின் மகள் ஷிவாத்மிகா ஆகியோர் நடித்து வருகிறார்கள். இதில் ஹரிஷ் கல்யாண் கதாபாத்திரத்தில் யார் நடிக்கவுள்ளார் என்பது இன்னும் முடிவாகவில்லை.



நடிகை ப்ரியாமணி பருத்திவீரன் படத்தின் மூலம் ரசிகர்கள் மத்தியில் பிரபலமானவர். தென்னிந்திய சினிமாவில் மட்டுமின்றி பாலிவுட் திரையுலகிலும் இவருக்கென்று தனி இடம் உள்ளது. இவர் நடிப்பில் அடுத்ததாக தி பேமிலி மேன் சீசன் 3 ரிலீஸ் ஆகிறது. மேலும் தளபதி விஜய்யுடன் ஜனநாயகன் படத்தில் ப்ரியாமணி முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், சேலையில் நடிகை ப்ரியாமணி எடுத்துக்கொண்ட போட்டோஷூட் புகைப்படங்கள் வெளியாகி, இணையத்தில் வைரலாகி வருகிறது.

# “எனக்கு கடவுள் நம்பிக்கை இல்லை” - இயக்குநர் ராஜமவுலி பகிர்வு!



தனக்கு கடவுள் மீது நம்பிக்கை இல்லை என இயக்குநர் ராஜமவுலி தெரிவித்துள்ளார்.

எஸ்.எஸ்.ராஜமவுலி இயக்கத்தில் மகேஷ் பாபு நடிக்கும் படம் ‘வாரணாசி’. இந்தப் படத்துக்காக ‘குளோப் டிரோட்டர்’ என்ற சாகச உலகத்தைப் படக்குழு உருவாக்கியுள்ளது. இதற்கான விழாவை ஹைதராபாத்தில் நேற்று (நவ.15) ஏற்பாடு செய்தது படக்குழு. இந்த நிகழ்வில் படத்தின் தலைப்பையும் அது தொடர்பான அறிமுக டீசரையும் படக்குழு வெளியிட்டது.

இந்த நிகழ்வில் ராஜமவுலி பேசிய விஷயங்கள் சமூக வலைதளங்களில் விவாதத்தை கிளப்பியுள்ளன. அவர் பேசியதாவது: “இது எனக்கு ஒரு உணர்வுபூர்வமான தருணம். எனக்கு கடவுள் மீது நம்பிக்கை இல்லை. என் அப்பா அனுமன் நமக்கு பின்னால் இருந்து அனைத்தையும் கவனித்துக்கொள்வார் என்றார். அவர் இப்படித்தான் கவனித்துக்கொள்கிறாரா - இதை நினைத்து எனக்கு கோபம் வருகிறது. என் மனைவிக்கும் அனுமன் மீது அன்பு உண்டு. அவர் ஒரு நண்பரைப் போல அவருடன் உரையாடுகிறார். எனக்கும் அவர் மீது கோபம் வருகிறது. என் அப்பா அனுமனைப் பற்றிப் பேசி, படத்தின் வெற்றிக்கு அனுமனின் ஆசீர்வாதங்களை நம்பியிருக்கச் சொன்னபோது, எனக்கு மிகவும் கோபம் வந்தது” இவ்வாறு ராஜமவுலி பேசினார்.

‘வாரணாசி’ நிகழ்வின் போது ஏற்பட்ட தொழில்நுட்ப பிரச்சினைகள் குறிப்பிட்டு ராஜமவுலியின் இவ்வாறு பேசியது சமூக வலைதளங்களில் விவாதத்தை கிளப்பியுள்ளது. இது குறித்து பதிவிட்டுள்ள பயனர் ஒருவர், “ராஜமவுலியின் பேச்சு நியாயமில்லை. கடவுள் நம்பிக்கை இல்லை என்று சொல்பவர், தன் படத்துக்கு ’வாரணாசி’ என்று தலைப்பிட்டு புராணக் கதாபாத்திரங்களைப் பயன்படுத்தியது ஏன்? இப்படி ஒரு மதிப்புமிக்க நபரிடமிருந்து இதனை எதிர்பார்க்கவில்லை” என்று தெரிவித்துள்ளார்.

அந்த நிகழ்வில் மேலும் பேசிய ராஜமவுலி, “என் குழந்தைப் பருவத்திலிருந்தே, ராமாயணமும் மகாபாரதமும் எனக்கு எவ்வளவு பிடிக்கும், அவற்றை உருவாக்குவது என் கனவுத் திட்டம் என்பதைப் பற்றி நான் பலமுறை பேசியிருக்கிறேன். ராமாயணத்தின் ஒரு முக்கியமான அத்தியாயத்தை இவ்வளவு சீக்கிரம் படமாக்க முடியும் என்று நான் ஒருபோதும் நினைத்துப் பார்த்ததில்லை. ஒவ்வொரு காட்சியையும் ஒவ்வொரு வசனத்தையும் எழுதும்போது, நான் மிதப்பது போல் உணர்ந்தேன்” என்று தெரிவித்தார்.

# விஜய் சேதுபதி படத்துக்கு இசையமைக்கும் சாய் அபயங்கர்





விஜய் சேதுபதி நடித்து வரும் படத்தின் இசையமைப்பாளராக சாய் அபயங்கர் பணிபுரிந்து வருகிறார்.

பாலாஜி தரணிதரன் இயக்கத்தில் விஜய் சேதுபதி நடித்து வரும் படத்தின் படப்பிடிப்பு சென்னையை சுற்றி நடைபெற்று வருகிறது. இதில் நாயகியாக லிஜோ மோல் ஜோஸ் நடித்து வருகிறார். அட்லி தயாரித்து வரும் இப்படத்தின் இசையமைப்பாளராக சாய் அபயங்கர் பணிபுரிந்து வருவது உறுதியாகி இருக்கிறது. இதனை பேட்டியொன்றில் உறுதிப்படுத்தி இருக்கிறார்.

இது தொடர்பாக சாய் அபயங்கர் அளித்த பேட்டியில், “80-களில் நடக்கும் ‘மார்ஷல்’ கதைக்கு இசையமைத்து வருகிறேன். அதனைத் தொடர்ந்து 60-களில் நடக்கும் கதையொன்றிலும் இசையமைப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். பாலாஜி தரணிதரன் இயக்கத்தில் விஜய் சேதுபதி நடித்து வருகிறார். இப்படத்தின் போது தான் அட்லி அண்ணாவை சந்தித்தேன்” என்று தெரிவித்துள்ளார். இதன் மூலம் விஜய் சேதுபதி படத்துக்கு சாய் அபயங்கர் இசையமைத்து வருவது உறுதியாகி இருக்கிறது.

அட்லி தயாரித்து வரும் இப்படத்தில் விஜய் சேதுபதி, லிஜோ மோல் ஜோஸ் இருவருடன் வேறு யாரெல்லாம் நடித்து வருகிறார்கள் என்ற தகவல் இன்னும் வெளியாகவில்லை. விரைவில் இப்படம் குறித்த அதிகாரபூர்வ தகவல் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.



மலையாள சினிமாவில் வலம் வந்த அஞ்சு குரியன் தமிழில் சென்னை 2 சிங்கப்பூர் படம் மூலம் கதாநாயகியாக அறிமுகமானார்.

அதன் பின் ஜூலை காற்றில், இஃக்லு, சில நேரங்களில் சில மனிதர்கள், சிங்கிள் ஷங்கரும் ஸ்மார்ட்ஃபோன் சிம்ரனும் உள்ளிட்ட பல படங்களில் நடித்து தனக்கென ஒரு இடத்தை சினிமாவில் பிடித்து கொண்டார்.

அவ்வப்போது, இன்ஸ்டா தளத்தில் போட்டோவை வெளியிடும் நடிகை அஞ்சு. தற்போது மாடர்ன் லுக்கில் வலம் வரும் அசத்தல் ஸ்டில்ஸ்.

# காமெடி கதையில் சித்தார்த், ராஷி கன்னா!

சித்தார்த், ராஷி கன்னா ஜோடியாக நடித்துள்ள காமெடி படத்துக்கு ‘ரவுடி அண்ட் கோ’ என்று தலைப்பு வைத்துள்ளனர். இதில் சுனில், யோகி பாபு, ரெடின் கிங்ஸ்லி, பிராங்க்ஸ்டர் ராகுல், வெற்றி மணி, சார்லஸ் வினோத் ஆகியோர் நடித்துள்ளனர். வம்சி வில்லனாக நடித்துள்ளார்.

இதை ‘டக்கர்’ படத்தை இயக்கிய கார்த்திக் ஜி கிரிஷ் இயக்கியுள்ளார். அரவிந்த் சிங் ஒளிப்பதிவு செய்துள்ளார். ரேவா இசை அமைத்துள்ளார். பேஷன் ஸ்டுடியோஸ் சுதன் சுந்தரம் தயாரித்துள்ள இப்படம் தமிழ், தெலுங்கு உட்பட 5 மொழிகளில் வெளியாகிறது.இப்படத்தின் டைட்டில் குறித்து கார்த்திக் ஜி கிரிஷ் கூறும்போது, “ரவுடிகளின் கார்ப் பரேட் சாம் ராஜ்யம் பற்றிய கதை என்பதால் இந்த தலைப்பை வைத்துள்ளோம். முழுவதும் நகைச்சுவை நிறைந்த என்டர்டெயினராக இப்படம் இருக்கும். படப்பிடிப்பு நிறைவடைந்து விட்டது. இன்னும் 15- 20 நாட்களில் போஸ்ட் புரொடக் ஷன் பணிகளும் நிறைவடைந்துவிடும்” என்றார்.



# சிவ தாண்டவம் ஆடும் பாலகிருஷ்ணா



நடிகர் பாலகிருஷ்ணா நடித்து, 2021-ல் வெளியான ‘அகண்டா’ படம் சூப்பர் ஹிட்டானது. போயபதி ஸ்ரீனு இயக்கிய இதில் பாலகிருஷ்ணா 2 வேடங்களில் நடித்திருந்தார்.

இதன் 2-ம் பாகம் இப்போது உருவாகியுள்ளது. ஃபேன்டஸி ஆக் ஷன் படமாக உருவாகியுள்ள இதில், சம்யுக்தா மேனன், ஆதி உள்பட பலர் நடித்துள்ளனர். தமன் இசை அமைத்துள்ள இப்படம் தமிழிலும் வெளியாக இருக்கிறது. இதன் முதல் சிங்கிளான ‘தாண்டவம்’ பாடல் மும்பை ஜூஹுவில் நடந்த விழாவில் வெளியிடப்பட்டது.

பக்திப் பாடலான இதை சங்கர் மகாதேவன், கைலாஷ் கெர் பாடியுள்ளனர். பாலகிருஷ்ணா, கோயில் அரங்கில் ஓம் உச்சரிப்புகளின் நடுவே சிவ தாண்டவத்தை ஆடுகிறார். இப்பக்தி பாடல் இணையத்தில் வேகமாக பரவி வருகிறது. படம் டிச.5-ல் வெளியாகிறது.

**CREST THE BEST @ ANAKAPUTHUR**

SPOT BOOKING OFFERS



1 BHK FLAT ₹.22.99 L*
2 BHK FLAT ₹.38.50 L*
3 BHK FLAT ₹.56.99 L* Onwards

visit our site www.crest.homes

CREST HOMES PVT LTD Elegant Affordable...

89399 65050

---

**NR MAHINDRA WORLD CITY NXT TO VIKAS MANTRA SCHOOL**

DTCP & RERA அங்கீகாரம் பெற்ற புதிய லேஅவுட் மனைகள்

1200-2400 சதுர அடி விற்பனைக்கு

ANUGRAHA

CONTACT 90477 34343

---

GPHOMES

NEXT TO PATTABIRAM (TIDEL PARK) NEAR SEVVAPET RLY. STN.,

DTCP APPROVED VILLA PLOTS ₹30 Lakhs onwards | INDIVIDUAL HOUSE ₹13.5* Lakhs onwards

MOGAPPAIR 2.0

NEAR AYANAMBAKKAM VELAMMAL SCHOOL

3 BHK INDIVIDUAL HOME ₹1.20* Cr.

6384 003 003

---

**SPACE FOR RENT**

VALLAM SRIPERUMBUDUR - ORAGADAM MAIN ROAD

Total Area 1 Lakh Sq.ft

- Near to Vallam Sipcot Entrance
- Access with 40ft Road
- Bounded by 10-ft Height Compound Wall with Main Gate & Wicket Gate
- Bore well with surplus water & EB Available
- Security Room & Toilet Available
- Ready to Occupy Immediate

Suitable for Office Space - Showroom - Godown - Warehouse - Manufacturing - Service Center - Logistics - Parking Yard

Contact No: 98410 02888

---

**வேல் கூபார்ம் ஹவுஸ் கார்டன்**

கோவை - மயிலேறிபாளையம்

DTCP-APPROVED-112-2025

கோவை பொள்ளாச்சி ரோடு கற்பகம் கல்லூரி அருகில் மாம்பள்ளி செல்லும் வழியில்

சைட் (1)-22, (2)-27, (3)-33 மொத்தம் மூன்று சைட் விற்பனைக்கு உள்ளது.

இந்த சைட்டில் தேக்கு மரங்களுடன் உள்ளது.

முதலீட்டிற்கு ஏற்றது. முதலீட்டாளர் மட்டும் தொடர்பு கொள்ளவும்

இடைத்தரகர்கள் தவிர்க்கவும்.

99444 69294
96009 69294

---

**பூமி விற்பனைக்கு**

கள்ளப்பாளையம் பஸ் ஸ்டாப் அருகில்

3½ ஏக்கர்

ரெசிடென்சியல் பூமி விற்பனைக்கு

தொடர்புக்கு:

99434 53815
97863 99079

---

**SITE FOR SALE**

40X60 SOUTH FACING

40 FEET ROAD

AERIAL VIEW PROPERTY SOLUTION

PRR NAGAR
BEHIND-BIMETAL BEARINGS
P.N.PUDUR
COIMBATORE-641041

78717 63629

---

**குடோன் வாடகைக்கு விடப்படும்**

கோவை வடவள்ளி

IOB காலனியில்

3614 sq.ft with EB Service 150HP

CT: 88708 68595

---

**GODOWN FOR RENT**

NEW GRADE-A WAREHOUSE

20,000 sqft

Location: Salem

- 12th KM Salem - Chennai NH
- Ample Truck Parking Dock Leveller

72000 51508

---

**நிலம் விற்பனை**

சேரன்மஹாதேவி அருகில், திருநெல்வேலி மாவட்டத்தில்,

30 ஏக்கர் நிலம் விற்பனைக்கு

Good Water, Clear Title

நியாயமான விலை

Rs.13 Lacs per ஏக்கர்

74832 05910

---

**மகேந்திரா வேர்ல்ட் சிட்டி அருகில்**

விகாஸ் மந்திரா பள்ளி அடுத்து

DTCP & RERA அங்கீகாரம் பெற்ற புதிய லேஅவுட் மனைகள்

1200 - 2400 சதுர அடி

அனுக்ரஹா

தொடர்புக்கு: 90477 34343

---

**ஸ்ரீபெரும்புதூர் அருகில் உள்ள**

கம்பெனிக்கு 50 Staff தங்குவதற்கு Building வாடகைக்கு தேவை

97899 85835 / 79046 02553

---

**LAND FOR SALE**

COIMBATORE PEELAMEDU GV RESIDENCY 4.25 cents,

RAMANATHAPURAM KRISHNA COLONY 5.50 and 8 and 11Cents

RAMANATHAPURAM NEAR JUNCTION 1.10Acre & 4Acre

Broker Excuse

Contact: R.Sasikumar 81242 63136

---

**New House for Sale**

@ EB Colony, Veerapandi Pirivu

2BHK House

2.7 cent - North Facing

1000 sq.ft

9751041250

---

**வள்ளியூர் NH அருகில்**

வீட்டுமனை 5 சென்ட் ரூ. 2 லட்சம்

வீட்டுமனை 4 சென்ட் ரூ. 4 லட்சம்

வள்ளியூர் பூங்கா நகர்

5 சென்ட் ரூ.45 லட்சம்

9940 20 7778

---

**OMR GOLDEN CITY ALERT!**

THIRUPORUR

Sold Out in 2019 - Limited Resale Plots Now Open!

Starts : Rs.13 Lacs

90% Bank Loan

Call: 9962 888 888

---

**Commercial Building for Rent**

THIRUNINDRAVUR

Main Road 3000Sft, 2nd Floor Suit for Gym Etc.

REDHILLS - ORR

Main Road 2500Sft, Ground Floor (Via Redhills to Thiruvallur) Suits for Showroom, Restaurant.

98412 38854

---

**கட்டிடம் விற்பனைக்கு**

பொள்ளாச்சி நகரில் பிரபல இன்ஜினியரிங் கல்லூரி அருகில் 13 அறைகளுடன் (ALL BATH ATTACHED) கூடிய புதிய கட்டிடம் விற்பனைக்கு

மாத வாடகை வருமானம் ரூ.50,000

CONTACT

98420 14702

---

**குடோன் வாடகைக்கு**

நீலாம்பூர் கதிர் காலேஜ் ரோட்டில்

500, 1000, 1600, 2600 சதுரடி (EB 50HP)

குடோன் வாடகைக்கு

98941 09560

---

**2 BHK FIRST FLOOR FOR RENT**

DVD COLONY, KOTTAR

MARBLE FLOOR

24 HOUR WATER

9840741033

---

**RENTAL COMMERCIAL @ ROYAPURAM**

No.247, Suryanarayana Chetty St, Royapuram, Ch-13

1st Floor 2830 Sq.ft, Lift Car Parking

Rent for Office, Bank, Etc.,

Ct: 94440 46328

---

**Industrial / Warehouse FOR RENT**

@ Malumichampatti, CBE



Brand New

18,000 sq.ft Buid up Area ✦ 34 feet center height ✦ Bore well with 10,000 Lts Sump ✦ Car parking ✦ Security, Power & Rest room ✦ Compound

99439 11012
93447 20747

---

**கடை வாடகைக்கு**

கோவை பா.நா.பாளையம் லட்சுமி மில்ஸ் அருகில்

- 60 அடி ரோட்டின் மேல்
- 1800 சதுரஅடி
- தரைத்தளத்தில்
- தண்ணீர் வசதியுடன்

Suitable for: IT Office, Clinic, Laundry, Cloud Kitchen

CONTACT + 91 99650 90000

---

**இடம் விற்பனைக்கு**

கோவை சத்தி ரோடு குன்னத்தூர் CRI Pump அருகில் வடக்கு கிழக்கு பார்த்த கார்னர் சைட்

14.5 சென்ட் இடம் விற்பனைக்கு.

பிரித்தும் வீடு கட்டி தரப்படும்.

97863-43827

---

**அலுவலக இடம் வாடகைக்கு**

நாகர்கோவிலில் 3500 சதுர அடி அலுவலகம் நடத்த வசதியான இடம் வாடகைக்கு உள்ளது. 2 கார் மற்றும் 20 இருசக்கர வாகனங்கள் பார்க்கிங் செய்யும் இட வசதி.

தொடர்புக்கு: 9841062644




## உலகின் சூழல்

வெள்ளம் வடித்த கண்ணீரில்
வேதனை மீன்கள்
துள்ளிடுதே! வெடிதாய்
மனிதன் அதை பார்க்க
வெடிக்கும் குமுறலை
சொல்லிடுதே!

நல்லோர் இதயம்
நினைக்கின்ற நன்மை
தனையே புறந்தள்ளி
நாளும் தீமைகள்
செய்வதனால்
இயற்கை எதிராய் மாறிடுதே!

உள்ளே இழுக்கும் உயிர்
காற்றும் உலகின் சூழல்
மாசுபட ஓடும் ஆற்றின்
மணலெல்லாம்
விற்றிட விலைதான் பேசப்பட,

எல்லோர் தாகம் தீர்க்கின்ற
எளிதோர் நீரை பணமாக்கி
நெல்லாய் விளையும்
பூமிதனை நெடிதோர் வீடுகள்
தானாக்கி

பொல்லோர் முழுபயன்
அடைவதனால்
எல்லாம் வல்ல உலகமிது



எதிராய் மாறி
சரிகிறதோ–
இது எத்தனை
பேருக்கு
புரிகிறதோ!

**வெ.தமிழுழகன்**
எம்ஏ. பிஎட்
சேலம்.

கண்களில் சிறை வைத்து
விட்டு... சொற்களால்
விடுவிக்கிறாய்...

ஆழ்மனதில் புதைந்து
கொண்டு....

மூச்சுக் காற்றாய்.
வெளியேறுகிறாய்...

சுவாசத்தில் வெளியேற்றம்
மட்டுமே இல்லை...

உள்ளிழுத்தலும் தானே....

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

தொலைந்து போக
ஆசைப்படுகிறேன்
உன்னிலிருந்தும்,
என்னிலிருந்தும்.
ஆசைப்படுவதும் பாவமென
சொன்ன புத்தனும் என்
நிலையில் இருந்திருந்தால்
ஆசைப்படு என்று சொல்லி
விட்டு சென்றிருப்பார்.

**லி.நௌஷாத் கான்**

திட்டினாலும்
எட்டி போகாதே
என் காதல் இப்படி தான்!

**லி.நௌஷாத் கான்**

## ஊர் உறங்கும் நேரம் !

ஊர் உறங்கும் அந்த
அமைதி இரவுக்காக
காத்திருக்கிறேன்....
அந்த இரவில் தான் என்
க(வி)தைகள் எழுத்துருவில்
வெள்ளை காகிதத்தில் இடம்
பெறும் நேரம்....

பகலில் நான் சந்தித்த நிஜ
கதாபாத்திரங்களை
க(வி )தை வடிவில் படைக்க
இரவே உகந்த நேரம்...

மதுபோதைக்கு
அடிமையானவன்
அந்தி சாய்ந்ததும்...
சரக்கோடும், தொட்டுக்
கொள்ள ஊறுகாயும்
தேடுவது போல் தான்
நானும் இரவின் நிசப்தத்தில்
பேனாவும் பேப்பரும்
தேடுகின்றேன்...

போதைக்கு அடிமையானவன்
மீள்வது எப்படி கடினமோ...
அது போலத்தான்
எழுத்துக்கு அடிமையானவன்
நிலையும் ! தனக்கு
தெரிந்ததை கிறுக்கல்களாய்



படைப்பதில்
அவனும்
அடிமையாய்
போகிறான்....
என்னைப்போல!

**எம்.பி.தினேஷ்.**
கோவை

## தோல்வியே... துணை

பேராயுதம் கொண்டு
போரிட்டால் ஆயுதத்திற்கு
வெற்றி...

பல மனித உயிரை
கொன்றால் மனித நேயம்
தோல்வி...

ஆயிரம் போர் ஓடினாலும்
ஒருவருக்குதான் வெற்றி..

முயர்ச்சியே செய்யாமல்
இருந்தால்தான் தோல்வி...

படம் நூறு நாள் ஓடினால்
அது வெற்றி...
அதை பார்ப்பவர்கள் பணம்
விரயமாவது தோல்வி...

தோல்வி துனையில்லாமல்
எதுவும் வெற்றியில்லை...



வாழ்வில்
துனையில்லாமல்
ஏதும் வெற்றி
பெருவதும்
இல்லை...!!

**பொன். கருணா**
நவி மும்பை

கண்டால் கல்லெறிந்து
காயப்படுத்தும்
'கனவான்'களை

அச்சப்படுத்தவே நாங்கள்
குரைக்கிறோம்.

மிச்சம் மீதியான
எச்சமாய் இருக்கும்

உணவுக்காகத்தான்
அவர்கள் பின்னே ஓடி
வருகிறோம்

எங்கள் குழாத்தில்
எல்லோரும் பசியுடன் தான்
இருக்கிறோம்!

பசி இருக்க; பத்தும் பறக்க

புரியாமல்தான்
குரைக்கிறோம்!
கூட்டமாகக் துரத்துகிறோம்



எங்கள் பசியை
உங்களுக்கு
வேறு
எப்படித்தான்
சொல்வது?

**சசிகலா விஸ்வநாதன்**



## ஒரு கிராமத்து விவசாயி!

அதிசயமா அதிசயமா...
அவன் திரும்பி பார்க்கிறான்
ஆனந்தமா வாழ்ந்த நாட்கள்
நினைத்து பார்க்கிறான்!

கனவு போல வாழ்ந்த நாளை
தேடிப் பார்க்கிறான் விவசாயி
ஒற்றையடி பாதை எல்லாம்
ஓடிப் பார்க்கிறான்!

காடு மேடு கரையெல்லாம்...
சுத்தி சுத்தி பார்க்கிறான்
கரைந்து போன அழகை
எல்லாம் தேடி பார்க்கிறான்!

நாளும் ஓடி குளிச்ச நதியில்...
வெறும் நாணல் பார்க்கிறான்
அனு தினம் நீர் எடுத்த
கேணியில புதர்
பார்க்கிறான்!

திண்ணை வைத்த
வீடெல்லாம் சுற்று
சுவர் பார்க்கிறான்
கோலம் போட்ட
வாசல் எங்கும்
தார் ரோடு பார்க்கிறான்!

புஞ்சை நஞ்சை பூமியெல்லாம்
வெறும் புழுதி பார்க்கிறான்
கண்மாய் வாய்க்கால் எங்கும்
கானல் நீரு பார்க்கிறான்!

ஏரிக்கரை எலந்தை எல்லாம்...
கரையில கருக பார்க்கிறான்
களத்து மேட்டில் முள்
முளைச்சி
கட்டாந்தரை பார்க்கிறான்!

தேரு போன வீதி எல்லாம்
சிமெண்ட் தரை பார்க்கிறான்
ஓலை வேய்ந்த குடிசை
எல்லாம் உயர்ந்த ப்ளாட்
பார்க்கிறான்!

நாத்து நட்ட வயல் எல்லாம்...



ரியல் எஸ்டேட் பார்க்கிறான்
ஒரு கிராமத்து
விவசாயிதான்
நகரத்து நகரம்
பார்க்கிறான்!

**ஜெ.ம.புதுயுகம்**
பண்ணந்தூர்

## கை வீசம்மா.. கை வீசு.!

கை வீசம்மா.. கை வீசு.!
கருணையோடே கைவீசு
பொய் பேசும் உலகத்திலே..
புரட்சிப் பூவே கை வீசு.!

கள்ளிப் பாலில் தப்பித்தே..
கண்ணே.. பிறந்தாய் கைவீசு.!
பள்ளிக்கூடம் போவதற்கே..
படித்தே உயரக் கைவீசு.!

ஆணாதிக்க பூமியிலே
ஆழிப்புயலே.. கைவீசு.!
தன்னை உணர்ந்து
தலைநிமிர்ந்து.. தாவிக்
குதித்துக் கை வீசு.!

இன்னும் இன்னும்
இவ்வுலகில்.. எழுந்து நடந்து..
கைவீசு.!
பெண்ணின் பெருமை
நானென்று பேரிடி முழங்கக்
கைவீசு.!

மானாய் குயிலாய்
மணிப்புறாவாய்..
ஊரார் நினைத்தார் கைவீசு!
யானோர் பாயும் புலியென்று..
புறநானூறே கைவீசு.!

கட்டில் தொட்டில்



பதுமையல்ல.. கனலே
நான் என்று கைவீசு!
கட்டுகள் உடைத்தே
கைவீசு.! கண்ணே..
மணியே.. கைவீசு.!

**வே.கல்யாண்குமார்.**

## இன்பம் தரும் நிகழ்வுகள்

இன்பம் தரும் தருணங்கள்
உள்ளம் உவகையில்
பூக்கிறது. மகிழ்ச்சி கீதம்
உள்ளம் முழுவதையும்
நனைக்கின்றது.
நினைத்தவை
நடந்ததால்
மகிழ்ச்சியில் மனம்
கொந்தளிக்கிறது
இதுதானே நான்
எதிர்பார்த்த தருணம்
என்பதால் மனம்



மகிழ்கிறது வீசும் காற்றும்
என்னிடம் மௌன மொழி
பேசுகிறது வாழ்வை
நிறைய செய்யும் இதுதானே
என் அவா சொற்களில்
தன்னம்பிக்கை வாசம்
வீசுகிறது விடியலும் இரவும்
மாறி மாறி வருவது
போல சந்தோஷ மழை
என் மனதுக்குள்
பொழிகிறதே
சுகம் தரும் இந்த
நினைவுகள் என் இறுதி
மூச்சு வரை வேண்டும்

**உஷா முத்துராமன்**



## உன்னையே ரதியென்று....

ரம்பா ஊர்வசி மேனகா
திலோத்தமா
இந்தப் புவனத்திற்கு
வந்தாலும்(கூட)
உன்னையே ரதியென்று....
சொல்வார்கள்!
பல்வேறு வகையான
மலர்களாகட்டும்
விதவிதமான
உடைகளாகட்டும்
உன்னைத்தொட்ட பின்
பேரழகாகின்றன!
நீ என்னைக்கா த லி த் த
பின் தான் வாழ்க்கையில்
யாரை வேண்டுமானாலும்
அதிர்ஷ்டம் தொட்டு
நேசிக்கும் என்ற நம்பிக்கை
எனக்கு வந்தது!
ஒரு பட்டாசுத்
தொழிற்சாலையே
உன்னிடமிருந்து
உண்டானாலும்
அன்பு செலுத்தும் போது
நீ எனக்கு ஆதரவான
ராட்சசி! முத்தமிடும்போது
சென்சாரைத் தூக்கித் தூர
வீசும் தேவதை!
எண்ணற்ற இதழ்களில்
வெளியிட வேண்டிய
எல்லாக் கவிதைகளும்
உன் இரு விழிகளிலும்
இதழ்களிலும் வசித்துக்
கொண்டிருப்பது எப்படியடி?!
என் ஒவ்வொரு வினாடியும்
உனக்காக வாழும் போதே
தெரிகிறது! கா த ல்
அழகானது மட்டுமல்ல
ஆழமானது என்றும் கூட!


## உள்ளம் கொள்ளை போனதடி!


ஓர் ஆயுதப் படையையே
நீ உன் விழிகளின்
பார்வைகளில்
வைத்திருந்தாலும்
அவ்வப்போது உன்
வார்த்தைகளில்
ஆலகால விஷம்
வெளிப்பட்டாலும்
என்று(மே)ம் என்
ஆருயிர்க் காதலி நீதானடி!
ஆர்ப்பரிக்கும் உன்
அழகை விட உன்
அமைதியான அன்பில் தான்
என் கா த ல் உள்ளம்
கொள்ளை போனதடி!
நீ வரும் நேரங்களில்தா(நா)ன்
வியந்து போகிறேனடி!
என் விழிகளுக்கு
அந்த நேரங்களில்
இமைக்காதிருக்கும்
அதிசயத்தை சொல்லிக்
கொடுத்திருப்பதை அறிந்து!
நீ என்னவளான



பிறகு தான்
அந்த உண்மை
தெரிகிறது நீ
எத்தனை
இனியவள் என்று!

**முத்து ஆனந்த்**
வேலூர்



நாலந்தாவின் தாமரைத் தடாகத்தில் பிரதிபலிக்கும் புத்தரின் புன்னகை, ஒரு தாயின் மங்கும் நினைவுகள், ஒரு தந்தையின் தரமான புரிதல், ஏரிக்கரை ஓரத்தின் மர்மங்கள், நடுநிசியில் விசித்திர அழுகை, காட்டு நடுவே தடுமாறும் ராதையின் நெஞ்சம், 'அனாமிகா' எனும் அன்றாட செயற்கை நுண்ணறிவு, உடைந்த ஜப்பானிய கலத்தின் தத்துவம் என பல்வேறு இலக்கிய வகைகளை இந்த அட்டைகளுக்கு இடையே வாசிக்கலாம்.

மோகன் குமார் ஒரு மருத்துவர், விரிவுரையாளர், துணை வேந்தர் என்றெல்லாம் பல பட்டங்கள் சுமந்தாலும் புத்தகப் பித்தர், வாசகர், கதாசிரியர், கவிஞர் எனும் பட்டங்களையே மிகவும் விரும்புபவர். 'The Stone Mermaid' என்ற ஆங்கில சிறுகதைக்கு இங்கிலந்து பி.பி.சி யின் சிறந்த சிறுகதை பரிசு பெற்றவர்.

'கின்ட்சுகி' தமிழில் மோகனின் முதல் சிறுகதைத் தொகுப்பு.

IND : ₹299
UK : £9.99
US/Canada : $14.99

dreamkraft

9 788199 471818

# நூல் விமர்சனம்:

நூலின் பெயர்: கின்ட்சுகி
ஆசிரியர்: மோகன் குமார்
விலை : ₹299
வெளியீடு : dreaMKraft
சென்னை

நடன இயக்குநர் கல்யாண் மாஸ்டரின் சகோதரர் டாக்டர் மோகன் குமார் எழுதிய முதல் சிறுகதைத் தொகுப்பாம் இது.

எழுத்தாளர் பட்டுக்கோட்டை பிரபாகர் முதல் தொகுப்பு போலவே தெரியவில்லை என முன் மொழிந்ததை அடியேன் வழி மொழிகிறேன்.

நூலில் இருந்து ஒரு சில கதைகள் இங்கே சுருக்கமாக உங்கள் பார்வைக்கு : தலைப்பிலுள்ள கதை கின்ட்சுகி : ஜப்பானியர்கள் உடைந்த பீங்கான் கலைப் பொருட்களை தூர எரிவதில்லையாம். அதை தங்கம் அல்லது வெள்ளி பசை கலந்து ஒட்டவைப்பார்களாம். சமீபத்தில் கூட ஒரு பசை விளம்பரத்தில் கணவனிடம் மனைவி திருமண நாளை மறந்ததற்காக,இருவரின் புகைப்படம் இணைந்த பீங்கான் சாஸரை தூக்கிப் போடச் சொல்லி , அது உடைந்ததும், இப்ப அது கிட்ட ஸாரி கேட்டால் ஒட்டுமா என்றதும், அவர் ஒட்டிடுச்சே என்பார்.

ஒவ்வொரு விரிசலுக்கும் ஒரு கதை இருக்கும். வாழ்வின் ஏற்ற, இறக்கங்கள் கண்டு துவளக் கூடாது என உணர்த்தும் கதை.

பொய்மையும் வாய்மையிடத்து டிமென்ஷியா எனும் மறதி நோயால் பாதிக்கப்பட்ட தன் நண்பரின் தாயாருக்கு, மனநல ஆலோசனை தந்து அவரின் போக்கிலேயே சென்று அவரை அமைதிப்படுத்தும் கதை. இந்த இலவச மனநல ஆலோசனை எல்லோருக்கும் பயனளிக்கும் .

**ஏழுரை :**

கணவன் மனைவிக்குள் ஏழரை ஆகாமல் அவளுக்கும் ஓய்வு கொடுத்து, கணவன் வாரம் ஒரு நாள் அவளுக்கு பிடித்ததை சமைத்தால் உறவு வலுப்படும் எனச் சொல்லும் கதை.

**கார்த்திகை**

முருகனை வளர்த்த கார்த்திகை பெண்கள் அறுவரில் ஒருவரான "அம்பா" முருகனைப் பிரிந்த தன் தாய்மையின் ஏக்கத்தை மருத்துவரிடம் வெளிப்படுத்தி ஆறுதல் அடைவதான கதை.

எல்லோமே படிக்கப் படிக்க சுவாரஸ்யம். புத்தகத்தை எடுத்தால் முடிக்காமல் கீழே வைக்க மாட்டீர்கள் என்பது உறுதி.

**ஸ்ரீகாந்த் திருச்சி**

## வேதனைக் காலம்

அப்பாவி மக்களின்
வாக்கில் அதிகாரம் காட்டும்
அரசியல்வாதிகள்
ஆதிக்கம் மொய்க்க
தொடங்கிவிட்டது .."

இவர் வந்தால் இது நடக்கும்
அவர் வந்தால் அது நடக்கும்
கனவு உலகில்
அப்பாவி மக்கள் ....."

எதுவுமே நடக்கவில்லை
என்பது மட்டும்
தான் உண்மை ..."

ஊழல் மட்டுமே தாரக
மந்திரம் சொத்து மட்டுமே
உயரிய நோக்கம் .... "

ஜனநாயகம் பல
கோணங்களில் சறுக்கல்
கண்டு பிணநாயகமாக
தான் உள்ளது ..."

பத்தில் இரண்டை
அமுக்கினால் தெரியாது
பத்தில் எட்டை அமுக்கினால்
என்ன செய்வது ..."

ஓட்டை போட்டால்
ஆட்டை போடும்
காலமாகி விட்டது ..."

ஸ்டிக்கர் ஒட்டும் காலம்
அரசியல் விழிப்புணர்ச்சி
மறைந்து காழ்ப்புணர்ச்சி
தலை விரித்து
ஆடும் காலம் ... "



என்று தணியும்
இந்த தாகம்
கேள்விக்
குறியில்
எதிர்காலம் ..."

**ஆர். சீதாராமன்**
சீர்காழி.

## சூரியனில் விசமில்லை!

எட்டுதிசைக்கும்
எதிர் திசை எதுவோ?

திசை யெட்டுக்குள்ளே
திகழ்வது அதுவோ?

மக்கள் நமக்கு மாற்றவர்
எவரோ ?

மக்களுக்குள்ளிருக்கும்
மாக்கள் அவரோ ?

ஆக்கச் செயலினை
அழிப்பவர் எவரோ?

ஆக்கம் செய்திடும் அறியவர்
அவரோ ?

ஏணிபோன்றவர்தான்
ஏராளம் இருப்பார்!

ஏணிபோலவே ஏற்றும்
இறக்கும் ஏக செயலினை
புரிவார்!

நாள் பார்த்து தான்
எண்ணும்! நல்லவர் நடுவே

கடமையென்றுணர்ந்து –தன்
காரியம் தனை துறந்து
–நாட்டு வளம் செய்யும்
வல்லவர் உளரே!

மழையும் பிழை செய்யும்



மருந்தும்
கொலை
செய்யும்!

மனித இனம்
இப்படி –
நல்லவர்
மறைந்திருந்தால் எப்படி !

**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சி கோட்டை



## காதல் கவிதைகள் !

ஒரே மாதிரி உருவம்
கொண்டவர்கள் எழு பேர்
உள்ளனர் என்பது பொய் !
என்னவள் போல உருவம்
கொண்ட வேறு ஒருவரும்
உலகில் இல்லை !
அவள் போல அவள் மட்டுமே!

---------------------

படித்த படிப்பு
மறந்து விடுகின்றன !
பாவையை பார்த்த
பார்வை மறக்க
முடியவில்லை !

---------------------

சிக்கி முக்கி கற்கள் உரசி
தீயை கண்டுபிடித்தான்
ஆதி மனிதன் ! அவள்
பார்வை என் பார்வை உரசி
காதல் தீ கண்டுபிடித்தோம் !

---------------------

ஒரே ஒரு புன்னகை செய்தாள்
ஓராயிரம் சக்தி என்னுள்
பிறந்தன !

---------------------

பெண்ணும் புயலும் ஒன்று !
அதனால்தான்
புதிய புயல்களுக்கு
பெண்கள் பெயர்
சூட்டுகின்றனர் !

---------------------

காற்று இல்லா
வெற்றிடத்தில்
மணி ஒலித்தாலும்
ஓசை கேட்பதில்லை !
அவளிடம் நான் வைத்த
வேண்டுகோள்
அவளுக்கு கேட்கவில்லை !

---------------------

பிரபல ஓவியர்கள் பலரிடம்
அவளின் புகைப்படம் தந்து
வரைய வேண்டினேன் !
ஒருவராலும் அவள் போல
வரைய முடியவில்லை
அவள் அவ்வளவு அழகு !

---------------------

பிரபல சிற்பிகள் பலரிடம்
அவளின் புகைப்படம் தந்து
அவளை சிலையாக
வடிக்க வேண்டினேன் !
ஒருவராலும்
அவள் போல சிலை
வடிக்க முடியவில்லை
அவள் அவ்வளவு அழகு !

**கவிஞர் இரா .இரவி !**




## உயிர்ச்சிலை!

கண்களிரண்டில் ஒடையாய்
கண்ணீர் வடித்து!

காய்ந்து போன கோடையாய்
காட்சியளித்து!

அருந்தும் நீரும் வருந்தும்
நேரம் அருவியாகி

உன் நினைவால் வதைப்பட்டு
பெண் நிழலுக்குள்
புதைப்பட்டு வாடுவது சரியா?
பாடுவது சரியா?

துயிலாமல்.....எழிலாமல்
புலன்மறந்தப் பார்வையாகி
அலைகடலில் விழுந்த
வியர்வையாகி! ஒத்த உயிர்
வாடுது! செத்த உயிர் ஆகுது!
பிரிவாயென்று
சொல்லியிருந்தால்
பிணைப்பின் இணைப்பில்
இறந்திருப்பேனே

எப்போதும் என்னோடு–
நீ இருப்பதாக
நினைந்திருப்பேனே!



உயிர் வைத்து
சிலை செய்தாய்!
உடலை மட்டும்
கொலை
செய்தாய்!
என்னடி நியாயம்
இது!

**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா**
செஞ்சி கோட்டை

## மகத்துவ குன்று

எண்ணம் என்கிற கிண்ணம்
எடுத்து எழுத்தை
நிரப்பு கவியாகும்!
என்றுமுழைப்போர்
அயராதுழைத்தால்
ஏகாந்தம் தான் புவியாகும்!

வண்ணம் வரைகிற வானக்
கூட்டம் வாழ்க்கை என்பது
போலாகும்! வழிமாறித்தான்
போகும்போது
வாழ்வில் எல்லாம் பாழாகும்!

கண்ணம் வைத்து கருத்தை
திருடும் கள்வன் போலே
உறவாடும் கயவர் உறவை
கழிக்கும் வரையில் காணும்
கனவே திரை மூடும்!

சுண்ணக்கல்லில் சுடுநீர்
பட்டு பொடியும் விதமாய்,
பொல்லாங்கை போக்கும்
வரையில் ஆக்கம், முயற்சி
போராடத்தான் உள்ளாகும்!

உண்ணும்உணவில் உப்பை
மிகையாய் உபயோகித்தால்
கரிப்பாகும்!
உள்ளம்தனிலே உண்மை
வளர்த்தால் உயர்வோம்
என்பது குறிப்பாகும்.!

மண்ணும் பொன்னும்
ஒன்னாகத்தான்
மாற்றம் வந்தால்
நன்றாகும்!
மறந்தும் தீமை
செய்யாவிட்டால்
மனமே
மகத்துவ
குன்றாகும்!



**வெ.தமிழழகன்**
எம்ஏ.பிஎட்
சேலம்.

## வாக்குரிமை!

(இசைப் பாட்டு)
வாக்குரிமையை இழக்காதே..
நண்பா வாக்குரிமையை
இழக்காதே!
(வாக்கு)
வாக்கைப் பயன்படுத்த
வேண்டும்...நம்
வாக்கைப் பயன்படுத்த
வேண்டும்! நல்லாட்சி
நடைபெறவே..என்றும்
சொல்லாட்சி நடைபெறவே...
(வாக்கு)

சொன்னதைச் செய்வோரை..
என்றும் செய்வதைச்
சொல்வோரைக்கண்டு
வாக்களிப்போம்..மற.னங்
கொண்டு வாக்களிப்போம்!
(வாக்கு)

நல்லாரைத் தேர்ந்தெடுக்கப்
பொல்லாரைப் பேர்த்தெடுக்க
கல்லா ரானாலும் நமக்குச்
சொல்வதைச்
செய்துமுடிக்க...
(வாக்கு)

உரிமையைத் துறக்காதே..
நண்பா உரிமையைத்
துறக்காதே உரிமையைப்
பயன்படுத்த வேண்டும்..நம்
உரிமையைப் பயன்படுத்த
வேண்டும்...
(வாக்கு)

வாக்களித்தல் நாம்
கடமையன்றோ..நண்பா
வாக்களித்தல் நம்
கடமையன்றோ!
நோக்கத்தை நிறைவேற்று..
நண்பா நோக்கத்தை
நிறைவேற்று..
(வாக்கு)

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

## சுமையில்லாத வாழ்வு

மனதில் இருப்பது நிம்மதி
என்பதால் தினம் தினம்
மகிழ்ச்சி தான்
நினைவுகள் வந்து கனவு
இல்லை என்று சொல்வதால்
மனதுக்குள் மகிழ்ச்சி .
ஆசை பேராசை இல்லையே
நியாயமான ஆசை என்பதால்
சுகமான சுமை தான்.
துயரங்கள் ஓடின சந்தோஷம்
ஓடி வந்தது.
சொந்தங்களும் நட்புகளும்
கொண்டாட சுகமான
சுமையானது.
சிந்தனை மட்டுமே வேண்டும்
என்பதால் சிந்தித்து
மகிழ்கிறேன்.
பிறக்கும் ஒவ்வொரு
நாளும் சிறந்த தினமாக
அமைந்ததே....
என்றுமே இது போல்
இறைவன் அருளிட ஆசை....
அகிலமே எனக்குப் பிடித்த
அகிலமானதே.
சுமையெல்லாம் ஆனந்த
சுமையாகவே தினம் தினம்
மகிழ்ச்சி
கடலில்
நீந்துவது
உண்மையே



**உஷா**
**முத்துராமன்**

## சகிப்புத் தன்மையோடு வாழ்வோம்!

நேரிசை வெண்பா!

சகிப்புத்தன் மைக்கான
சந்தன வாசம்

தகவாக மக்களிடம்
தங்க.. வகையாய்

விழிப்புணர்வை வீறுடன்
காணவேண்டும் என்றும்

குழப்பமின்றி
வாழவேண்டும் கூறு!

அறிவியலும் பண்பாடும்
ஆன்ற கலைகள்

செறிவோ டமைந்திட
சீராய்ச்... சிறப்பு

சகிப்பான
தன்மை
சரிநிகராய்க்
கண்டால்

வகையான
வாழ்வே வளம்!



**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

## பூமியை மிஞ்சியதுண்டா

வயலுக்கு பயிர் ஆளுமை...
பயிருக்கு நீ ஆளுமை...
நீருக்கு வரப்பு ஆளுமை...
வரப்புக்கு புள் ஆளுமை...
புள்ளுக்கு ஆடு, மாடு
ஆளுமை... ஆட்டுக்கும்,
மாட்டுக்கும்
மனிதன் ஆளுமை...
மனிதனுக்கு உணவு
ஆகாரம் ஆளுமை...
உணவுக்கு விளை
நிலம் ஆளுமை...
மொத்தத்தில்



உயிரினங்கள் வாழ பூமியே....
ஆளுமை ஆளுமை...
பூமியை காப்போம் ...
பல உயிரினங்களை
மீட்போம்....!!

**பொன்.கருணா**
நவி மும்பை

## முரண்

ஊழலை ஒழித்தே
தீருவேன் என்று
மேடையில்
முழங்கினார்,
ஒட்டுக்குப்



பணம் கொடுத்து
தேர்தலில் ஜெயித்த
தலைவர்!

**சு.அருண்**
**பிரகாஷ்**
இராமச்சந்திரபுரம்

## காதல் கவிதைகள்

ஒரு ஆணுக்கு தன்னையும்
ஒரு பெண் காதலிக்கிறாள்
என்பதே பெருமை அருமை !

நவீன உடையை விட
சராசரி சேலையில்தான்

நடக்கும் சோலை அவள் !

மாதா பிதா குரு நண்பன்
அனைவரையும் பின்னுக்குத்
தள்ளி முந்தினாள் அவள் !

பார்த்தால் பசி தீரும்
என்பார்கள் அவளைப்
பார்த்தாலே எனக்குப் பசி
வருகின்றது !

சொர்க்கம் நரகம் நம்பாத
நாத்திகன் நான் !
அவளைச் சந்தித்ததும்
நம்பினேன் சொர்க்கத்தை !

அருகில் அவள்
இல்லாவிட்டாலும்
என்னுள் இருக்கிறாள் !
எண்ணும் போதெல்லாம்
என் நினைவில் வருகின்றாள்!

முதலில் கண்கள் பேசியது
பிறகு இதழ்கள் பேசியது
பிறகு மனசு பேசியது
பேசிப் பேசி வளர்ந்த காதல்
பேசாமல் மனம் வாடியது !

காதல் வெற்றியை விட
காதல் தோல்விதான்
கவிதை வளர்க்கின்றது !

### காதல் !

நெடிலில் தொடங்கி
மெய்யில் முடியும்
சொல் மட்டுமல்ல !
நெடிய உறவாகத் தொடர்ந்து
மெய்யான அன்பை
பொழிவது! இன்பங்கள்
எத்தனையோ
இவ்வுலகில் இருந்தாலும்
இனிமையான காதல்
இன்பத்திற்கு இணை
இவ்வுலகில் இல்லை !
கூடு விட்டு கூடு பாயும்
எண்ண அலை !
தனிமையில் பேச வைக்கும்
பாச வலை ! மகிழ்ச்சிப்
போதையில் மிதக்க வைக்கும்
கலை ! கோடிப் பணம்
தந்தாலும் பிடிக்காத நிலை !
இறுதிவரை உறுதியாக
இருந்தால் அசைக்க முடியாத
மலை !

### அசை போடுகிறேன் !

நீயும் நானும்
பேசிய நிமிடங்களும்
சந்தித்த நாட்களும்
மிகவும் குறைவுதான் !
மூச்சு இருக்கும் வரை
நினைவு இருக்கும் !
பசுமையான நினைவுகள்
அவை ! மாடு என நானும்
அடிக்கடி அசை போடுகிறேன்
நினைவுகளை!

### சொல்வதில்லை !

பிரிந்து வருடங்கள்
பல கடந்தும் மனதில் ,
நினைவில் வருடி விட்டு
செல்கிறாள் ! தனிமையான
நேரங்களில் நினைவில் வந்து
செல்கிறாள் !
மறக்க நினைத்தாலும்
மறக்க முடிவதில்லை !
மூளையின் மூலையில் இருந்து
மூழ்கடிக்கிறாள் !
மறந்து விட்டதாக
உதடுகள் சொன்னபோதும்
உள்ளம் ஒருபோதும்
சொல்வதில்லை !

### மன்னிக்கட்டும் கலாம் !

தூங்கும்போது காண்பதல்ல
கனவு ! தூங்கவிடாமல்
செய்வதே கனவு !
படித்தேன் கலாம் வாசகம் !
தூங்கும்போது காணும்
கனவில் அவள் !
தூங்கவிடாமல் செய்யும்
கனவிலும் அவள் !
கலாம் என்னை
மன்னிக்கட்டும் !

### இனிமை ! இளமை !

உனக்கும் எனக்குமான
நட்பு காதலாகி அடுத்தக்
கட்டம் அடைந்தபோது
சின்னச் சின்ன தீண்டல்
தொடங்கியது!
தீயாய் எரிந்தது !
எண்ணிக்கையில் குறைவு
என்றாலும் எண்ணங்களில்
மிக நிறைவு !

### உண்மை !


பார்த்தும் காதலா ?என்று
பார்த்தவர்களிடம் கேலி
பேசியவன் !
உன்னைப் பார்த்ததும்
காதல் வந்தது உன்னிடம்
தாமதமாகத்தான்
சொன்னேன்! காதலை ஏற்றுக்
கொண்ட நீயும் சொன்னாய் !
பார்த்த அன்றே காதல்
மலர்ந்த உண்மையை !

### நம்பிக்கை !

தூக்குத் தண்டனை
கைதியிடம் நிறைவேறாத
ஆசை என்ன ? என்பார்கள் !
முடிந்தால் நிறைவேற்றுகள் !
நானும் தூக்குத் தண்டனை
கைதியாக விரும்புகின்றேன் !
உன்னை ஒரு முறை பார்க்க
ஆசை நிறைவேற்றுங்கள்
என்பேன் ! உன்னை
அழைத்து வந்து என்னிடம்
காடுவார்கள் ! இறக்கும் முன்
ஒரு முறை உன்னை பார்த்து
விடலாம் !

### என்னவள் !

அங்கிருந்து என்னை
இங்கு இயக்குகின்றாள் !
எங்கிருந்தபோதும்



என்னுள் இருக்கின்றாள் !
எழுச்சி தருகின்றாள் !
மனக்கவலை வரும்போது
மனத்தெம்பு தருகின்றாள் !
சோர்வு வரும்போது
சுறுசுறுப்பு தருகின்றாள் !
துன்பம் வரும்போது
இன்பம் தருகின்றாள் !
தடுக்கி விழும்போது
திரும்ப எழ வைக்கிறாள் !
விரக்தி வரும்போது
சக்தி தருகின்றாள் !
என்னுள் என் நினைவுள்
கலந்த இனியவள் !
அவள் என்னவள் !

### பிடிக்காத புத்தர்

புத்தரை எல்லோருக்கும்
பிடிக்கும் ! ஆனால் எனக்குப்
புத்தரைப் பிடிக்காது !
என்னவளே உன்
மீது அளவற்ற ஆசை
வைத்திருக்கும் எனக்கு
"ஆசையை அறவே அழி
" என்ற புத்தர் போதனை
பிடிக்கவில்லை .அதனால்
புத்தரையும் பிடிக்கவில்லை !

### இதமான மனசு !

பேசும் போது உன் விரல்
பட்டு என் கண்கள்
கலங்கியது ! உடன் நீ உன்
கைக்குட்டை எடுத்து
உன் வாயில் வைத்து ஊதி
விட்டு என் கண்ணில்
ஒத்தினாய் ! இதமானது கண்
மட்டுமல்ல என் மனசும்தான் !
இப்படி ஒரு சுகத்திற்காக
எத்தனை முறையும்
விரல்கள் விழிகளில் படலாம் !
கல்வெட்டாகத் பதிந்தது
இந்த நிகழ்வும் நம் உறவும் !

### கண்டுபிடித்தாள் கள்ளி

சேலை ஒன்று என்னவளுக்கு
வாங்கித் தந்தேன் !
எனக்காக வாங்கியதா?
என்றாள் ! உனக்காக
நெய்தது ! என்றேன் !
கைத்தறிச்சேலை என்பதை
உயர்வாகச் சொல்கிறாய்!
என்றாள் ! கைத்தறி
உயர்வானதுதான் !என்றேன் !
பட்டுச்சேலை வாங்கப் பணம்
இல்லை என்பது தெரியும்!
என்றாள் ! மனதிற்குள் !
கண்டுபிடித்தாள் கள்ளி !
என்பதை
நினைத்துக்கொண்டு
பட்டுச்சேலையை விட
கைத்தறிச்சேலைதான்
உனக்கு அழகு என்றேன் !
பட்டுக்கு எதற்கடி பட்டு
என்றேன் !
பட்டென சிவந்து நின்றாள் !

### தண்ணீர் குடிப்பாயாக !

நான் சாப்பிடும் போது
பொறை ஏறியது !
என் அம்மா உடன்
தலையில் தட்டி யாரோ
நினைக்கிறார்கள்
என்றார்கள் ! நினைப்பது நீ
என்பது எனக்குத் தெரியும் !
உடன் நான் உன்னை
நினைத்தேன் ! உனக்கும்
பொறை ஏறி இருக்கும் !
இங்கு நான் தண்ணீர் குடித்து
விட்டேன் அங்கு நீயும்
தண்ணீர் குடிப்பாயாக

### விழிப்படம் !

இருவரும் சேர்ந்து
ஒரே ஒரு திரைப்படம்தான்
பார்த்தோம் ! திரைப்படம்
பார்த்த நேரத்தை விட
அவளை நான் பார்த்த நேரமும்
என்னை அவள் பார்த்த
நேரமும்தான் அதிகம் !
இதழ்களை விட விழிகள்தான்
அடிக்கடி பேசிக் கொண்டன !
காதலர்கள் ஏன் ? திரைப்படம்
செல்கிறார்கள் என்பது
அன்றுதான் விளங்கியது
எனக்கு !

### விலைமதிப்பற்ற பரிசு !

அவளிடம் பல முறை
பரிசு வாங்கி இருக்கிறேன் !
நானும் அவளுக்கு பல முறை
பரிசு வழங்கி இருக்கிறேன் !
உருவம் இல்லாத பரிசு !
உணர்ச்சி மிகுந்த பரிசு !
நினைக்கும் போதெல்லாம்
இனிக்கும் பரிசு ! சகாராவில்
பாய்ந்த நயாகராவாக
அவள் முத்தம்தான்
விலைமதிப்பற்ற பரிசு !

### அறிவாளி அவள் !

என்னவள் அழகை விட
அறிவில் சிறந்தவள் !
என்றேன் . நண்பன்
இருக்காதே ! என்றான் .
அறிவில் சிறந்தவள்
எப்படியடா உன்னை
காதலிப்பாள் ! என்றான் .
பொறாமையில்
பேசும் நண்பனை
பொருட்படுத்தவில்லை நான் !
என்னவள் அழகி என்பதை
விட அறிவாளி என்பதால்தான்
எனக்குப் பிடித்தது அவளை !

### பார்த்துப் போமா !

உன்னை வழியனுப்பும்
உன் அம்மா பார்த்துப் போமா!
என்கிறார்கள் ! சாலையில்
கடந்தும் செல்லும் நீ
என்னை பார்த்துவிட்டுத்தான்
செல்கிறாய் !

### பார்த்து விட்டனர் !

யாரும் பார்க்காதபோது
இருவரும் பார்த்துக்
கொள்கிறோம் !
நாம் பார்த்துக் கொள்வதை
எல்லோரும் பார்த்து விட்டனர்!

### அழகோ அழகு !

நீ பேசுவது அழகுதான்
நான் பேசாமலே
அதனை ரசிப்பது வழக்கம் !
ஆனாலும் நீ பேசாமல்
இருக்கும்போதோ
அழகோ அழகு !
கொள்ளை அழகு !

### அழித்த கோட்டை !

உச்சி எடுத்து சீவ
வேண்டாம் என்று அன்று நீ
வேண்டுகோள் விடுத்தாய் !
இன்று வரை உச்சி
எடுப்பதில்லை ! கிழித்த
கோட்டை தாண்டுவதில்லை
என்பதை போல
நீ அழித்த கோட்டை
நான் போடுவதே இல்லை !

### தொட்டு விட்டது !

நெற்றியில் நீ வைத்த
முத்தம் ! முத்தமே அல்ல !
என்னுள் யுத்தம் செய்தது !
ஊடுருவி உயிர் வரை சென்று
தொட்டு விட்டது !

### சத்து !

இதழ்களில் நடந்த முத்தம்
நதி கடலில் கலந்த
நல்ல சங்கமமாய் !
கடலில் கிடைப்பது முத்து !
முத்தத்தில் கிடைப்பது சத்து !

### எனக்கு வலிக்கும் !

உன் புகைப்படத்தை
அஞ்சலில் அனுப்ப
வேண்டாம்! மின் அஞ்சலில்
அனுப்பு போதும் !
அஞ்சலில் அனுப்பினால்
அஞ்சல்காரர் உரை மீது
பதிக்கும் முத்திரைகள்
உனக்கு வலிக்காவிட்டாலும்
எனக்கு வலிக்கும் !

### அது எப்படி ?

ரோஜா அழகுதான் !
உலகம் அறிந்த உண்மைதான்!
நீ தலையில் சூடியதும்
ரோஜாவின் அழகு
குறைந்து விடுகிறது !
உன் அழகோ கூடி விடுகிறது!
அது எப்படி ?

என் சுவாசமே நீதானே !
கவிஞர் இரா .இரவி !
மல்லிகை வாசம்தான் !
ஆனால் உன் வாசத்தின்
முன்னே மல்லிகை வாசம்
தோற்று விடுகின்றது !
உன் வாசத்திற்கு இணையான
வாசம் உலகில் இல்லை
என் சுவாசம் சொல்லியது !
என் சுவாசமே நீதானே !

### எல்லாமே அழகு !

நீ நின்றால் அழகு !
நீ நடந்தால் பேரழகு !
நீ பார்த்தால் அழகு !
நீ முறைத்தால் பேரழகு !
நீ சிரித்தால் அழகு !
நீ சிகை கோதினால் பேரழகு !
எல்லாமே அழகு !

### அழகு கூடி விடும் !

ஆடைகளில் சுடிதார்
அழகுதான் ! அனைவரும்
அறிந்ததுதான் ! ஆனாலும்
அவள் அணிந்ததும் சுடிதார்
அழகு கூடி விடும்
அற்புதம் நிகழ்த்துவது
அவளின் அழகு !

### காண வந்தேன் !

கடவுள் நம்பிக்கை
எனக்கு இல்லாவிட்டாலும்
திருவிழாவிற்கு வந்தேன்
கடவுளை வணங்க அல்ல !
கன்னி உன்னைக் காண
வந்தேன் ! கடவுளுக்காக
வந்தவர்கள் கடவுளை
தரிசிக்க உனக்காக வந்த
நான் உன்னை தரிசித்தேன் !

### நினைத்தாலே இனிக்கும்!

சுவைத்தால்தான் இனிக்கும்
செய்த இனிப்பு நினைத்துப்
பார்த்தாலே இனிக்கும்
இனிய காதல் !

### பாட்டு !

என் செல்லிடப் பேசியில்
எந்தப் பாட்டையும்
வைக்கவில்லை நான் !
ஏன் தெரியுமா ? பாட்டுப்
பிடித்த ஆர்வத்தில் நீ
பேசாமல் இருந்து
விடக்கூடாது !

### என்னவள் !

நடந்து வரும் நந்தவனம் !
நடமாடும் நயாகரா !

வலம் வரும் வானவில் !
வஞ்சி வற்றாத ஜீவநதி !

பசிப் போக்கும்
அட்சயப்பாத்திரம் !
பார்ப்பதற்கு அஜந்தா ஓவியம்!
சிரித்தால் ஜொலிக்கும்
நட்சத்திரம் ! சிங்காரி அவள்
சித்தன்னவாசல் !

கண்களால் பேசும் சிலை !
கண்டால் பேரின்ப நிலை !

மண்ணில் உள்ள சொர்க்கம் !
மாறாத நிரந்தர மார்கழி !

கர்வம் இல்லாக் கண்ணழகி !
காந்தப் பேச்சுக் குரலழகி !

வாசம் வீ சும் வனப்பழகி !
நேசம் காட்டும் பாச அழகி !

உலக அழகுகள் வியக்கும்
அழகி ! உணர்வில் கலந்த
உயிரழகி !

பெண்களே ரசிக்கும் பேரழகி !
நான் ருசிக்கும் கனியழகி !

அறிவில் அவள் அறிவாளி !
அவள் முன் நான் கோமாளி !

அத்தனை உவமைகளும் !
அற்புதமாய்ப் பொருந்தும் !
வெள்ளையும் இல்லை

### அவள் !

கருப்பும் இல்லை
உயரமும் இல்லை
குள்ளமும் இல்லை

பேரழகியும் இல்லை
அசிங்கமும் இல்லை

அறிவாளியும் இல்லை
முட்டாளும் இல்லை

ஆர்ப்பட்டமும் இல்லை
அமைதியும் இல்லை

அவளுக்கு உவமை
அவனியில் இல்லை

புன்னகை செய்தால்
பூரிக்கும் உள்ளம்

மூளையில் நுழைந்து
மூலையில் அமர்ந்தாள் !

### காதலர்கள்

ஊடல் காரணமாக
இருவரும் இனி
சந்திக்க மாட்டோம்
என முடிவு எடுத்து விட்டு
இனி எப்போது சந்திப்போம்
என்று சந்திப்பைப் பற்றியே
சிந்தித்து ஏங்குபவர்கள் !

### நினைவுச் சிலுவை

பசுமரத்து ஆணியாக
பாவையின் நினைவுகள்

கிறித்தவர்கள் வணங்கும்
ஏசுவிற்கு ஒரே ஒரு
முறைதான் சிலுவை

எனக்கு உன்னை நினைக்கும்
ஒவ்வொரு முறையும்
நினைவுச் சிலுவை

ஏசு உயிர்த்து எழுந்ததாகச்
சொல்வார்கள்
எனக்கு உயிர்த்து எழ
வாய்ப்பே இல்லை !

### தொடர்கதையானது !

அவளைப் பார்த்தால்
போதும் என்று நினைத்தேன்
பார்த்தேன் ! அவளிடம்
பேசினால் போதும் என்று
நினைத்தேன் பேசினேன் !
அவளைத் தீண்டினால்
போதும் என்று நினைத்தேன்
தீண்டினேன் ! பார்த்தல் பேசல்
தீண்டல் தொடர்கதையானது !

### கோலம் !

கோலம் போடும் உந்தன்
கோலம் காண !
அதிக நேரம் தூங்கும் நான்
அதிகாலை எழுந்தேன் !
உதய சூரியனை
உன்னால் பார்த்தேன் !
பனி மலரையும்
பார்த்து ரசித்தேன் !
நீயும் வந்தாய் !
கதவு திறந்தாய் !
கூட்டித் தள்ளினாய் !
வாசல் தெளித்தாய் !
புள்ளி வைத்தாய் !
கோலம் போட்டாய் !
கோலம் பார்த்தேன் !
கல்வெட்டாய்ப்
பதிந்தது !
கன்னி உன் நினைவு !



**கவிஞர் இரா .இரவி**

# வாசகர் கடிதம்

சென்னையில் தூய்மை பணியாளர்களுக்கு மூன்று வேளை இலவச உணவு வழங்கப்பட்டது. முஸ்லிம் லீக் மாவோயிஸ்ட் காங்கிரஸ் கட்சிகளை நாடு நிராகரித்து உளளது என மோடி அறிவிப்பு.. தேசிய பத்திரிகையாளர் தினம் கொண்டாடப்பட்டது. ஓட்டு இருந்தால்தான் நாட்டை காக்க முடியும் என விஜய் கருத்து. வாழைப்பழத்தின் மகத்துவம் பற்றிய கட்டுரை மிகுந்த பயனுள்ளதாக அமைந்தது. வேடந்தாங்கல் சரணாலயத்தில் பறவைகள் குவிந்தது. தேர்தல் ஆணையம் எங்களுக்கும் அழைப்பு விடுக்க வேண்டும் என விஜய் கூறி இருக்கிறார். வங்க கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவானது. சென்னையில் ஒரு ரூபாயில் மெட்ரோ ரயிலில் பயணிக்கலாம். வைகை பொன்மலை சுப்பிரமணி சாமி பற்றிய கட்டுரை சிறப்பு. தொட்டபெட்டா சிகரம் பற்றிய கட்டுரை பல அரிய தகவல்களை அறிய முடிந்தது. புதுச்சேரி சுற்றுலா பயணத்தில் அனேக இடங்களை காண முடிந்தது. இன்றைய ராசிபலன் மிகவும் துல்லியமாக இருந்தது. நெல்லையப்பர் கோவிலில் ஐப்பசி திருக்கல்யாணம் கோலாலமாக நடைபெற்றது. பீகார் சட்டசபை தேர்தலில் தேஜஸ்வி சாதனை புரிந்துள்ளார். பீகாரில் மோசமான தோல்விக்கு என்ன காரணம் என ராகுல் ஆலோசனை. 204 நாட்களுக்குப் பிறகு பூமி திரும்பிய சீன வீரர்கள்

காதல் கவிஞர் முடி சூடா மன்னன் முத்து ஆனந்த் அவர்களின் கவிதை உள்ளம் கொள்ளை போனதே என்ற கவிதை அனைவரின் உள்ளத்தையும் உண்மையிலேயே கொள்ளை அடித்து விட்டது. முத்து ஆனந்த் அவர்களுக்கு சிறப்பான பாராட்டுக்கள்

இன்றைய நாள் இதழில் அனைத்து அம்சங்களும் சிறப்பாக இடம் பெற்று இருந்தது மிக்க மகிழ்ச்சியாக உள்ளது தமிழ்நாடு இ பேப்பர் குடும்பத்தினர் அனைவருக்கும் நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்.



-நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி

தூய்மை பணியாளர்களுக்கு மூன்று வேளை இலவச உணவுத் திட்டம் & 200 இடங்களில் ஓய்வறை கட்டித் தரப்படும்#முதல்வர் ஸ்டாலின் உணவு திட்டம் தொடங்கி வைக்கிறார்

முஸ்லீம் லீக், மாவோயிஸ்ட், காங்கிரஸ் கட்சிகளை நாடு நிராகரித்து விட்டது#பிரதமர் மோடி

பீஹார் தேர்தல் முடிவு அனைவருக்கும் ஒரு பாடம்#முதல்வர் ஸ்டாலின்

எஸ் ஐ ஆர் விவகாரம்=ஓட்டு இருந்தால்தான் நாட்டைக் காக்க முடியும்#விஜய் பரபரப்பு வீடியோ

இந்தியாவின் மிகச் சிறந்த நம்பிக்கைக்குரிய தொழில்மயமான மாநிலம் தமிழ்நாடு#டிஆர்பி ராஜா

வேடந்தாங்கலில் குவிந்துள்ள வெளிநாட்டுப் பறவைகள்

சென்னைவாசிகள் ரூபாய் ஒன்றில் மெட்ரோவில் பயணிக்கலாம்#சென்னை ஒன் செயலி மட்டும் போதும்

புதுக் கவிதைகளின் அணிவகுப்பு அபாரம்

வாசகர் கடிதங்கள் கனகச்சிதம்

நூல் விமர்சனம் வெகு நேர்த்தி
டெல்லி கார் வெடிப்பு#பஞ்சாப்பில் அறுவை சிகிச்சை டாக்டர் கைது=தென்னையில் தேள் கொட்டினால் பனையில் நெறி கட்டுகிறது
திருநள்ளாறு கோவில் ஊழியர்கள் வேலை நிறுத்தம்#பக்தர்கள் \ அவதி
மோசமான தோல்வி#கார்கே, ராகுல் காந்தி ஆலோசனை
கழிவு நீர் மாதிரியில் போலியோ வைரஸ் கண்டுபிடிப்பு#ஜெர்மனி ஆய்வாளர்கள் எச்சரிக்கை
204 நாட்களுக்குப் பின் பூமி திரும்பிய சீன விண்வெளி வீரர்கள்
இந்தியாவுடன் இந்த ஆண்டு இறுதிக்குள் வர்த்தக ஒப்பந்தம்
காசாவில் ஐநா ஏற்பாடு செய்த முகாமில் ஆயிரக் கணக்கான குழந்தைகளுக்குத் தடுப்பூசி



-பி.சுரேகா
சென்னை

தூய்மை பணியாளர்களுக்கு இலவச 3 வேளை இலவச உணவு திட்டம் வரவேற்க தக்கது அவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கான ட்டங்களைசெயல் படுத்தினால் சிறப்பாக இருக்கும் .வாழை பழத்தின் மகத்துவம் கட்டுரை சிறப்பாக உள்ளது .வள்ளுவத்தில் வியாசர் சுப்ரமணியசுவாமி கோயில் ,தாந்தியா தோபே கட்டுரைகள் சிறப்பாக உள்ளன ரோதிடம் அறிவோம் பகுதியில் உள்ள அனைத்து இளநிலை ஜோதிடர்களுக்கு பயனுள்ளதாக ும் ;புதுச்சேரியில் அருகில் உள்ள சுற்றுலா தலங்கள் பற்றிய கட்டுரை சுற்றுலா பிரியர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்



-ராஜகோபாலன்.ப

வணக்கம். 16.11.25 அன்றைய தமிழ்நாடு இ பேப்பர்.காம் முதல் பக்கத்தில் நம் தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்கள் தூய்மை பணியாளர்களுக்கு மூன்று வேலை இலவச உணவு திட்டத்தை அறிமுகப்படுத்திய செய்தி அருமையாக இருந்தது. இன்றைய பஞ்சாங்கம் மிக நல்ல நாளாக அமைய எனக்கு உதவியது மனமார்ந்த பாராட்டுக்கள்m திருக்குறள் எத்தனை முறை படித்தாலும் அலுக்காது.ர சலிக்காது.... அதே போல் இன்று அருமையான திருக்குறளை பொருளுடன் படித்து மகிழ்ந்தேன்.. செய்யாறில் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் திருக்குறள் திருப்பணி பயிற்சி வகுப்பு நடந்தது மிகவும் அருமை பாராட்டுக்கள். வாழைப்பழத்தின் அருமை பெருமைகளை நலம் தரும் மருத்துவம் பகுதியில் படித்துக் கொண்டவுடன் நிச்சயம் வாழைப்பழம் ஒரு மகத்துவமான பழம் என்று மனநிறையுடன் நலம் தரும் மருத்துவம் பகுதியை பாராட்டி படித்து மகிழ்ந்தேன் இந்தியாவின் மிகச்சிறந்த நம்பிக்கைக்குரிய தொழில் மயமான மாநிலம் தமிழ்நாடு என்ற பேச்சு கேட்டு ஆவலுடன் படித்தேன். வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானது என்ற செய்தி மழை வரும் என்ற நம்பிக்கை கொடுத்தது. சென்னை வாசிகள் ஒரு ரூபாயில் மெட்ரோவில் பயணிக்கலாம் சென்னை- 1 செயலி மட்டும் போதும் என்ற செய்தி மகிழ்ச்சியான செய்தி. தினம் ஒரு தலைவர்கள் பகுதியில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வரலாற்றுத் தலைவர்களின் அருமை பெருமைகளை மிக அற்புதமாக கொடுப்பது பாராட்டுக்குரியது. இன்று தாந்தியா தோபே அவர்களின் வரலாறு அவரைப் பற்றிய கருத்துகளை புகைப்படங்களும் மனமகிழ்ச்சியுடன் படிக்க வைத்தது. பல்சுவை களஞ்சியம் பகுதியில் வந்த ஜில்ஜில் தொட்டபெட்டா வார்த்தைகளை படிக்கும் போது ஒரு ஜில் என்ற ஒரு உணர்வு வந்து மிகவும் அற்புதமாக இருந்தது. பாராட்டுக்கள். ஜோதிடம் அறிவோம் பகுதியில் வந்த நீரிழிவு நோய் தாக்கும் ஜாதகக்காரர்கள் என்று பட்டியலிட்டது அதிர்ச்சியாக ஆர்வமுடன் படிக்க வைத்தது. 72 ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா அருமையான படங்களும் தகவல்களும் அற்புதமாக இருந்தது. தூய்மை பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்ட நல்ல செயல்பாடுகள். ராசிபலன் இந்த வாரம் எப்படி இருக்கலாம் என்று ஒரு மன தெளிவினை கொடுத்த அற்புதமான பகுதிர சுற்றுலா பக்கத்தில் வந்த புதுச்சேரியிலிருந்து இந்த இடங்களுக்கு ஒரு நாள் சுற்றுலா செல்லுங்கள் என்று அறிவுரை சொன்னது மிகவும் அருமை பாராட்டுக்கள். வரவிருக்கும் பொங்கல் பண்டிகைக்காக எல்லோரும் அவர்களுடைய சொந்த ஊர்களுக்கு செல்வதற்காக டிக்கெட் வாங்கியதால் சில நிமிடங்கள் தீர்த்த ரயில் டிக்கெட் என்ற செய்தி ஆசையுடன் படிக்க வைத்தது. டெல்லியில் நடந்த கார் விபத்து வழக்கு பஞ்சாபில் அறுவை சிகிச்சை டாக்டர் கைது என்ற செய்தி எல்லாம் படிக்கும் போது வடக்கே என்ன நடக்கிறது என்று ஒரு பய உணர்வு வருவதுதான் உண்மை. கழிவுநீர் மாதிரி போலியோ வைரஸ் என்று ஜெர்மனியில் கண்டுபிடிக்கப்பட்ட எச்சரிக்கை செய்து படித்ததும் அதிர்ச்சியாக இருந்தது ஈரான் திட்டத்துடன் தொடர்புடைய இந்திய நிறுவனங்களுக்கு தடை என்ற செய்தியும் வெளிநாட்டு செய்தியாக ஆர்வமுடன் படித்தேன். அனைத்து பக்கங்களையும் ஆர்வமுடன் ஞாயிற்றுக்கிழமை என்று எண்ணாமல் சுறுசுறுப்புடன் படிக்க அழகான செய்திகளை தொகுத்துக் கொடுக்கும் தமிழ்நாடு இ பேப்பரின் ஆசிரியர் குழுமத்திற்கு மனதார மனமார்ந்த பாராட்டுக்கள்.



-உஷா முத்துராமன்











Get Free Jobs Alert on Your WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs


LOCATION - CHENNAI
WE ARE
HIRING
TELECALLERS
VACANCIES - 50
QUALIFICATION - ANY DEGREE
FRESHERS ALSO CAN APPLY
TELECALLING EXPERIENCE IS PREFERABLE
9337501889
7789941009
qknewstv@gmail.com


PRODUCT
PROMOTION
Rs.100 Only
5000+ Views
FB, INSTA, WEBSITE
Whatsapp
8122798599
vilambaram.com
விளம்பரம்


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை / மணப்பெண்ணைப் பதிவு செய்யவும்.
www.enthunai.com
7871617005


தமிழ்நாடு இ பேப்பர்.காம்
Are you looking to publish News, Story, Kavidhai, Articles etc in TamilnaduEpaper, Anandabhaskar, PaperBoy
If yes,
send to tamilnaduepaper@gmail.com
Please mention in Subject
Papername and Category - News, Article, Kavithai, Story, Cooking, Aanmigam, Book Review, Vasagar Kaditham, Sindhika Oru Nodi, Rowse Ramani etc.,
Please send articles from own email
Articles without Author Details will be Ignored
ஆனந்த பாஸ்கர்


WE'RE
HIRING!
A Passionate
Content Creator
CONTACT US!
94386 10756



தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வலர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009


தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
tamilnaduepaper@gmail.com
தமிழகம் முழுவதும் மாவட்டம் தாலுக்கா வாரியாக
தேவை
நிருபர்கள்
புகைப்படக் கலைஞர்கள்
ஏஜெண்டுகள்
Call: 9337501889


MLM PERFECT
LIMITED OFFER
HURRY UP!
Cryptocurrency
MLM Software
Development
RS.19999/-
Onetime, No hidden cost
Contact Us
Visite Our Website
www.mlmperfect.com
Call US
9853719337,7436914247


WANTED
FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp
94386 10756


WANTED
STORE
HELPER
Boys only
Fresher / Experience
SAA
Venus Sorting Technologies Pvt Ltd
Ganapathy, Coimbatore
Ph: 97919 60482
E-Mail ID: hr@vvhitechhoses.in



CREATE YOUR
PROFILE
WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


Vilambaram
WE HELP YOU TO
BOOST
YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599


PADMA MEDIA HOUSE
Best Newspaper
Advertising Agency
Matrimonial
Property
Recruitment
Business
Announcements
Obituary
Public Notices
Education
CONTACT : +91 81227 98599


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


PADMA
MEDIA HOUSE
BOOK
NEWSPAPER ADS IN
Recruitment
Public Notice
Property
Business
Matrimony
Education
CONTACT : +91 81227 98599
தமிழ்நாடு இ பேப்பர்.காம்
ஆனந்த பாஸ்கர்
பேப்பர்பாய்
ADVERTISE WITH US!
Whatsapp
81228 36299


WORK FROM
HOME
Extra Income
Part Time
Full Time
AN OPPORTUNITY THAT ROCKS!!!
BE YOUR OWN BOSS
Work 1-4 Hours / Day
Training / Support Provided
No Experience / No Qualification
Who Can Work - 18 Years & Above
Housewives
Retired Persons
Students
Professionals
Businessman
Employees
9337501889
7789941009

**டிரைவர்கள் தேவை**

சென்னை, பெங்களூர் மற்றும் திருப்பூர் லைனில் ஓட்டுவதற்கு டிரைவர்கள் தேவை.

ஹெவி லைசென்ஸ் மற்றும் பேட்ஜ் வைத்திருக்க வேண்டும்

தினசரி பேட்டா மற்றும் திறமைக்கேற்ற நல்ல சம்பளம்.

**ACCOUNTANT**
Tally knowledge must

**OFFICE STAFF**
+2 or Degree

SKT கார்டன், S.பெரியபாளையம், ஊத்துக்குளி ரோடு, திருப்பூர்.
**93676-77779**

---

**WANTED**

- Arc-Welder-
- Compressor Air Tank-6
- Gas-Welder Compressor
- Air Driyer-5
- Service-Engineer-
- Compressor-7
- Helper-3
- Compressor Fitter-2

**Jayam Equipments**
Ganapathy,
Coimbatore-06
**9944642406**

---

**WANTED**
We are Looking For
**BUSINESS PARTNERS**
(MALE / FEMALE)
in Coimbatore
Real Estate Marketing
Call
**98945 72840**

---




---

**ஆட்கள் தேவை**

- எலிவேட்டர் இன்ஸ்டாலேஷன் டெக்னீசியன்ஸ்
- எலிவேட்டர் அசெம்பிளி டெக்னீசியன்ஸ்
- எலிவேட்டர் ட்ரெபிள் ஷூட்டிங் டெக்னீசியன்ஸ்
- எலிவேட்டர் குவாலிட்டி இன்ஸ்பெக்டர்ஸ்
- எலிவேட்டர் சேஃப்டி ஆபிசர்ஸ்
- எலிவேட்டர் NPD டெக்னீசியன்ஸ்
- கிரிம்பிங் டெக்னீசியன்ஸ்
- சோல்டரிங் டெக்னீசியன்ஸ்
- HINDI SPEAKING DATA ENTRY FRESHER WITH MS-OFFICE KNOWLEDGE
- எலிவேட்டர் இன்ஸ்டாலேஷன் காண்ட்ராக்ட்டர்ஸ்

Candidates with Elevator field Experience & Knowledge are Welcome

jeeva.v@eliteelevators.com
**Cell: 8925998689**
Elite Elevators

---

**MACHINE REPAIR TECHNICIAN WANTED**


Construction Company in **CALICUT, Kerala** requires Technicians for Bar Bending and Bar Cutting Machine, Mini Lift, Mixer Machine repairing with proven experience in repairing construction machinery.

**GOOD SALARY**
**Accommodation Available**
**85938 12049**

---

AUTHORISED கருடவேகா INTERNATIONAL COURIER
GARUDAVEGA
A Brand of NexGen Logistics Pvt Ltd
**International Courier Service**
**ஆண் / பெண் வேலைக்கு தேவை**
கல்வி தகுதி : 10th Std முதல்
Ganapathy, Thudiyalur.
**88866 56211**

---




---

**ADMIN EXECUTIVE**
Salary: 18K to 20K
Experienced system knowledge

**BILLING EXECUTIVE**
Salary: 18K to 20K
Any / Preferred B.Pharm, D.Pharm

**MARKETING EXECUTIVE**
Salary: 30K to 35K
(Monthly. Inc + Allow) Min 3yrs Exp

Shri Kalki Speciality's (P) Ltd.,
D.No. 4/22, Ramakrishna St, T.Nagar.
Ph: 8925266127 / 8925713334

---

**WANTED**
**FOUNDRY SUPERVISOR**
**SENIOR ACCOUNTANT**
**ACCOUNTS ASSISTANT**
Sathy Road, Kovilpalayam
**88700-04951 / 52**

---

**WANTED**
**Receptionist**
FOR DENTAL CLINIC
(FEMALE CANDIDATE)
**94432 43070**
Peelamedu, Coimbatore

---




---

**WANTED**

- Marketing / Sales Manager & Executives
- Service Manager & Supervisor
- Telecaller / CRO (F)
- Store incharge(M)

**SWASTIK REFRIGERATION TRADERSS**
Airconditioner Spare parts Distributors
Kodambakkam & Porur
**98410 42122**

---

**WANTED**
FEMALE / MALE STAFF
For Office at RS Puram

1. ADMIN / ADMIN ASSISTANT
2. ACCOUNTANT
3. OFFICE BOY

Min 3yrs Experience
email: haasyacom@gmail.com
**93622 22222**

---

**WANTED**
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/- & Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
**9790021367**

---

**WANTED**
30 years old reputed engineering & manufacturing company requires
**Mechanical CADD Draftsman**
(DME - Exp : 2-3 Years only)
**Office Assistant** (Female Candidates only)
with computer knowledge & Tally
(Exp 1-2 years) for office @ valasaravakkam
Apply by mail vintechchennai@yahoo.co.in
*Preferences given to nearby candidates

---

**REQUIRED**
Bank & Finance
LOAN CONSULTANCY
**TELECALLER (F)**
Age Below 30 | Fresh/Exp 2Yrs
Qual: +2 or Any Degree
**Sal: 12 to 18K + Inc**
West CIT Nagar, T.Nagar-35.
**ct: 97907 88886**

---




---

**JOB VACANCY**

- Nurse (ICU/NICU/OT/Casualty/Labour/Ward)
- Lab Technician
- AC Technician
- Accountant
- Reception - Billing
- House Keeping
- Ward Boy

**AMRIT MEDICAL CENTRE**
No. 73/28, Dr. Alagappa Road, Purasawalkam, Chennai - 600 084.
**Call : +91 7695957120**
calling time 11.00 am to 5 pm

---

**ஆட்கள் தேவை**

திருவள்ளூர் மாவட்டம் தண்ணீர்குளம் பகுதியில் அமைந்துள்ள ஸ்ட்சுரல் ஸ்டீல் தொழிற்சாலைக்கு PEB / கன்வென்ஷனல் ஃபேப்ரிகேஷன், நன்கு வேலை தெரிந்த ஆட்கள் தேவை.

1. ஒப்பந்ததாரர்கள் (CONTRACTORS)
2. வெல்டர்ஸ் மற்றும் கேஸ்கட்டர்ஸ்
3. கிரேன் ஆப்ரேட்டர்கள்

தங்குமிடம் ESI / PF வசதிகள் உள்ளன.
**Ct: 93800 72095 / 98416 46097**

---

**WANTED**
**EXECUTIVES**
Age Limit 40 Years
For Chennai, Tiruvallur, Chengalpattu
Attractive Salary Package, PF, ESI & Bonus with Allowances
999® BRAND
**+91 893 999 7476**
Email: 999lungies@kasz.in


---

**DETECTIVE Intel.**
#168, Defence Colony, Ch-32.
46 ஆண்டுகள் துப்பறிவதையே தொழிலாக கொண்ட
Dr. V. குலோத்துங்க சோழன்

Best English Write/Speak with Computer skill
**HIGH PROFILE LECTURERS -M/F**
To Enroll Students to Educate
**"DETECTIVE COURSES",**
INCOMPARABLE with IAS, IPS, Dr., BE, BL..
Prepared by us i.e. 15 days Internship/ 6 Mths / 1Yr/ Certificates and Degree upto Ph.D level
Lawyers : Gather Evidence for Sr. Lawyers.
Marketing Professionals: Solving Problems of MNC's, Big Business Circles, etc.
TARGET ORIENTED, SALARY UPON TALENTS.
kulo.cholan@gmail.com
**Ct: 94440 53979**



# பல்சுவை களஞ்சியம்




## இலக்கு....



இலக்கு. இலக்கின்றி நடப்பது கூட ஒரு இலக்கு தான்.

எந்த இலக்கை கைக் கொள்வது?? மாய உலகில் ஒவ்வொரு கணமும், எல்லாம் மாறிக் கொண்டிருக்கிறது. நம் இலக்குகளும் ஒன்றை அடைந்த பின் அடுத்தது உருவாகிறது. உருவாகுவதும், வெல்வதும் , பெறுவதும், இழப்பதுமே இலக்குகளின் அடிப்படையாகிறது.

என்றாலும் , ஏதோ ஒன்றைத் தேடிக் கொண்டு ஏதோ ஒன்றை நோக்கி நடை போடுவதே வாழ்க்கை.

விரிந்து கிடக்கிறது நம்முன் பாதை . உதிர்ந்து கிடக்கிறது சருகுகள். முன் சென்றவர்களின் காலடித்தடம் பதிந்து இருக்கிறது. அதில் கால் வைக்கும் போகலாம். அதை ஒதுக்கியும் போகலாம்.

வசதியான, சௌகரியமான பாதை என்றால் காலடித்தடத்தை பின்பற்றலாம். போராடும் குணமும், எதிர்த்து நிற்கும் துணிச்சலும் இருந்தால் அந்தத் தடங்களை ஒதுக்கி விட்டுப் போகலாம்.

எப்படி இருந்தாலும் பாதையில் நடந்து போவதே கட்டாயம். எங்கோ தெரியும் ஒரு புள்ளி வெளிச்சத்தை நோக்கி, ஏதோ ஒரு பாதையில் நாம் நடந்து சென்றே ஆக வேண்டும் .

எனவே அந்தப் பாதையில் நடப்பதையே நம் இலக்காகக் கொள்ளலாம் . அதுவும் நமக்கு ஒரு மகிழ்ச்சிதானே. விழாமல், விழுந்தாலும் எழுந்து, நடை போட்டுக் கொண்டே போவது தான் வாழ்வின் குறிக்கோளாக இருக்க வேண்டும். அதுவும் ஒரு ஆனந்தம். அதுவே நம் இலக்கும்.



**-G. Prabha**


## கணிதவியலாளர்களால் கண்டுபிடிப்பு

கணிதத்தில் எந்த ஒரு எண்ணுமே ஒன்றிலிருந்து பத்துக்குள் இருக்கும் எல்லா எண்களாலும் வகுக்கப்பட முடியாது.

ஆனால் ஒரு எண் மட்டும் உலக அளவில் இருக்கும் கணிதவியலாளர்களால் புதிராகப் பார்க்கப்பட்டது. அவர்களுக்கு ஒரு அதிர்ச்சியைக் கொடுத்தது என்று கூடச் சொல்லலாம். இந்த எண் பாரதத்தின் அசைக்க முடியாத திறமை வாய்ந்த கணிதவியலாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த எண் : 2520

மேலோட்டமாகப் பார்த்தால் எத்தனையோ எண்களில் இதுவும் ஒன்று என்று தோன்றும். ஆனால் அப்படி அல்ல. உலகக் கணிதவியலாளர்களால்



கடந்து போக முடியாத ஆச்சர்யத்தை அவர்களுக்குக் கொடுத்த ஒரு எண் !

ஏனெனில் 1 - 10க்குள் உள்ள எந்த ஒரு எண்ணாலும் - அது ஒற்றைப்படை எண்ணோ அல்லது இரட்டைப்படை எண்ணோ - வகுக்கப்படக் கூடிய எண்ணாக அது இருந்தது தான் !

இது மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுக்கக் கூடும் : முடியவே முடியாது என்று கூடத் தோணும்.

கீழேயுள்ள கணித அட்டவணையைப் பாருங்கள் :

2520 ÷ 1 = 2520
2520 ÷ 2 = 1260
2520 ÷ 3 = 840
2520 ÷ 4 = 630
2520 ÷ 5 = 504

2520 ÷ 6 = 420
2520 ÷ 7 = 360
2520 ÷ 8 = 315
2520 ÷ 9 = 280
2520 ÷ 10 = 252

இதன் மர்ம முடிச்சை அவிழ்த்தது:

[7 × 30 × 12] - இந்தப் பெருக்கல் தான் !

நமது பாரதம் பின்பற்றிய ஆண்டுக் கணக்குப்படி இந்தப் புதிருக்கு ஒரு விடை கிடைத்து விட்டது.

இந்த எண்ணை ஒன்றிணைத்தவை (coefficient)

வாரத்திற்கு நாட்கள் - 7

மாதத்திற்கு நாட்கள் - 30

ஒரு ஆண்டுக்கு மாதங்கள் - 12

[7 × 30 × 12 = 2520] This is the characteristic and dominance of time.

(This is the characteristic and dominance of time - இந்த சொற்றொடரை மிகச் சரியாக தமிழில் மொழி பெயர்க்க தெரியவில்லை. அதனால் அதை அப்படியே கொடுத்திருக்கிறேன்.)

இறுதியாக.. இதைக் கண்டு பிடித்த அந்த அற்புதமான மூளைக்கு உரியவர் -

திரு. ஸ்ரீனிவாச இராமானுஜம் அவர்கள்.

அந்த வணக்கத்துக்குரிய மாமேதையை.. மாமனிதரை நாம் தலை தாழ்ந்து வணங்குவோம்.



**-நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

## மீம்ஸ்







## விடுகதை



| | |
|---|---|
| வாயில் இருந்து நூல் போடுவான், மந்திரவாதி இல்லை; கிளைக்கு கிளை தாவுவான் ஆனால் குரங்கு இல்லை; வலை விரித்து பதுங்கி இருப்பான் ஆனால் வேடன் இல்லை அவன் யார்? | சிலந்தி |
| நீளவால் குதிரையின் வால் ஓடஓடக் குறையும் அது என்ன? | தையல் ஊசியும் நூலும் |
| எவர் கையிலும் சிக்காத கல், எங்கும் விற்காத கல் அது என்ன? | விக்கல் |
| கண்ணால் பார்க்கலாம் கையால் பிடிக்கமுடியாது அது என்ன? | நிழல் |
| செய்தி வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே அவன் யார்? | தொலைபேசி |
| அள்ள முடியும் ஆனால் கிள்ள முடியாது அது என்ன? | தண்ணீர் |

## ஜோக்ஸ்



ஆசிரியர்: மின்னல் தெரிந்தபிறகு ஏன் இடி இடிக்கிறது .

மாணவன்: கண்களுக்கு பின்னால் தானே சார் காது இருக்கிறது அதனால்தான் சார்.

==========================

"உங்க வீட்ல சிரிப்பு சத்தமாயிருக்கே, ஏன்?"

"எங்க வீட்டு டிவி ரிப்பேர், அதுதான் !"

==========================

"அந்தக் கட்சிக் கூட்டத்தில எல்லோரும் சேர்ந்து அழறாங்களே , ஏன்?"

"அங்கே 'துயர் மட்டக் குழு கூட்டம்' நடக்குதாம்"

==========================

"இன்னைக்கு நான் ஆபீஸ்ல பட்டினி கிடந்து வேலை செஞ்சேன்"

"அவ்வளவு பிசி ஒர்க்கா?"

"இல்ல; சாப்பாட்டு நேரத்தில என்னை யாரும் எழுப்பிவிடலை"

==========================

"தொழில் படுத்திடுச்சின்னீங்களே , என்ன தொழில்?"

"பாய் வியாபாரம் !"


==========================
==================

டாக்டர்: "நீங்க உடம்பைக் குறைக்கணும்; இனிப்பைக் குறைக்கணும்; காரத்தைக் குறைக்கணும்"

நோயாளி: "டாக்டர், நீங்க ஃபீசை குறைக்கணும்"

==========================

ஒருவர்: "தாமஸ் ஆல்வா எடிசன் பல புதிய கண்டுபிடிப்புக்களைக் கண்டுபிடிக்காமலிருந்தால் என்னவாயிருக்கும்?"



மற்றவர்: "வேற ஒருத்தர் கண்டுபிடிச்சிருப்பார்"

==========================

நீதிபதி : " அந்த வீட்டுப் பூட்டை உடைத்து ஏன் திருடினாய்?"

திருடன்: "என்னோட சாவி எதுவுமே அந்தப் பூட்டைத் திறக்காததால கடைசியா பூட்டை உடைக்க வேண்டியதாப் போச்சிங்க"

====================
=====================

தொண்டர் 1 "தலைவர் ரொம்ப அப்பாவியா இருக்காரா, எப்படி?"

தொண்டர் 2 : " சலூன்ல துண்டைப் போர்த்தினதுமே, 'எந்த வட்டத்தின் சார்பில போடுறே'ன்னு கேட்கிறாரு"

====================

"வாழைப் பழம் ஒன்னு எத்தனை ரூபாய்ங்க?"

"ஒரு பழம் ரெண்டு ரூபாய்ங்க"

"ஒன்னரை ரூபாய்க்கு கொடுங்களேன்"

"ஒன்னரை ரூபாய்க்கு தோல் மட்டும்தான் கிடைக்கும்"

"அப்படின்னா ஐம்பது பைசாவுக்கு பழம் மட்டும் கொடுங்க"

=====================

"இந்த ஆசிரியர் வித்தியாசமானவரா, எப்படி?"

"பதிலை சொல்லிட்டு, இதனோட கேள்வி என்னனு கேட்பார்"

========================

"டாக்டர், நான் யார் பேச்சையுமே கேட்குறதில்லை"

"அதை என்னிடம் வந்து ஏன் சொல்றீங்க?"

"காது சரியா கேட்கலை; அதை சரி பண்ணுங்க டாக்டர் !"

==========



# பன்முகம்



## கணவனா? தோழனா?



கணவனா? தோழனா? என்னும் நம் தலைப்பிலேயே எவ்வளவு அர்த்தங்கள், பொருட்கள் நிறைந்துள்ளன. பெரும்பாலான பெண்களிடம் உங்கள் கணவரா? தோழரா? எனக்கேட்டால், தோழரையே சொல்வார்கள். ஏன் மகாபாரத நாயகி திரௌபதியை கேட்டிருந்தால்கூட தனது தோழர் கிருஷ்ணனைத்தான் கூறியிருப்பார். “ ஐந்து ஆண்களுக்கு மனைவியான பாஞ்சாலி தனது கணவர்கள் எவரின் பேச்சையும் கேட்டதில்லை, தனது அன்புத் தோழன் கண்ணனின் பேச்சை மட்டுமே கேட்கவில்லை. நடந்தவர்” என பலரும் சொல்வதே அந்த பதிலுக்கு காரணமாக இருக்கலாம். ஆனால் இந்த பதிலுக்கான உண்மையான காரணம் என்ன?


குந்தியின் சொல்லோ, அல்லது முன்ஜென்ம வரமோ ஏதோ ஒரு காரணத்தால் திரௌபதி ஐந்து கணவர்களை ஏற்க வேண்டிய சூழல். ஏற்றாள். ஐந்து கணவர்கள் இருந்தும் அவளுக்கு ஆறுதலாக இருந்தது யார்? அவளது தோழன் கிருஷ்ணன்தானே. எப்போதெல்லாம் அவள் மனம் குழப்பத்தில் ஆழ்கிறதோ, எப்போதெல்லாம் அவள் இடரை அனுபவிக்கிறாளோ அப்போதெல்லாம் உறுதுணையாக இருந்து தோள் கொடுத்தவன் கண்ணன் ஒருவன்தானே. தனது மனைவியை சூதாட்டத்தில் வைத்து விளையாடியவர்களா? இல்லை சபையில் தனது துயில் உரியபோது துணி கொடுத்து அவள் மானத்தை காப்பாற்றியவனா? யாரைச் சொல்வாள்?

தர்மத்தில் சிறந்தவன் யுதிர்ஷ்டன். பலத்தில் சிறந்தவன் பீமன். வில்வித்தையில் சிறந்தவன் அர்ஜுனன். திரௌபதியால் முதலில் மாலை சூட்டப்பட்ட, முதலில் நேசிக்கப்பட்ட கணவன். குதிரைகள் பற்றிய அறிவிலும், அழகிலும் சிறந்து விளங்கியவன் நகுலன். திரௌபதி துயில் உரியப்படுவது உட்பட முக்காலத்தையும் முன்னரே அறிந்தவன் சகாதேவன். இப்படி உலகில் சிறந்திருந்த இவர்களின் தர்மமோ, அறமோ, திறனோ, எதுவாலும் திரௌபதி துயில் உரியப்படுவதை தடுக்க முடியவில்லை. தடுக்கவில்லை. அத்தனை பலம் கொண்ட பீமன், வில்வித்தையில் சிறந்த அர்ஜுனன், ஞானத்திலும், வீரத்திலும், தர்மத்திலும் சிறந்திருந்த பீஷ்மர் உட்பட அரங்கில் சில தர்மர்கள் நினைத்திருந்தால், தடுத்திருந்தால் திரௌபதி அந்த நிலைக்கு தள்ளப்பட்டிருக்கமாட்டாள். தன்னை அர்ப்பணித்த கணவன்மார்களே உதவாதபோது, கையில் சிறிது காயம் பட்டபோது தனது உடையை கிழித்து கண்ணனுக்கு கட்டியதை நினைவுகூர்ந்து, துணியை விட்டு மானம் காத்தான் கிருஷ்ணன். இதில் யார் சிறந்தவர்கள்? யார் திரௌபதி மீது உண்மையான பாசமும், அன்பும், அக்கறையும் கொண்டிருந்தவர்கள்? நட்பின் அடிப்படையில் வந்த ஒருவர் தனக்காக இவ்வளவு செய்யும்போது, காதல், திருமணப் பந்தம் மூலம் வந்த கணவர்கள் பயனற்றதாக இருந்தது ஏன்?

### திரௌபதிக்கு கண்ணன் உதவும் காட்சி

இந்த பாண்டவர்களைப் போல பல கணவர்மார்கள் உள்ளனர். எப்போது தனது துணைக்கு தேவையோ அப்போது உதவமாட்டார்கள். சிறந்த உறவில் கணவன் தோழனாகவும் இருப்பான். அப்படி இருந்தால்தான் அந்த உறவு சிறக்கும். தோழன் கணவனாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் ஒரு கணவன் கண்டிப்பாக தோழனாக மாறமுடியும். பெண்களின் பதிலுக்கும் இதுதான் காரணம். தன் உணர்வுகளை மதிக்கும் ஒருவரையே பெண் தேர்ந்தெடுப்பாள்.

## அதிகப்படியான மேக்கப் சோர்வாகவும் மாற்றும்



பண்டிகை காலங்களில் அல்லது விஷேசங்களின்போது நாம் பெரும்பாலும், நீண்டநேரம் நீடிக்கவேண்டும் என்பதற்காக அதிகளவு மேக்கப் போடுவோம். இந்த அதிகப்படியான மேக்கப் பின்னர் சருமத்தை மந்தமாகவும், சோர்வாகவும் மாற்றும். அதிக லேயர்கள் மற்றும் அவற்றில் உள்ள சில பொருட்கள் சருமத்தை எரிச்சலடையச் செய்து, சிவத்தல், வறட்சி மற்றும் உணர்திறன் ஆகியவற்றை ஏற்படுத்தும். கொண்டாட்டங்கள் முடிந்து நாம் பழைய நிலைக்கு திரும்பினாலும், முகம் அந்த கலைப்பில் அப்படியேத்தான் இருக்கும். அலச்சலால் சோர்வடைந்த சருமத்தை மீண்டும் பிரகாசிக்க வைக்க உதவும் சில எளிய வழிகள் இங்கே.

### நீரேற்றம்

விழாக்களின்போது நாம் தவிர்க்கும் முக்கிய செயல்பாடுகளில் ஒன்று தண்ணீர் குடிப்பது. அங்கு செல்வது, இங்கு செல்வது என வேலையில் தண்ணீர் குடிக்கவே நேரம் இருக்காது. வேலைகளால் போதுமான அளவு தண்ணீர் குடிக்க எளிதில் மறந்துவிடலாம். நீரிழப்பு சருமத்தை மந்தாக்கும், சோர்வாக்கும். இதனால் நீரேற்றம் என்பது சருமத்திற்கும், உடலுக்கும் மிக அவசியமான ஒன்று. ஒவ்வொரு நாளும் குறைந்தது 8 முதல் 10 கிளாஸ் தண்ணீர் குடிக்கவேண்டும். எவ்வளவு வேலைகள் இருந்தாலும் தண்ணீர் குடியுங்கள். மாற்றாக எலுமிச்சை சாறும் குடிக்கலாம். சில நேரங்களில் குலதெய்வ கோயில்களுக்கு செல்வோம். அங்கு வெயிலில் நிற்கவேண்டிய சூழல் வரும். அதனால் அதுபோன்ற இடங்களுக்கு செல்லும்போது வெள்ளரிக்காய், புதினா போட்டு தண்ணீரை எடுத்து சென்று அதை குடியுங்கள். ஈரப்பதத்தை தக்க வைத்துக் கொள்வது, மேக்கப், கொழுப்பு நிறைந்த உணவுகள் போன்றவற்றின் பாதிப்பிலிருந்து சருமத்தை பாதுகாக்கிறது.

### எக்ஸ்ஃபோலியேட்

கொண்டாட்டங்களுக்கு பிறகு சருமத்தை புத்துணர்ச்சியூட்ட எக்ஸ்ஃபோலியேஷன் ஒரு சிறந்த வழியாகும். இது முகத்தில் உள்ள இறந்த செல்கள், அதிகப்படியான எண்ணெய், மீதமுள்ள மேக்கப்பை நீக்கி சருமத்திற்கு புது தோற்றத்தை கொடுக்கும். பண்டிகை நாட்களை தாண்டி, வாரத்திற்கு ஒரு முறையும் எக்ஸ்ஃபோலியேட் செய்வது சிறந்தது.

### ஃபேஸ்மாஸ்க்

ஃபேஸ்பேக் அல்லது ஃபேஸ்மாஸ்க் சருமப் பராமரிப்பில் முக்கியப் பங்கு வகிக்கிறது. ஃபேஸ்மாஸ்க் புத்துணர்ச்சியை அளிக்கும். ஃபேஸ் மாஸ்க்குகளில் சருமத்தை ஆழமாக ஈரப்பதமாக்கி ஊட்டமளிக்கும் சீரம்கள் உள்ளன. காஃபின், தாவரச் சாறுகள் போன்ற பொருட்களும் உள்ளன. அவை வீக்கத்தைக் குறைக்க உதவுகின்றன. குறிப்பாக கண்களைச் சுற்றி. அதுபோல ஃபேஸ்பேக்கும் சிறந்த நன்மையை அளிக்கும். தினமும் முகத்தை க்ளென்சிங் செய்தாலும் எல்லா முறையும் சருமத்தின் ஆழம்வரை நன்கு சுத்தம் செய்வதில்லை. அதனால் வாரத்தில் ஒருநாள் ஃபேஸ்பேக் பயன்படுத்தும்போது அது சருமத்தின் ஆழம்வரை சென்று சுத்தம் செய்யும். இரண்டு முறை செய்வது கூடுதல் பிரகாசத்தை வழங்கும்.

### சன்ஸ்கீரினை தவிர்க்காதீர்கள்

விழா நாட்களில் அதிகம் வெளியே செல்ல வேண்டியிருக்கும். அப்போது சூரிய ஒளியின் சேதங்களிலிருந்து சருமத்தை பாதுகாக்க சன்ஸ்கீரின் உதவும். அதனால் மறக்காமல் வெளியே செல்லும்போது சன்ஸ்கீரின் பயன்படுத்துங்கள்.

### தூக்கம்

கொண்டாட்டங்களினால் தூக்கம் பாதிக்கப்படும். சரியான தூக்கம் இல்லாதது கண்ணைச்சுற்றி கருவளையங்களையும், வீக்கத்தையும் ஏற்படுத்தும். அதனால் நன்கு தூங்குங்கள். தூக்கம் உங்கள் உடல், சரும செல்களை சரிசெய்து சமநிலையை மீட்டெடுக்கிறது. நீங்கள் நன்றாக ஓய்வெடுத்து எழுந்திருக்கும்போது, உங்கள் சருமம் எந்த ஒப்பனையாலும் ஒப்பிட முடியாத இயற்கையான பளபளப்பைப் பெறும்.

## எதைச் சாப்பிட்டு எதைத் தவிர்க்க வேண்டும்?



1. தேனும், நெய்யும் சம அளவில் கலந்தால் நஞ்சாகிவிடும். எனவே இரண்டையும் சேர்த்து உண்ணக்கூடாது. இவற்றில் ஏதாவது ஒன்றை ஒரே நேரத்தில் சாப்பிடவேண்டும்.
2. வாழைப்பழத்தைத் தயிர், மோருடன் கலந்து சாப்பிடக்கூடாது. வாழைப்பழம் சாப்பிட்ட உடனும், தயிர், மோர் சாப்பிடக்கூடாது.
3. பழங்களைத் தனியேதான் சாப்பிட வேண்டும். சாப்பாட்டுடன் சேர்ந்து சாப்பிடக்கூடாது. அதன் தாதுச்சத்து உணவுடன் கலந்து பலனற்றுப் போய்விடும்.
4. வெண்ணெயுடன் காய்கறிகளைச் சேர்த்துச் சாப்பிடக்கூடாது.
5. மீன், கருவாடு சாப்பிட்ட உடன் பால், தயிர் சாப்பிடக்கூடாது. அவ்வாறு மீறி உண்டால் “வெண் மேகம்” போன்ற நோய்கள் வர வாய்ப்பு உள்ளது.
6. உடல் மெலிந்தவர்கள், புழுங்கலரிசி சாதம் சாப்பிட வேண்டும்.
7. உடல் பருத்தவர்கள் கோதுமை உணவு உண்பது நல்லது.
8. ஆஸ்துமா உள்ளவர்கள், சளி அதிகம் உள்ளவர்கள் தக்காளி, பூசணிக்காய், முள்ளங்கி ஆகியவற்றைச் சாப்பிடக்கூடாது.
9. மூல நோய் உள்ளவர்கள் முட்டை, அதிக காரம், மாமிச உணவு ஆகியவற்றை உண்ணக்கூடாது.
10. நெய்யை வெண்கலப் பாத்திரத்தில் வைத்து உபயோகிக்கக்கூடாது.
11. காலையில் வெறும் வயிற்றில் காப்பி, டீ குடிக்கக்கூடாது. ஒரு டம்ளர் தண்ணீர் குடித்துவிட்டுப் பின்னர், காப்பி, டீ போன்றவைகளைக் குடிக்கலாம்.
12. அல்சர் உள்ளவர்களும், மஞ்சள் காமாலை உள்ளவர்களும் மிளகாய், ஊறுகாய் ஆகியவற்றைச் சேர்த்துக்கொள்ளக்கூடாது.
13. பெண்கள் வீட்டிற்குத் தூரமான நாட்களில் கத்தரிக்காய், எள், அன்னாசி, பப்பாளி ஆகியவற்றைச் சேர்த்து கொள்ளக்கூடாது.
14. தோல் நோய் உள்ளவர்கள் கத்தரிக்காய், புடலங்காய், நிலக்கடலை, மீன், கருவாடு, அதிக காரம், அதிக புளிப்பு, கொத்தவரங்காய், பீன்ஸ் ஆகியவற்றைச் சாப்பிடக்கூடாது.
15. கோதுமையை நல்லெண்ணெயுடன் சமைத்துச் சாப்பிடக்கூடாது.
16. மூட்டுவலி, வாத நோயாளிகள், அசைவ உணவுகள், முட்டை, கிழங்கு வகைகளைச் சாப்பிடக்கூடாது.

## மாரடைப்பு ஆபத்தை தடுக்கும் ரம்புட்டான் பழம்



ரம்புட்டான், ஒரு சுவையான மற்றும் சத்தான பழம். இது மருத்துவ ரீதியாகவும் பல வகைகளில் பயன்படுத்தப்படுகிறது. இந்த பழத்தின் வெளித்தோற்றம் முள் போன்று கரடுமுரடாக இருந்தாலும், உள்ளே இருக்கும் பழம் இனிப்பு மற்றும் புளிப்பு சுவை கலந்து ருசியாகவே இருக்கும். இந்த பழத்தின் தாயகம் மலேசியா மற்றும் இந்தோனேஷியா. தமிழ்நாட்டிலும் குறிப்பிட்ட பகுதிகளில் விளைகிறது. ரம்புட்டான் பழம், காயாக இருக்கும் போது பச்சை நிறத்திலும், பழுத்த பிறகு சிவப்பு அல்லது மஞ்சள் நிறமாகவும் மாறும்.

ரம்புட்டான் பழத்தில் கலோரி, வைட்டமின் சி, இரும்புச்சத்து, ஆன்டி ஆக்சிடென்ட், பொட்டாசியம், மெக்னீசியம், பாஸ்பரஸ், கார்போஹைட்ரேட், புரதம் ஆகிய சத்துக்கள் நிறைந்துள்ளன. உடல் பருமனால் அவதிப்படுவோர், ரம்புட்டானை அடிக்கடி சாப்பிடலாம். இதில் நீர்ச்சத்து அதிகம் இருப்பதால், நாக்கு வறண்டு போவதையும் தடுக்கும். இப்பழத்தில் உள்ள கார்போஹைட்ரேட், புரதம் ஆகிய சத்துக்கள், உடல் உழைப்புக்கு தேவையான ஆற்றலை அதிகரிக்க உதவும். உடல் சீரான வளர்ச்சி பெறவும் முக்கிய பங்காற்றும். ஆஸ்துமா மற்றும் நீரிழிவு நோயை கட்டுப்படுத்தும். கண் ஆரோக்கியத்தையும் காக்கும். உடலில் கெட்ட கொழுப்பை சேரவிடாமல் தடுக்கவும் செய்யும். இதனால், மாரடைப்பு அபாயம் குறைகிறது.

ரம்புட்டான் பழத்தை அடிக்கடி சாப்பிடுவதால், தலைமுடி, தோல் மற்றும் கை, கால் நகங்கள் பளபளப்புடன் இருக்கும். எலும்பு மண்டல வளர்ச்சிக்கு உதவக்கூடிய கால்சியம், பாஸ்பரஸ் போன்ற சத்துக்களும் இதில் உள்ளன. இரண்டு ரம்புட்டான் பழங்களை உட்கொள்வதன் மூலம் தினசரி வைட்டமின் சி தேவையை பூர்த்தி செய்ய முடியும். இதில் பாஸ்பரஸ் இருப்பதால் சிறுநீரகத்தில் இருந்து தேவையற்ற கழிவுகளை வெளியேற்ற உதவும். மேலும் திசுக்கள் மற்றும் உடல் உயிரணுக்களின் வளர்ச்சி, புத்துணர்ச்சி மற்றும் பராமரிப்பு போன்ற செயல்களில் இந்த பழம் முக்கிய பங்கு வகிக்கிறது.

ரம்புட்டானில் கலோரிகள் குறைவாகவும், நார்ச்சத்து அதிகமாகவும் உள்ளது. அதனால் நீண்ட நேரம் வயிறு நிரம்பிய உணர்வைத் தரும். அதிகமாக சாப்பிட தோன்றும் எண்ணத்தையும் குறைத்துவிடும். இந்த பழத்தில் உள்ள கரையக்கூடிய நார்ச்சத்து தண்ணீரில் கரைந்து குடலில் ஜெல் போன்ற ஒரு பொருளை உருவாக்குகிறது. இந்த ஜெல் போன்ற பொருள் செரிமானத்தையும் ஊட்டச்சத்துக்களை உறிஞ்சுவதையும் மெதுவாக்க உதவுகிறது, இதனால் பசி உணர்வு குறைகிறது.

இந்த பழம், பல ஆரோக்கிய நன்மைகளைக் கொண்டிருந்தாலும், உயர் ரத்த அழுத்தம் உள்ளவர்கள், சர்க்கரை நோயாளிகள், கர்ப்பிணிகள் மருத்துவரின் ஆலோசனைப்படி தான் சாப்பிட வேண்டும். வழுவழுப்பான இந்த பழத்தை குழந்தைகள் சாப்பிடும் பொழுது தொண்டையில் சிக்கிக் கொள்வதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது. இதனை கருத்தில் கொண்டு கவனத்துடன் குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டும்.

## வாக்குவம் கிளீனரை வாங்கும்போது கவனிக்க வேண்டியவை...



வீடுகளை சுத்தப்படுத்தும் வாக்குவம் கிளீனர்களை வாங்குவதாக இருந்தால், ஒருசில விஷயங்களை கவனத்தில் கொண்டு வாங்க வேண்டும். குறிப்பாக உங்கள் வீட்டுத் தேவைகளை முதலில் கருத்தில் கொள்ள வேண்டும். குப்பையை உறிஞ்சும் திறன், உங்கள் வீட்டின் தளம் (டைல்ஸ், தரைவிரிப்புகள், மரம்) போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு கிளீனரின் வகையை (கம்பியில்லா, தரைவிரிப்புக்கான, ரோபோடிக்) தீர்மானிக்க வேண்டும். கூடுதலாக, சக்கரங்கள், நீளமான வயர், குறைந்த சத்தம் மற்றும் நீடித்து உழைக்கும் தன்மையுடன் கூடிய சக்கரங்கள் போன்ற வசதிகளையும் கவனிக்க வேண்டும். அப்படி நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டியவை:

### * தரை வகைகள்

உங்கள் வீட்டின் தரைப்பகுதியானது, எப்படி கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதை பொறுத்துதான், வாக்குவம் கிளீனரை தேர்வு செய்யமுடியும். தரைவிரிப்புகள், டைல்ஸ், மரம் சார்ந்த தரை வேலைப்பாடுகள் என மாறக்கூடிய கட்டமைப்புகளுக்கு ஏற்ப, அவற்றை சுத்தமாக்கக்கூடிய வாக்குவம் கிளீனரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

### * பயன்பாட்டு வகைகள்


வயர் இணைப்பு கொண்ட வாக்குவம் கிளீனர், வயர் இல்லாத கையடக்க கிளீனர், தூசியை மட்டும் சுத்தம் செய்யும் கிளீனர், தூசியுடன் சேர்த்து அசுத்த நீரையும் உறிஞ்சி எடுக்கும் கிளீனர் என பல வகைகள் இருக்கின்றன. சமீபகாலமாக ரோபோட்டிக் வகையிலான, தானாக நகரும் வாக்குவம் கிளீனர்களும் உள்ளன. நம்முடைய தேவையும், வீட்டின் கட்டமைப்புதான், வாக்குவம் கிளீனரை தீர்மானிக்கின்றன.

### * உறிஞ்சி திறன்

750 வாட்ஸ், 1000 வாட்ஸ், 1250 வாட்ஸ் என தூசியையும், அசுத்த தண்ணீரையும் உறிஞ்சக்கூடிய மோட்டார்களும், ஒவ்வொரு வாக்குவம் கிளீனருக்கு ஏற்ப மாறுபடும். அதனால், நீங்கள் தேர்ந்தெடுக்கக்கூடிய வாக்குவம் கிளீனர்கள், அதிகமாக உறிஞ்சும் திறனை பெற்றிருக்க வேண்டும்.

### * சுலபமான பயன்பாடு

வாக்குவம் கிளீனர்களை கொண்டு, வீட்டின் எல்லா அறைகளையும் சுத்தம் செய்ய இருந்தால் சில விஷயங்களை கவனித்து வாங்க வேண்டும். அதாவது, சக்கரங்கள் இருக்கக்கூடியதாக, நீளமான மற்றும் பல்வேறு வடிவங்களை கொண்ட உறிஞ்சு குழாய் இருக்கக்கூடிய வாக்கும் கிளீனரை தேர்வு செய்வதன் மூலம் விரும்பிய இடங்களில் சுலபமாக நகர்த்தலாம், சுத்தம் செய்யும் பணிகளை மேற்கொள்ளலாம். மேலும் சிறு குழந்தைகள் இருக்கும் வீடுகளாக இருந்தால், சத்தமில்லாத வாக்குவம் கிளீனர்களை தேர்ந்தெடுப்பது நல்லது.



## எஸ்ஜஆர் படிவங்களை பதிவேற்றம்செய்யும் பணி



கும்பகோணம் தொகுயில் எஸ்ஜஆர் படிவங்களை பதிவேற்றம்செய்யும் பணிகளை கலெக்டர் பிரியங்கா பங்கஜம் பார்வையிட்டார்.

# உளுந்தூர்பேட்டை அடுத்த ஆசனூர் சிப்காட்டில் புதிதாக காலணி தொழிற்சாலை

உளுந்தூர்பேட்டை, நவ.17:

உளுந்தூர்பேட்டை அடுத்த ஆசனூர் சிப்காட்டில் புதிதாக காலணி தொழிற்சாலை அமைக்கப்பட்டு வருகிறது.

இந்த தொழிற்சாலைக்கு உயிர் அழுத்த மின் இணைப்பு வழங்குவதற்காக தொழிற்சாலை வளாகத்தை திருவண்ணாமலை மண்டல மின்வாரிய தலைமை பொறியாளர் பழனிராஜு ஆய்வு செய்தார் உயர் அழுத்த மின் கோபுரங்கள் அமையவிருக்கும் இடங்களை பார்வையிட்டு விரைவாக மின் இணைப்பு வழங்கக்கூடிய சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்தார் .

இந்த ஆய்வின்போது கள்ளக்குறிச்சி மின் பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் பாரதி செயற்பொறியாளர்கள் மயில்வாகனன் கணேசன் உளுந்தூர்பேட்டை மின்வாரிய உதவி செயற்பொறியாளர் சிவராமன் அய்யம் பெருமாள் உதவி செயற்பொறியாளர்கள் விஜய் சுதா ஆசனூர் இளநிலை பொறியாளர் ராமச்சந்திரன் உள்ளிட்ட மின்வாரிய அலுவலர்கள் கலந்து கொண்டனர்





## திருச்செந்தூரில் அலை மோதிய பக்தர்கள்.



விடுமுறை தினமான நேற்று திருச்செந்தூரில் அலை மோதிய பக்தர்கள்.

## தவெக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்



கோவை மாவட்ட தவெக சார்பில் நேற்று நடந்த எஸ்ஜஆர் குளறுபடி கண்டன ஆர்ப்பாட்டத்தில், கோவை மாவட்டச் செயலாளர்கள் சம்பத், விக்னேஷ், பாபு, யுவராஜ் உள்பட திரளானவர்கள் பங்கேற்றனர்.

## பாக முகவர்களுடன் முன்னாள் அமைச்சர் ஆலோசனை



கூத்தாநல்லூரில் அதிமுக பாக முகவர்களுடன் முன்னாள் அமைச்சர் காமராஜ் ஆலோசனை நடத்தினார்.

## மாணவ-மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டி





பல்லடம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாணவ-மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகளை அமைச்சர்கள் சுவாமிநாதன், கயல்விழி வழங்கினர்.

## வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி



கோவை மாநகராட்சி வடவள்ளியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை கலெக்டர் பவன்குமார் நேற்று ஆய்வு செய்தார்.

## விழிப்புணர்வு கூட்டம்



துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் இளம்பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு (SIR) சிறப்பு தீவிர திருத்த முகாம் குறித்து நடந்த விழிப்புணர்வு கூட்டத்தில் அமைச்சர் சேகர்பாபு பேசினார்.

## தேவாங்கு பாதுகாப்பு விழிப்புணர்வு மாரத்தான்



வடமதுரை இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் சார்பில் தேவாங்கு பாதுகாப்பு விழிப்புணர்வு மாரத்தான் நேற்று நடந்தது.

## திமுக 75 அறிவுத் திருவிழா



சென்னை வள்ளுவர் கோட்டத்தில், திமுக 75 அறிவுத் திருவிழாவில் துவங்கிய முற்போக்கு புத்தகக் காட்சி நிறைவு நாளான நேற்று முதல்வர் ஸ்டாலின் வருகை தந்து, ஒவ்வொரு அரங்காக சென்று, நிறைய புத்தகங்களை, தன் நூலகத்திற்காக வாங்கினார். உடன் துணை முதல்வர் உதயநிதி.

## மாற்றுக் கட்சியினர்கள் திமுக வில் இணைந்தனர்



காங்கேயத்தில் அமைச்சர் சுவாமிநாதன் முன்னிலையில் மாற்றுக் கட்சியினர்கள் தங்களை திமுக வில் இணைத்து கொண்டனர். திருப்பூர் கிழக்கு, தெற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர்கள் இல. பத்மநாபன், ஈஸ்வரசாமி எம்.பி., மற்றும் திமுக நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

## 4 இணைகளுக்கு திருமணம்



சென்னை, கொளத்தூர் அருள்மிகு சோமநாத சுவாமி திருக்கோயில் சார்பில் நேற்று 4 இணைகளுக்கு அமைச்சர் சேகர்பாபு திருமணத்தை நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார்.

## பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவி, அன்னதானமும்



சென்னை 132வது வட்டம், ரங்கராஜபுரம் பிரதான சாலையில், நேற்று பாஜக செயலாளர் வினோஜ் செல்வம், பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளையும், அன்னதானமும் வழங்கினார்.உடன் பாஜக மருத்துவ அணி தலைவர் பிரேம்குமார் உள்ளார்.

## எஸ்ஜஆர் படிவங்களை பூர்த்தி செய்ய மையம் அமைத்து பாஜக சார்பில் உதவி



சென்னை திநகரில் எஸ்ஜஆர் படிவங்களை பூர்த்தி செய்ய பாஜக சார்பில் முக்கிய இடங்களில் மையம் அமைத்து பொதுமக்களுக்கு உதவினர்.

## தவெக ஆர்ப்பாட்டம்



மதுரையில் நேற்று நடந்த தவெக ஆர்ப்பாட்டத்தில் கட்சியின் நிர்வாகி நிர்மல்குமார் பங்கேற்றார்.

## சிலம்ப போட்டியினை அமைச்சர் கீதா ஜீவன் துவக்கி வைத்தார்



தூத்துக்குடி சட்டமன்ற தொகுதியில் உலக மீனவர் தினத்தை முன்னிட்டு திரேஸ்வரம் பகுதி சிறுமலர் ஆர் சி உயர்நிலைப்பள்ளியில் சிலம்ப போட்டியினை அமைச்சர் கீதா ஜீவன் துவக்கி வைத்தார்.

## படகு போட்டி துவக்கம்



உலக மீனவர் தினத்தை முன்னிட்டு முத்து நகர் கடற்கரை பகுதியில் நடைபெற்ற படகு போட்டியினை அமைச்சர் கீதாஜீவன் நேற்று துவக்கி வைத்தார்.




## 7 புதிய தாழ்தள பேருந்து



சென்னை அடையாறிலிருந்து தாம்பரம் மேற்கு வரை புதிய பேருந்து வழித்தடத்தில் (வழித்தடம் எண் 96) 7 புதிய தாழ்தள பேருந்துகளை பள்ளிக்கரணையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்.

## நலத்திட்ட உதவிகளை துணை முதல்வர் உதயநிதி வழங்கினார்.



சிங்கம்புணரியில் நேற்று முன்தினம் நடந்த அரசு விழாவில் சுமார் 8500 பயனாளிகளுக்கு பல்வேறு துறைகளின் சார்பில் ரூ89 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை துணை முதல்வர் உதயநிதி வழங்கினார். உடன் அமைச்சர் பெரியகருப்பன், தமிழரசி எம்எல்ஏ உள்ளனர்.

## நயினார்நாகேந்திரன் பரப்புரை



கோவில்பட்டியில் பாஜக மாநிலத் தலைவர் நயினார்நாகேந்திரன் பரப்புரை மேற்கொண்டார். உடன் கடம்பூர் ராஜூ எம்எல்ஏ, வக்கீல் ராதாகிருஷ்ணன் உள்ளனர்.

## எஸ்ஜஆர் வாக்காளர் பதிவு



திருவெறும்பூர் தொகுதியில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வீட்டுக்கு வந்த எஸ்ஜஆர் வாக்காளர் பதிவு அலுவலரிடம் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து, பட்டியலில் தனது பெயரை உறுதிப்படுத்திக்கொண்டார்.

## கலைக்குழுவினருடன் அமைச்சர் சுவாமிநாதன்



இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி 2025 டெல்லியில் நடந்த தமிழ்நாடு நாள் விழாவில் கலைக்குழுவினருடன் அமைச்சர் சுவாமிநாதன்.

## சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு ஹெல்மெட் பேரணி



கோவையில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு ஹெல்மெட் பேரணியை மாநகர் துணை ஆணையர் துவக்கி வைத்தார்.

# சுற்றுலா: காலத்தால் அழியாத செஞ்சிக் கோட்டை!



தென் இந்தியாவில் கண் என்று அழைக்கப்படும் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடமாக இருக்கும் செஞ்சிக்கோட்டை, விழுப்புரம் மாவட்டத்தில் சிறந்த சுற்றுலா தலமாக விளங்கி வருகிறது.

செஞ்சிக் கோட்டையை ஆட்சி புரிந்த ராஜாதேசிங்கு உள்ளிட்ட வீரமிக்க மன்னர்களைப் போன்று கம்பீரமாக விண்ணை முட்டி நிற்கிறது செஞ்சிக்கோட்டை. கால மாற்றங்களையும், பல்வேறு படையெடுப்புகளையும் முறியடித்து காட்சி தருகிறது செஞ்சிக்கோட்டை. கடைசி மன்னராக செஞ்சிக்கோட்டையை ஆண்ட ராஜா தேசிங்கு வாழ்ந்த இடம், போரிட்ட இடம், மரணம் தழுவிய இடம், தேசிங்கின் மனைவி ராணிபாய் உடன்கட்டை ஏறிய இடம் என பார்த்து பரவசம் அடைய ஏராளமான வரலாற்று நினைவிடங்களை தன்வசம் வைத்துள்ளது இந்த இடம்.

வியப்பில் ஆழ்த்தும் கட்டட கலைக்கு எடுத்தக்காட்டாக கலைநயத்துடன் கல்லில் கட்டப்பட்ட கம்பீரமான கட்டுமானத்தை கண்டு வியப்படையாதவர்களே இல்லை. தேசிங்குராஜன் ஆட்சி செய்த 17-ம் நூற்றாண்டின் வரலாற்றின் காலத்திற்கே நம்மை அழைத்து செல்லும் இடமாக விளங்கி வருகிறது இந்த செஞ்சிக் கோட்டை. இதற்குள் நுழையும் போது நமக்கு தேசிங்கு ராஜாவின் ஆட்சி முறை மற்றும் அந்த கட்டடக் கலையின் நுணுக்கங்கள் பற்றி எடுத்துச் சொல்லவோ அல்லது அதைப் பற்றிய விவரங்களை ஏற்கனவே அறிந்து வைத்துக் கொள்வதோ மிகவும் நல்லது.

கோட்டையைப் பார்த்து விட்டு வெளியே வரும்போது நாம் இந்த நூற்றாண்டை அடைந்து விட்டோம் என்ற உணர்வு அனைவருக்கும் ஏற்படும். வரலாற்றுச் சிறப்பு மிக்க செஞ்சிக்கோட்டை கொத்தலங்களை பார்ப்பதன் மூலம் வரலாற்றை படிப்பதில் இருக்கும் ஆர்வத்தை விட வரலாற்றை நேரில் பார்த்த அனுபவம் ஏற்படும். இந்திய தொல்லியல்துறையின் முழு கட்டுப்பாட்டின்கீழ் உள்ள செஞ்சிக் கோட்டையில் சுற்றுலாப் பயணிகளுக்கு சில அடிப்படை வசதிகள் செய்து பழமை மாறாமல் பராமரிக்கப்பட்டு வருகிறது.

ஆனால் அதிகாரபூர்வமாக செஞ்சிக் கோட்டையை தமிழ்நாடு அரசு சுற்றுலா மையமாக அறிவிக்காததும், தமிழ்நாடு அரசு சார்பில் செஞ்சிக்கோட்டையில் எந்த ஒரு இடத்திலும் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதியை செய்து தரவில்லை என்பதும் வேதனைக்குரியது.

ராஜா கோட்டையின் கீழே பார்க்க வேண்டிய இடங்கள்

சிவன் கோயில், அம்மன் ஆலயம், வேலூர் வாயில், சாதத்துல்லாகான் மசூதி, பாண்டிச்சேரி வாயில், வெங்கடரமணர் ஆலயம், சுழலும் பீரங்கிமேடை, உளி வளிக்கும் கல் பட்டறை, கல்யாண மஹால், முகமதுகான் மசூதி, அரண்மனை வளாகம், பணியாளர்கள் தங்கும் அறை, கல்யாண மஹால், குதிரை லாயம், யானைக்குளம், ஆயுதக் கிடங்கு, உடற்பயிற்சி அரங்கம், வெடி மருந்துக் கிடங்கு, நெல் களஞ்சியம், வேணுகோபாலசுவாமி கோயில், ஜும்மா மசூதியின் கலை பாணி, தேசிங்குராஜன் உடல் எரியூட்டப்பட்ட இடம், ஏழு கன்னிமார் கோயில், சர்க்கரை குளம், செட்டிக்குளம், ஆஞ்சநேயர் கோயில், மரணக்கிணறு ஆகியவை பார்க்க வேண்டிய முக்கிய இடங்களாகும்.

ராஜகிரி மலை மீது பல அற்புதங்களை கொண்ட கலைநயத்துடன் விளங்கும் கட்டடங்கள் கலைநயம் மிக்க கோயில்கள், அரண்மனைகள் மற்றும் பாலரங்கநாதர் கோயில், கமலக்கண்ணி அம்மன் கோயில், சுனை நீர், இழுவை பாலம், மணிக்கூண்டு, பீரங்கிஎன அற்புதமான இடங்களை கோட்டையின் மீது ஏறிச் சென்று பார்த்து பரவசம் அடையலாம்.

திருவண்ணாமலை சாலையில் அமைந்துள்ள ராணிக்கோட்டையை அந்த பக்கம் பயணம் செய்வோர் பார்க்காமல் செல்ல முடியாது. அற்புதமான அழகுடன் காட்சி அளிக்கும் ராணிக்கோட்டையைப் பார்க்க பார்க்க அழகுதான். இயற்கை எழிலுடன் கட்டப்பட்ட மலைக்கோட்டைதான் ராணிக்கோட்டை. கோட்டை மீது சுழலும் பீரங்கிமேடை, நெற்களஞ்சியம், அரங்கநாதர் ஆலயம், எண்ணெய்க் கிணறு, அழகிய கட்டட கலைநயத்துடன் கூடிய தர்பார் மண்டபம், கிருஷ்ணர் கோயில், மலையடிவாரத்தில் உள்ள பூவாத்தமன் கோயில் என பார்க்க பல இடங்கள் உள்ளன. வரலாற்றின் முந்தைய காலத்தையும் அவர்கள் வாழ்ந்த விதம் மற்றும் கடைசியாக மன்னர்கள் மற்றும் குறுநில மன்னர்கள், ஆங்கிலேயர்கள் வரை ஆண்ட செஞ்சிக்கோட்டையை அவசியம் பார்த்து பயனுள்ளதாக்குவோம்.

சென்னையில் இருந்து 150 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது செஞ்சிக்கோட்டை. விழுப்புரத்தில் இருந்து 37 கிலோ மீட்டரும், திண்டிவனத்தில் இருந்து 27 கிலோ மீட்டர் தூரமும், திருவண்ணாமலையில் இருந்து 38 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. செஞ்சிக் கோட்டையை பார்க்க வருவதற்கு பேருந்து தான் வசதியாக இருக்கும். கோட்டை வாயிலுக்கு அருகிலேயே பேருந்து நிறுத்தம் உள்ளது.

## வேலைவாய்ப்பு கார்னர்

### பேக்கரி பொருள்கள் தயாரித்தல் பயிற்சிக்கு விண்ணப்பிப்பது எப்படி?

தினை வகைகள் கொண்டு பேக்கரி பொருள்கள் தயாரித்தல் பயிற்சி தமிழ்நாடு அரசால் 3 நாள்கள் வழங்கப்படுகிறது.

தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சென்னையில், 3 நாள்கள் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம் தினை வகைகள் கொண்டு பேக்கரி பொருள்கள் தயாரித்தல் பயிற்சி வரும் 25.11.2025 முதல் 27.11.2025 தேதி வரை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற உள்ளது. இந்த பயிற்சியில் பேக்கரி பொருள்களின் கோதுமை வெண்ணெய் பிஸ்கட், தினை பால் பிஸ்கட், தினை ஜீரா குக்கீ, செரிமான குக்கீகள், ராகி நட்ஸ் குக்கீகள், மல்டிமில்லட் குக்கீகள், சோளம் சாக்லேட் பிஸ்கட், கம்பு நெய் பிஸ்கட், கருப்பு கவுனி பாதாம் குக்கீ, தினை ஓமம் பிரவுன் குக்கீ, பிரவுன் ஓமம் பிரவுன் குக்கீ, ராகி, சாமாமில் பிரவுன் குக்கீ ஃபட்ஜி பிரவுனி, கருப்பு கவுனி பிரவுனி, டபுள் சாக்லேட் பிரவுனி, கோதுமை வெண்ணிலா பஞ்சு, ராகி சாக்லேட் கேக், தினை வாழை கேக், சோளம் கேரட் இலவங்கப்பட்டை கேக், முழு கோதுமை ரொட்டி, ராகி தினை ரொட்டி, மல்டிமில்லட் ரொட்டி, பால் ரொட்டி வகைகள் எப்படி தயாரிப்பது குறித்து இந்த பயிற்சியில் விளக்குவார்கள். மேலும், அரசு வழங்கும் உதவிகள் மற்றும் மானியங்கள் குறித்தும் விளக்கம் அளிக்கப்படும்.

இந்த பயிற்சியில் 18 வயதுக்கு மேற்பட்ட குறைந்தபட்சம் பத்தாவது தேர்ச்சி பெற்ற ஆர்வமுள்ள தொழில்முனைவோர் (இருபாலரும்) விண்ணப்பிக்கலாம். இந்த பயிற்சியில் பங்குபெற வருபவர்களுக்கு குறைந்த வாடகையில் தங்கும் விடுதி வசதியும் உள்ளது. தேவைப்படுவோர் இதற்கு விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம். இந்த பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்கள் தேவைப்படுவோர் www.editn.in என்ற இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை படித்து தெரிந்து கொள்ளலாம்.

மேலும், அலுவலக வேலை நாள்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை, இடிஐஐ அலுவலக சாலை ஈக்காட்டுத்தாங்கல், சென்னை 600 032 என்ற முகவரியிலோ அல்லது 86681 02600 / 99436 85468 தொலைபேசி , கைபேசி எண்கள் தொடர்பு கொண்டு தெரிந்துகொள்ளலாம். பயிற்சியில் பங்குபெறுபவர்களுக்கு அரசு சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சியில் பங்குபெற முன்பதிவு அவசியம்.

## 1 முதல் பிளஸ் 2 வரை அரையாண்டுத் தேர்வு: டிச. 10ல் தொடக்கம்

**சென்னை, நவ.17:**

1 முதல் பிளஸ் 2 வரையிலான வகுப்புகளுக்கு அரையாண்டுத் தேர்வு தொடங்கும் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பள்ளிக் கல்வித் துறை இயக்குநரக அறிவிப்பு விவரம்: தமிழகத்தில் பள்ளிக்கல்வி பாடத்திட்டத்தைப் பின்பற்றும் அனைத்து விதமான பள்ளிகளிலும் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான அரையாண்டுத் தேர்வு டிசம்பர் 10 முதல் 23 ஆம் தேதி வரை நடத்தப்பட உள்ளது.

இதில் 10, 11, 12 ஆம் வகுப்புகளுக்கு டிச. 10 ஆம் தேதியும், 6 முதல் 9 ஆம் வகுப்புகளுக்கு டிச.15 ஆம் தேதியும் தேர்வுகள் தொடங்கும். இதற்குரிய பாடவாரியான கால அட்டவணை பள்ளிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதேபோல், தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5-ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கான தேர்வு டிசம்பர் 15-ல் தொடங்கி 23-ம் தேதி வரை முடிவடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சென்னை வள்ளுவர் கோட்டத்தில் புத்தக காட்சியை பார்வையிட்ட முதல்வர் ஸ்டாலின்

**சென்னை, நவ.17:**

சென்னை வள்ளுவர் கோட்டத்தில் திமுக இளைஞரணி சார்பில் நடைபெறும் முற்போக்கு புத்தக காட்சியை முதல்வர் ஸ்டாலின் பார்வையிட்டார்.

இதுகுறித்து முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில், திமுக75_அறிவுத்திருவிழா முற்போக்குப் புத்தகக் காட்சி: கொள்கைக் கருவூலம்!

வள்ளுவர் கோட்டத்தில் இரண்டு மணி நேரத்துக்கு மேல் இருந்து திராவிடம், அம்பேத்கரியம், கம்யூனிசம், பெண்ணியம் என அணிவரிசையில் அமைந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட அரங்குகளைப் பார்வையிட்டு, அங்கு வந்திருந்த வாசகர்கள், ஆர்வலர்கள், பதிப்பகத்தாருடன் உரையாடியது மனநிறைவளிக்கும் அனுபவமாக அமைந்தது.

குறிப்பாக, 'CARRY ON, BUT REMEMBER' எனும் பேரறிஞர் அண்ணா அவர்கள் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரைகளின் தொகுப்பைக் கண்டதும் நம் அண்ணன் அன்று விடுத்த எச்சரிக்கை இன்றைய ஒன்றிய ஆட்சியாளர்களுக்கும் பொருத்தமாக இருக்கிறதே என வியந்தேன். என் பங்கிற்கு, அறுபதுக்கும் மேற்பட்ட நூல்களை வாங்கிவிட்டேன்.

வாசிப்பை ஊக்குவிக்கும் தவறவிடக்கூடாத நிகழ்வாக இதனை நடத்திக் காட்டியுள்ள உதயநிதி மற்றும் அவரது திமுக இளைஞர் அணிக்கும் மீண்டுமொருமுறை எனது பாராட்டுகள்! வரும் ஆண்டுகளிலும் தொடரட்டும் அறிவுத்திருவிழா! இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

திமுகவின் 75வது ஆண்டு நிறைவை முன்னிட்டு, சென்னை வள்ளுவர் கோட்டத்தில் திமுக இளைஞர் அணி சார்பில் 'திமுக 75 அறிவுத் திருவிழா கடந்த 8ஆம் தேதி தொடங்கியது. இதையொட்டி அன்றைய தினம் தொடங்கப்பட்ட சென்னை முற்போக்கு புத்தக காட்சி இன்றுடன் நிறைவடைகிறது.

## சென்னையில் '96' என்ற புதிய அரசுப் பேருந்து வழித்தடம் தொடக்கம்



**சென்னை, நவ.17:**

சென்னையில் '96' என்ற புதிய அரசுப் பேருந்து வழித்தடம் தொடக்கப்பட்டுள்ளது.

சென்னையில் '96' என்ற புதிய அரசுப் பேருந்து வழித்தடம் தொடக்கப்பட்டுள்ளது.

தாம்பரம் மேற்கு பேருந்து நிலையம் முதல் அடையாறு பேருந்து நிலையம் வரை 96 என்ற புதிய வழித்தடத்தை சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகம் அறிமுகம் செய்தது.

இதற்கான 7 பேருந்துகள் இயக்கத்தை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சுப்பிரமணியன் இன்று பள்ளிக்கரணையில் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

கேம்ப் ரோடு, பள்ளிக்கரணை, காமாட்சி மருத்துவமனை, துரைப்பாக்கம், கந்தன்சாவடி வழியாக அடையாறு சென்றடையும்.

இந்நிகழ்வில், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், மாநகரப் போக்குவரத்துக் கழக பொது மேலாளர் (இயக்கம்), பொது மேலாளர் (தெற்கு) மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

## "பா.ஜ.க,வின் அடுத்த பயணம் தமிழகத்தை நோக்கி": நயினார் நாகேந்திரன் தகவல்



**சென்னை, நவ.17:**

பா.ஜ.க,வின் அடுத்த பயணம் தமிழகத்தை நோக்கியது என்று நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

தமிழக பா.ஜ.க., தலைவர் நாகேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தேர்தலில் வெற்றி பெற்றால், தேர்தல் கமிஷனை கொண்டாடுவதும், தோல்வி அடையும்போது, அதே தேர்தல் கமிஷனை சாடுவதும்தான், காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் வாடிக்கை.

பா.ஜ.க., எனும் பெரும் சக்தியின் அடுத்த பயணம், தமிழகத்தை நோக்கியே. 'ஆடத்தெரியாதவன் தெரு கோணல்' என்று சொல்லும் கதையாக, மக்களின் ஆதரவை பெற முடியாதவர்கள் தான், தேர்தல் கமிஷனின் நேர்மையை குறை சொல்வர். தேர்தல் கமிஷன் நடத்திய, தேர்தல் வாயிலாக கிடைத்த, எம்.பி., - எல்.எல்.ஏ., பதவிகளில் அமர்ந்து, அதே தேர்தல் கமிஷன் மீது, சந்தேக கற்களை வீசும் ஆட்கள், செக்கிற்கும், சிவலிங்கத்திற்கும் வித்தியாசம் தெரியாத ஜந்துக்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## 3% அகவிலைப்படி உயர்வு: அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் முதல்வரை சந்தித்து நன்றி

**சென்னை, நவ.17:**

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 3 சதவிகித அகவிலைப்படி உயர்த்தி அறிவித்ததற்கு பல்வேறு அரசு அலுவலர் சங்கங்கள், ஆசிரியர் சங்கங்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்தனர்.

முதலமைச்சர் ஸ்டாலின் கடந்த 13ந் தேதி அன்று அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 55 சதவிகிதமாக இருந்த அகவிலைப்படியை 1.7.2025 முதல் 58 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்தார்.




இதையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், தமிழ்நாடு சட்டமன்றச் செயலக நிருபர்கள் சங்கம், வருவாய்த் துறை சங்கங்களின் கூட்டமைப்பு, தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு, தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சுப் பணி அலுவலர்கள் சங்கம், தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கூட்டமைப்பு, தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம், ஜே.எஸ்.ஆர். தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி, நர்சுகள் பொதுநல சங்கம், தமிழக தமிழாசிரியர் கழகம், தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் ஒன்றியம், தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளி முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் கழகம், நேரடி நியமனம் பெற்ற முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து, நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நிதித் துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், மனிதவள மேலாண்மைத்துறை செயலாளர் என். சுப்பையன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# உலக சர்க்கரை நோய் தினத்தையொட்டி சர்க்கரை நோயாளிகளுக்கு 30-ந் தேதி வரை இலவச கண் பரிசோதனை

**சென்னை, நவ. 17:**

உலக சர்க்கரை நோய் தினத்தையொட்டி சர்க்கரை நோயாளிகளுக்கு வருகிற 30-ந் தேதி வரை இலவச கண் பரிசோதனை மேற்கொள்ளப்படும் என டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை அறிவித்துள்ளது.

உலக சர்க்கரை நோய் தினத்தையொட்டி டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை சார்பில் சர்க்கரை நோயால் ஏற்படும் கண் படல நோய் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு சென்னையில் நடந்தது.

இந்த கருத்தரங்கிற்கு டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனையின் தலைமை மருத்துவ அதிகாரி டாக்டர் அஷ்வின் அகர்வால் தலைமை தாங்கினார்.

கருத்தரங்கில் அவர் பேசியதாவது:-

நீண்டகால சர்க்கரை நோய் பாதிப்பு காரணமாக கண்விழி படலம் பாதிக்கப்படும். இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு மருத்துவ சிகிச்சைகள் இருந்தாலும் முன்கூட்டியே இந்த பாதிப்பு வராமல் தடுப்பது தான் சரியாக இருக்கும். இதற்காகவே இதுபோன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறோம். சர்க்கரை நோய் ஓசையின்றி பார்வையிழப்பை ஏற்படுத்தக்கூடியது. தொடர்ச்சியான கண் பரிசோதனை மூலம்



பார்வையிழப்பை தடுக்கலாம். குறிப்பாக 50 வயதுடையோருக்கு இந்த பரிசோதனை மிக அவசியம்.

இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து பேசிய டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனையின் மருத்துவ சேவைகள் பிரிவு மண்டல தலைவர் டாக்டர் சவுந்தரி, 'சர்க்கரை நோய் பாதிப்பு கட்டுப்பாட்டுக்குள் இல்லையென்றால் மெல்ல மெல்ல கண் பார்வையை நோயாளி இழக்க வேண்டியது வரும். நோய் பாதிப்பு அதிகமான பிறகே பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவமனையை நாடுகின்றனர். தொடர்ச்சியான கண் பரிசோதனை மூலம் ஆரம்ப நிலையிலே பிரச்சினையை கண்டறிய முடியும்.

டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனையில் வருகிற 30-ந் தேதி வரை சர்க்கரை நோயாளிகளுக்கு இலவச கண் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. மருத்துவ ஆலோசனை தேவைப்படின் அதற்கான கட்டணத்தில் 50 சதவீதம் தள்ளுபடி வழங்கப்படுகிறது. இலவச கண் பரிசோதனை மற்றும் ஆலோசனைக்கு 9594924048 என்ற செல்போனில் தொடர்பு கொள்ளலாம்' என்றார்.

## தொழில்நுட்ப /அறிவியல் செய்திகள்

# வானவில்லின் பின்புறத்தை காண முடியுமா?



வேடிக்கையாக வானத்தைப் பற்றி ஒரு கதை சொல்வதுண்டு. அப்பொழுதெல்லாம் வானம் தலைக்கு எட்டும்தூரத்திலிருந்த தாம். அப்பொழுது அதுமனிதனின் தலையை இடித்துக் கொண்டிருந்தது. அதனால் எட்டு வண்டி நூல் போட்டாலும் எட்டாமல் போகணும். 10 வண்டி நூல் போட்டாலும் பத்தாமல் போகணும் என்று மனிதன் கேட்க, வானம் மேலே சென்றதாக சிறுவயதில் கூறக் கேட்டிருக்கிறோம்.

அதுபோல் வானவில்லில் (Rainbow) ஒரு பகுதியைத் தான் நாம் பார்க்கிறோம். அதன் முழு பகுதியைப் பார்க்க முடியாததற்கு என்ன காரணம்?

நாம் பார்க்கும் சூரிய ஒளியில் பல நிறங்கள் உண்டு. ஆனால், அவை நம் கண்ணுக்குத் தெரிவதில்லை. மழை மேகங்கள் நீர்த் துளிகளாகச் சேர்ந்திருக்கும் சமயத்தில் தான் இந்த நிறங்களை பார்க்கின்ற வாய்ப்பு கிடைக்கும். வானவில்லின் நிறங்கள் ஏழு. அவை வயலட், இண்டிகோ, நீலம், பச்சை ,மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு. உண்மையில் வானவில்லில் இவை தவிரவும் நம் கண்களுக்கு தெரியாத நிறங்கள் பல உண்டு என்கின்றனர்.

ஒரு முப்பட்டகக் கண்ணாடியின் (Prism) ஒரு பக்கத்தில் ஒளியை பாய்ச்சினால் மறுபக்கத்தில் ஒளி ஏழு நிறங்களாக பிரியும் ஒளிச்சிதறல் பற்றி நாம் படித்திருக்கிறோம். இந்த ஒளிச்சிதறல் வேலையை முற்பட்டகக் கண்ணாடி செய்வதை போல், வானத்தில் மழை நீர் மேகங்கள் செய்கின்றன. சூரிய ஒளியை ஏழு நிறங்களாகப் பிரித்து வானவில்லாகக் காட்டுகின்றன.

வானவில்லின் பின்புறத்தை காண இயலுமா?என்றால் அது ஒருபோதும் முடியாது என்று தான் கூற முடியும். காரணம் ஆகாயத்தில் உள்ள நீர்த் திவலைகளின் மீது கதிரவன் ஒளி பட்டு பிரதிபலிப்பதாலேயே வானவில் தோன்றுகிறது. அப்போதே ஒளிவிலகலும் நிகழ்கிறது. இந்த ஒளி விலகலால் பல வண்ணங்கள் உண்டாகின்றன.

வானவில் தோன்றும் போது வானவில்லை பார்த்தபடி தான் நாம் நிற்போம். அப்பொழுது நம் முதுகு பக்கத்தில் தான் சூரியன் இருக்கும். அதுபோல் தான் முகம் பார்க்கும் கண்ணாடிக்கு முன் நின்று நாம் உருவத்தைக் கண்டால் அப்போது எப்படி கண்ணாடிக்கு பின்புறம் உருவம் இல்லாது இருக்கிறதோ, அது போலவே வானவில்லின் தோற்றமும் அமைகிறது என்பது தான் உண்மை. இதனால் தான் வானவில்லின் பின்புறத்தை எப்படி நின்று பார்த்தாலும் பார்க்க முடியாமல் போவதும்.

# சென்னையில் இன்று நடைபெறவிருந்த ஆர்ப்பாட்டம் 20ந் தேதிக்கு ஒத்திவைப்பு

**சென்னை, நவ.17:**

சென்னை மாவட்ட அண்ணா தி.மு.க. சார்பில் இன்று (17ந் தேதி) எழும்பூரில் நடைபெறவிருந்த அண்ணா தி.மு.க. ஆர்ப்பாட்டம் 20ந் தேதி ஒத்திவைக்கப்படுவதாக அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அண்ணா தி.மு.க. தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தப் பணிகளில், ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி திமுக-வினரால் நிகழ்த்தப்படும் பல்வேறு முறைகேடுகளுக்குக் காரணமான திமுக ஸ்டாலின் மாடல் அரசைக் கண்டித்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஒருங்கிணைந்த சென்னை மாவட்டங்களின் சார்பில், 17ந் தேதி --(நாளை) திங்கட் கிழமை காலை 10 மணியளவில், எழும்பூர் ருக்மணி லட்சுமிபதி சாலையில் உள்ள ராஜரத்தினம் ஸ்டேடியம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுவதாக, அனைத்திந்திய அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஏற்கெனவே அறிவித்திருந்தார். இந்நிலையில், சென்னை வானிலை ஆய்வு மையம் கனமழை பெய்யக்கூடும் என்று அறிவித்துள்ளதால், மேற்கண்ட கண்டன ஆர்ப்பாட்டம் ஒத்திவைக்கப்பட்டு 20ந் தேதி (வியாழக் கிழமை) காலை 10 மணியளவில், எழும்பூர் ருக்மணி லட்சுமிபதி சாலையில் உள்ள ராஜரத்தினம் ஸ்டேடியம் அருகில், மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வாறு அண்ணா தி.மு.க. தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.

# கொளத்தூர் சோமநாத சுவாமி கோயில் சார்பில் 4 ஜோடிகளுக்கு இலவசத் திருமணம்

**சென்னை, நவ.17:**

இந்து அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு இன்று (16ந் தேதி) சென்னை கொளத்தூர் சோமநாத சுவாமி கோயில் சார்பில் 4 ஜோடிகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருள்களை வழங்கினார்.

பின்னர், அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

கடந்த 4 ஆண்டுகளில் கோவில்கள் சார்பில் 2,800 ஜோடிகளுக்கு திருமணம் நடத்தி வைக்கப்பட்டு, சீர்வரிசைப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டில் மேலும் 1,000 திருமணங்களை நடத்திட முதலமைச்சர் உத்தரவிட்டிருக்கின்றார். இத்திருமணங்கள் வரும் மார்ச் மாத இறுதிக்குள் நடத்தி முடிக்கப்படும்.

கோவில்களின் சார்பில் மாற்றுத்திறனாளி இணைகளுக்கும் 4 கிராம் தங்கத் தாலியுடன் சீர்வரிசைப் பொருட்கள் வழங்கி இதுவரை 161 திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டுள்ளன. 400 ஆண்டுகள் பழமை வாய்ந்த கொளத்தூர், சோமநாத சுவாரி திருக்கோவிலுக்கு ரூ. 2.73 கோடி செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



நவம்பர் 30ம் தேதி குடமுழுக்கு நடத்தப்பட உள்ளது. இந்த அரசு பொறுபேற்ற நாள் முதல் இன்று நடைபெறும் 8 கோயில்களின் குடமுழுக்கையும் சேர்த்து இதுவரை 3,813 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. ரூ. 8,100 கோடி மதிப்பிலான 8,028 ஏக்கர் திருக்கோயில் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளதோடு, திருக்கோயில்களுக்கு சொந்தமான 2,20,502.84 ஏக்கர் நிலங்கள் அளவீடு செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளன.

இந்த அரசு பொறுப்பேற்ற பின் உபயதாரர்கள்கோயில்களின் திருப்பணிக்கு ரூ.1,547.57 கோடியினை நன்கொடையாக அளித்துள்ளனர். இது இந்து சமய அறநிலையத்துறையின் வரலாற்று சாதனையாகவும், உபயதாரர்கள் அரசின் மீதும், துறையின் மீதும் கொண்டுள்ள நம்பிக்கையின் வெளிப்பாடாகவும் திகழ்கிறது. இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் அறநிலையத்துறை மண்டல இணை ஆணையர்கள் ஜ.முல்லை, சு.மோகனசுந்தரம், மாநகராட்சி மண்டலக் குழுத்தலைவர் சரிதா மகேஷ்குமார், மாநகராட்சி உறுப்பினர் நாகராஜன், உதவி ஆணையர்கள் க.சிவக்குமார், கி.பாரதிராஜா, திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் மோகன், சந்துரு, மகேஷ்குமார் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

# வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்துக்கு எதிராக தமிழகம் முழுவதும் த.வெ.க. கண்டன ஆர்ப்பாட்டம்

**சென்னை, நவ.17:**

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழகம் முழுவதும் இன்று தமிழக வெற்றிக்கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்துக்கு தமிழக வெற்றிக் கழகம் எதிர்ப்பு தெரிவித்து உள்ளது. தமிழகத்தில் நடைபெறும், எஸ்.ஐ.ஆர்., எனப்படும் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணிக்கு, த.வெ.க.,வும் எதிர்ப்பு தெரிவிக்கிறது. இதற்காக, தமிழகம் முழுதும், த.வெ.க., சார்பில் இன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று தலைவர் விஜய் அறிவித்தார். சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிக்கு எதிராக தமிழகம் முழுவதும் நடைபெறும் போராட்டத்தில்




பலத்தை காட்ட வேண்டும்' என, கட்சியினருக்கு த.வெ.க., தலைவர் விஜய் நேற்று உத்தரவிட்டார்.

இதைத் தொடர்ந்து த.வெ.க. தலைவர் விஜய் உத்தரவின்பேரில் பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் வழிகாட்டுதலின் பேரில் இன்று தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் கலெக்டர் அலுவலகம் அருகே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சென்னை சிவானந்தா சாலையில் த.வெ.க. பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் தேர்தல் மேலாண்மை பிரிவு பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜூனா, மாவட்ட செயலாளர்கள், மாநில நிர்வாகிகள் மற்றும் திரளான தொண்டர்கள் பங்கேற்றனர்.வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், SIR நடவடிக்கையில் குளறுபடிகள் இருப்பதாகக் கூறி கணடன கோஷங்களை எழுப்பினர்.

சென்னையை தவிர தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் மாவட்ட செயலாளர்கள் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்காணவர்கள் கலந்து கொண்டனர்.

## க்ரைம் கார்னர்

# திருத்தணி தனியார் விடுதியில் சென்னை நபர் தற்கொலை

**திருத்தணி, நவ.17:**

சென்னை திருவல்லிக்கேணியை சேர்ந்தவர் சாமிநாதன். இவரது மகன் விஜயன் (42). இவர் தனியார் நிறுவன ஊழியர். கடந்த 2 நாட்களுக்கு முன் திருத்தணி பேருந்து நிலையத்தில் உள்ள தனியார் தங்கும் விடுதியில் விஜயன் வாடகைக்கு அறை எடுத்து தங்கியுள்ளார். இந்த நிலையில், இன்றுகாலை விஜயன் தங்கியிருந்த அறையில் இருந்து கடும் துர்நாற்றம் வந்ததால் விடுதி ஊழியர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

இதுகுறித்து திருத்தணி போலீசாருக்கு தகவல் கொடுத்துவிட்டு பின்னர் விடுதி நிர்வாகிகள், மாற்று சாவி மூலம் விஜயன் தங்கியிருந்த அறையைத் திறந்து பார்த்தபோது படுக்கையில் விஜயன் சுயநினைவற்று கிடந்துள்ளார். இதையடுத்து 108 ஆம்புலன்ஸ் ஊழியர்கள் வந்து பரிசோதித்தபோது விஜயன் இறந்துவிட்டார் என்பது தெரியவந்தது.

இதனிடையே போலீசார் வந்து விஜயனின் அறையில் சோதனை நடத்தியபோது படுக்கையில் ஏராளமான மாத்திரைகள் இருந்தது. மேலும் அவர் எழுதி வைத்திருந்த கடிதத்தில், ''கடன் தொல்லையால் எனது வாழ்க்கை சிதைந்துவிட்டது. இதன்காரணமாக மாத்திரைகள் சாப்பிட்டு தற்கொலை செய்து கொள்கிறேன். தன்னை குடும்பத்தினர் மன்னித்து விடவேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார். இதுசம்பந்தமாக திருத்தணி போலீசார் வழக்குபதிவு செய்து விசாரிக்கின்றனர்.

# கிட்னி விற்பனையில் மேலும் ஒரு இடைத்தரகர் கைது

**நாமக்கல், நவ.17:**

பள்ளிபாளையம் கிட்னி விற்பனை விவகாரம் தொடர்பாக மேலும் ஒரு இடைத்தரகர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம், குமாரபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் விசைத்தறித் தொழிலாளர்களிடம் கிட்னி திருடப்பட்ட விவகாரம் தொடர்பாக சிறப்புக் காவல் படையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். விசாரணையில் பள்ளிபாளையம் அன்னை சத்யா நகரைச் சேர்ந்த ஸ்டாலின் மோகன் (48), ஆனந்தன் (45) ஆகியோர் கிட்னி விற்பனை செய்யும் இடைத்தரகர்களாக செயல்பட்டது தெரியவந்தது. இதையடுத்து, கடந்த அக்டோபர் மாதம் இருவரையும் போலீஸார் கைது செய்தனர்.

மேலும், அவர்களிடம் நடத்திய விசாரணையில் கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் பள்ளிபாளையம் அன்னை சத்யா நகரைச் சேர்ந்த கிட்னி விற்பனை செய்யும் இடைத்தரகர் முத்துசாமி (45) என்பவரை சிறப்பு காவல் படையினர் கைது செய்தனர். அவரிடம் கிட்னி விற்பனை தொடர்பாக தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

# ஆன்லைன் ட்ரேடிங் மூலம் ரூ.100 கோடி மோசடியில் ஈடுபட்ட மேலும் இருவர் கைது

**சென்னை, நவ.17:**

ஆன்லைன் டிரேடிங் மூலம் 100-க்கும் மேற்பட்டோரிடம் ரூ.100 கோடி மோசடி செய்த வழக்கில் மேலும் இருவரை போலீஸார் கைது செய்தனர். விசாரணையில் இவர்கள் சர்வதேச சைபர் குற்றவாளிகளுடன் கூட்டு சேர்ந்து மோசடியில் ஈடுபட்டது அம்பலமானது.

சென்னை பெருங்குடியைச் சேர்ந்தவர் கார்த்திக் (36). பைனான்ஸ் தொழில் செய்து வருகிறார். இவர் கடந்த மார்ச் மாதம் சமூக வலைதளத்தில் ஆன்லைன் டிரேடிங் தொடர்பான விளம்பரத்தை பார்த்து, அதில் குறிப்பிட்டிருந்த வாட்ஸ்-அப் எண்ணைத் தொடர்பு கொண்டு ஒரு குழுவில் இணைந்தார். பின்னர், அந்த குழுவில் வந்த 'லிங்க்' மூலமாக, டிரேடிங் செயலி ஒன்றை பதிவிறக்கம் செய்தார். அப்போது, அதில், முதலீடு செய்யும் பணத்துக்கு அதிக லாபம் கிடக்கும் என குறிப்பிடப்பட்டிருந்தது. அதை நம்பி, பல்வேறு வங்கி கணக்குகளுக்கு கார்த்திக் ரூ.1.43 கோடி செலுத்தியுள்ளார். பணம் கேட்டு வற்புறுத்தல்: இந்நிலையில், அவர் செலுத்திய பணத்துக்கு ஏற்றவாறு அதிக லாபம் வந்ததுபோல, அந்த செயலியில் காண்பிக்கப் பட்டுள்ளது. அப்பணத்தை எடுக்க கார்த்திக் முயன்றார். அப்போது, அடையாளம் தெரியாத நபர்கள், வெவ்வேறு காரணங்களைக் கூறி,கார்த்திக்கு இடம் மேலும் பணம் கேட்டு வற்புறுத்தியுள்ளனர். இதையடுத்து தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த கார்த்திக், சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் கடந்த செப்.16-ம் தேதி புகார் அளித்தார். வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்திய போலீஸார், மோசடி குற்றத்தில் ஈடுபட்ட நுங்கம்பாக்கத்தைச் சேர்ந்த தனியார் ஏற்றுமதி நிறுவனத்தின் உரிமையாளர் சூர்யா ஸ்ரீனிவாஸ் (50), தனியார் வங்கியின் முன்னாள் கிளை மேலாளர் சேஷாத்ரி எத்திராஜ் (43), அனகாபுத்தூரைச் சேர்ந்த தினேஷ் (29), வாணியம்பாடியைச் சேர்ந்த அருண் பாண்டியன் (33) ஆகியோரைக் கைது செய்தனர். இந்நிலையில், இச்சம்பவத்துக்கு மூளையாகச் செயல்பட்ட கே.கே.நகரைச் சேர்ந்த ஸ்ரீநாத் ரெட்டி (49), திருவள்ளூரைச் சேர்ந்த அனிதா (40) ஆகியோரைத் தேடி வந்த நிலையில், கடந்த 13-ம் தேதி சென்னையில் போலீஸார் கைது செய்தனர். அவர்களிடம் நடத்திய விசாரணையில், ஸ்ரீநாத் ரெட்டி, சென்னையில் பல போலி நிறுவனங்களை உருவாக்கி, 30-க்கும் மேற்பட்ட வங்கி கணக்குகள் ஆரம்பித்து, வங்கி கணக்குகளை சர்வதேச சைபர் குற்றவாளிகளிடம் கொடுத்து, ரூ.100 கோடிக்கும் மேல் மோசடி செய்து, அதன்மூலம் பல கோடி ரூபாய் கமிஷன் பெற்றது தெரியவந்தது. மேலும், இவர் இந்தியா முழுவதும் ஏஜென்ட்டுகளை நியமித்து அவர்கள் மூலம் பெற்ற வங்கி கணக்கு விவரங்களை சர்வதேச சைபர் குற்றவாளிகளிடம் கொடுத்து, இந்தியா முழுவதும் 100-க்கும் மேற்பட்டோரிடம் மோசடி செய்துள்ளதும், கைது செய்யப்பட்ட அனிதா, ஸ்ரீநாத் ரெட்டியிடம் 15 ஆண்டுகளாகப் பணிபுரிந்து வந்ததும் தெரிய வந்தது. இதையடுத்து இருவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# டெல்லி கார் குண்டு வெடிப்பு வழக்கு: அல் பலா பல்கலை.யின் 2 மருத்துவர்கள் உட்பட 3 பேரிடம் போலீஸார் தீவிர விசாரணை



புதுடெல்லி, நவ.17:

டெல்லி கார் குண்டு வெடிப்பு வழக்கில் அல் பலா பல்கலைக் கழகத்தின் 2 மருத்துவர்கள் உள்ளிட்ட மேலும் 3 பேரை பிடித்து போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

டெல்லி செங்கோட்டை அருகில் கடந்த 10-ம் தேதி மாலை ஒரு கார் வெடித்து சிதறிய சம்பவம் நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்த குண்டு வெடிப்பை நிகழ்த்திய மருத்துவர் உமர் நபி ஹரியானா மாநிலம் பரிதாபாத்தில் உள்ள அல் பலா பல்கலைக் கழக மருத்துவக் கல்லூரியில் பணியாற்றி வந்தவர்.

இது தொடர்பாக 3 மருத்துவர்கள் உட்பட 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் ஹரியானாவின் தவுஜ், நூஹ் மற்றும் அதை ஒட்டிய பகுதிகளில் டெல்லி போலீஸார் மற்றும் மத்திய அமைப்புகளின் அதிகாரிகள் வெள்ளிக்கிழமை இரவு ஒருங்கிணைந்த சோதனை மேற்கொண்டனர். இந்த சோதனையில் உமர் நபிக்கு தெரிந்த 2 மருத்துவர்கள் உள்ளிட்ட 3 பேரை டெல்லி போலீஸார் தங்கள் பிடியில் கொண்டு வந்தனர்.

இதுகுறித்து அதிகார வட்டாரங்கள் கூறியதாவது: ஹ் பகுதியில் அல் பலா பல்கலைக் கழகத்தை சேர்ந்த முகம்மது, முஸ்தாகிம் என்ற மருத்துவர்களை என்ஐஏ உதவியுடன் டெல்லி போலீஸார் தங்கள் பிடியில் கொண்டு வந்தனர். இவர்கள் உமர் நபியின் நெருங்கிய நண்பர்கள். மேலும் தீவிரவாத சதி வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள மருத்துவர் முஜாம்மில் உடன் தொடர்பில் இருந்துள்ளனர்.

இவர்களில் ஒருவர், கார் குண்டு வெடிப்பு நாளில் டெல்லியில் இருந்துள்ளார். இருவருக்கும் இந்த வழக்கில் தொடர்பு உள்ளதா என்பது குறித்து தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

இதுபோல் நூஹ் பகுதியில் உரிமம் இல்லாமல் உரம் விற்பனை செய்த தினேஷ் என்கிற தாப்பு போலீஸ் பிடியில் உள்ளார். வெடிகுண்டு தயாரிக்க பயன்படும் என்பிகே உரம் வாங்க தீவிரவாதிகள் ரூ.3 லட்சம் செலவிட்டிருப்பது தெரிய வந்ததால் அவர்களுக்கு தினேஷ் உரம் விற்பனை செய்தாரா என்பது குறித்து போலீஸார் விசாரிக்கின்றனர்.

இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## விளையாட்டு செய்திகள்

### ஆசிய கோப்பை கிரிக்கெட்: 32 பந்துகளில் சதம் விளாசி சூர்யவன்ஷி அசத்தல்

ஒதோகா, நவ.17:

வளர்ந்து வரும் நட்சத்திரங்களுக்கான (ரைசிங் ஸ்டார்) ஆசிய கோப்பை 20 ஓவர் கிரிக்கெட் போட்டி கத்தார் தலைநகர் தோகாவில் நேற்று தொடங்கியது. 23-ந் தேதி வரை நடைபெறும் இந்த போட்டியில் பங்கேற்றுள்ள 8 அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டு மோதுகின்றன. லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் டாப்-2 இடங்களை பிடிக்கும் அணிகள் அரைஇறுதிக்கு முன்னேறும்.

தொடக்க நாளான நேற்று நடந்த 'பி' பிரிவு லீக் ஆட்டம் ஒன்றில் இந்திய 'ஏ' அணி, ஐக்கிய அரபு அமீரகத்துடன் மோதியது. 'டாஸ்' ஜெயித்து முதலில் பேட் செய்த இந்திய 'ஏ' அணியில் தொடக்க ஆட்டக்காரராக இறங்கிய 14 வயது வைபவ் சூர்யவன்ஷி வழக்கம் போல அதிரடியாக மட்டையை சுழட்டினார். பந்தை நாலாபுறமும் தெறிக்கவிட்ட அவர் 32 பந்துகளில் சதத்தை கடந்தார். இதன் மூலம் ஒட்டுமொத்த 20 ஓவர் கிரிக்கெட்டில் அதிவேகமாக சதம் விளாசிய 2-வது இந்திய வீரர் என்ற பெருமையை ரிஷப் பண்டுடன் இணைந்து பெற்றார். அத்துடன் உலக அரங்கில் இந்த சாதனை பட்டியலில் 5-வது இடத்தை பகிர்ந்து கொண்டுள்ளார். மிரட்டலாக ஆடிய சூர்யவன்ஷி 144 ரன்னில் (42 பந்து, 11 பவுண்டரி, 15 சிக்சர்) கேட்ச் ஆனார். 20 ஓவர்களில் இந்திய 'ஏ' அணி 4 விக்கெட்டுக்கு 297 ரன்கள் குவித்தது. கேப்டன் ஜிதேஷ் ஷர்மா 83 ரன்கள் (32 பந்து, 8 பவுண்டரி, 6 சிக்சர்) எடுத்தார்.

அடுத்து களமிறங்கிய ஐக்கிய அரபு அமீரகம் 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்கு 149 ரன்களே எடுத்தது. இதனால் இந்திய 'ஏ' அணி 148 ரன் வித்தியாசத்தில் மெகா வெற்றியை சுவைத்தது.

### உலக ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப்: தமிழக வீராங்கனை அனுபமா 'சாம்பியன்'

சென்னை, நவ.17:

உலக ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப் போட்டி கத்தார் தலைநகர் தோகாவில் நடந்தது. இதன் பெண்கள் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் இந்திய வீராங்கனை அனுபமா 3-2 என்ற பிரேம் கணக்கில் ஹாங்காங்கின் என்ஜி ஆன் யீயை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை தன்வசப்படுத்தினார். அத்துடன் சென்னையை சேர்ந்த 23 வயது அனுபமா உலக ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப்பில் 15 ரெட் வகை பந்தயத்தில் பட்டம் வென்ற முதல் இந்திய மங்கை என்ற சிறப்பையும் பெற்றார்.

### 18-வது சையத் முஷ்டாக் அலி போட்டி; தமிழக அணியின் கேப்டனாக வருண் சக்கரவர்த்தி நியமனம்

சென்னை, நவ. 17:

18-வது சையத் முஷ்டாக் அலி டி20 கிரிக்கெட் போட்டி லக்னோ, ஆமதாபாத், புனே, இந்தூர் உள்பட பல்வேறு இடங்களில் வருகிற 26-ந் தேதி முதல் டிசம்பர் 18-ந் தேதி வரை நடக்கிறது. இதில் 'எலைட்' பிரிவில் பங்கேற்கும் 32 அணிகள் 4 பிரிவாக பிரிக்கப்பட்டு மோத உள்ளன. 'டி' பிரிவில் இடம் பிடித்துள்ள தமிழக அணி தனது முதலாவது லீக் ஆட்டத்தில் ராஜஸ்தானை ஆமதாபாத்தில் சந்திக்கிறது. இந்த போட்டிக்கான தமிழக அணியை தமிழ்நாடு கிரிக்கெட் சங்க செயலாளர் பகவான்தாஸ் ராவ் அறிவித்துள்ளார். சுழற்பந்து வீச்சாளர் வருண் சக்கரவர்த்தி முதல்முறையாக கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.தமிழக அணி: வருண் சக்கரவர்த்தி (கேப்டன்), என்.ஜெகதீசன் (துணை கேப்டன்), துஷார் ரஹேஜா, அமித் சாத்விக், ஷாருக்கான், ஆந்த்ரே சித்தார்த், பிரதோஷ் ரஞ்சன் பால், ஷிவம் சிங், சாய் கிஷோர், எம்.சித்தார்த், டி.நடராஜன், குர்ஜப்னீத் சிங், இசக்கி முத்து, சோனு யாதவ், சிலம்பரசன், ரித்விக் ஈஸ்வரன்.

### சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் இணைந்தார் சஞ்சு சாம்சன்

சென்னை, நவ. 17:

19-வது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிக்கான வீரர்களின் மினி ஏலம் அடுத்த மாதம் (டிசம்பர்) 16-ந்தேதி அபுதாபியில் நடைபெறுகிறது. இதையொட்டி தக்கவைக்கப்படும் மற்றும் விடுவிக்கப்படும் வீரர்களின் பட்டியலை 10 அணிகளும், ஐ.பி.எல். நிர்வாகத்திடம் சமர்ப்பிக்க வேண்டும். அதற்கு முன்பாக பரஸ்பர பேச்சுவார்த்தையின் மூலம் வீரர்கள் வர்த்தக பரிமாற்றம் நடந்து வருகிறது. முன்னதாக கடந்த சீசனில் (18-வது சீசன்) ஐ.பி.எல். வரலாற்றில் வெற்றிகரமான அணிகளில் ஒன்றான சென்னை சூப்பர் கிங்ஸ் மோசமான செயல்பாட்டை வெளிப்படுத்தி புள்ளி பட்டியலில் கடைசி இடத்தை பிடித்தது. ஐ.பி.எல். வரலாற்றில் சென்னை அணி புள்ளி பட்டியலில் கடைசி இடத்தை பிடிப்பது இதுவே முதல் முறையாகும்.

சென்னை அணி 6 வீரர்களை விடுவிக்க திட்டமிட்டுள்ளது. சென்னை அணியில் இருந்து டெவோன் கான்வே, ரச்சின் ரவீந்திரன், ராகுல் திரிபாதி, தீபக் ஹூடா, விஜய் சங்கர், ஜேமி ஓவர்டன் ஆகியோர் விடுவிக்கப்பட உள்ளனர். முன்னதாக சிஎஸ்கே நிர்வாகம், சஞ்சு சாம்சனை வாங்க ராஜஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்தியது. அவருக்கு பதிலாக முன்னணி நட்சத்திர ஆல்-ரவுண்டர்களான ரவீந்திர ஜடேஜா, சாம் கர்ரன் ஆகியோரை தரும்படி ராஜஸ்தான் அணி கேட்டது. இந்தநிலையில் ஜடேஜா மற்றும் சாம் கரனை கொடுத்து சஞ்சு சாம்சனை சென்னை அணி வாங்கியுள்ளது. இதனை ஐபிஎல் நிர்வாகம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. ரூ.18 கோடிக்கு சஞ்சு சாம்சனை சென்னை அணி வாங்கியுள்ளது. ராஜஸ்தான் அணிக்காக 11 சீசன்களில் விளையாடியுள்ள சஞ்சு சாம்சன் 4,027 ரன்கள் எடுத்துள்ளார்.

# பிஹாரில் 11 ஆக குறைந்த முஸ்லிம் எம்எல்ஏக்கள்

புதுடெல்லி, நவ.17:

பிஹாரில் முஸ்லிம்கள் சுமார் 20 சதவிகிதம் பேர் உள்ளனர். அதன்படி 45 எம்எல்ஏக்கள் இருக்க வேண்டும். ஆனால், இந்த முறை 11 முஸ்லிம்கள் மட்டுமே வெற்றி பெற்றுள்ளனர். சீமாஞ்சல் பகுதியில் முஸ்லிம் வாக்காளர்கள் அதிகம். இங்கு அசாதுதீன் ஒவைசியின் ஏஐஎம்ஐஎம் கட்சி 5 தொகுதிகளை மீண்டும் பெற்றுள்ளது.

மேலும், இதர பல பகுதிகளில் எதிர்க்கட்சிகளின் மெகா கூட்டணிக்கான முஸ்லிம் வாக்குகளையும் ஒவைசி கட்சி பிரித்துள்ளது. ஏஐஎம்ஐஎம் கட்சியில் 2020 தேர்தலில் வெற்றி பெற்ற 5 எம்எல்ஏ.க்களில் 4 பேர் ஆர்ஜேடியில் இணைந்தனர்.

அவர்கள் இந்த தேர்தலில் அதே தொகுதிகளில் போட்டியிட்டனர். எனினும், வேறு புதிய முஸ்லிம் வேட்பாளர்களுக்கு ஏஐஎம்ஐஎம் வாய்ப்பளித்து வெற்றி பெற வைத்துள்ளது.

தற்போது ஆர்ஜேடி 3, காங்கிரஸ் 2 மற்றும் ஐஜத.வில் ஒருவர் வெற்றி பெற்று எம்எல்ஏ.க்களாகி உள்ளனர். கடந்த 1985 தேர்தலில் 34 முஸ்லிம்கள் எம்எல்ஏ.க்களானார்கள்.

அந்த நேரத்தில் ஜார்க்கண்ட் மாநிலம் பிரிக்கப்படாமல் ஒன்றுபட்ட பிஹாரில் 324 தொகுதிகள் இருந்தன. கடைசியாக நடைபெற்ற 2020 தேர்தலிலும் 19 முஸ்லிம்கள் எம்எல்ஏக்களாக இருந்தனர். ஆனால், தற்போது இது 11 ஆக குறைந்துள்ளது.

இந்த தேர்தலில் முஸ்லிம்களுக்கு பாஜக வாய்ப்பளிக்கவில்லை. இதன் கூட்டணி கட்சியான சிராக் பாஸ்வானின் லோக் ஜன சக்தியில் முஸ்லிம்கள் போட்டியிட்டும் வெற்றி பெறவில்லை.

# 'பிஹார் தேர்தலுக்காக உலக வங்கி நிதி ரூ.14,000 கோடியை தவறாக பயன்படுத்தினர்' - ஜன் சுராஜ் குற்றச்சாட்டு



பாட்னா, நவ.17:

பிஹார் சட்டப்பேரவை தேர்தலுக்காக உலக வங்கியின் நிதி ரூ.14 ஆயிரம் கோடியை மத்திய அரசு எடுத்து பெண் வாக்காளர்களுக்கு விநியோகித்ததாக ஜன் சுராஜ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் பவன் வர்மா குற்றம் சாட்டினார்.

இதுகுறித்து செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பவன் வர்மா அளித்த பேட்டியில், "முக்கிய மந்திரி மகிளா ரோஜ்கர் யோஜனா திட்டத்தின் கீழ் 1.25 கோடி பெண் வாக்காளர்களின் கணக்குகளுக்கு ரூ.10,000 மாற்றப்பட்டது. தற்போது பிஹாரில் பொதுக் கடன் ரூ.4,06,000 கோடியாக உள்ளது. ஒரு நாளைக்கு வட்டி ரூ.63 கோடி, அரசின் கருவூலம் காலியாக உள்ளது.

மாநிலத்தில் பெண்களுக்கு வழங்கப்பட்ட தலா ரூ.10,000, உலக வங்கியிலிருந்து வேறு ஏதோ ஒரு திட்டத்திற்காக வந்த ரூ.21,000 கோடியிலிருந்து எடுத்து தவறாக பயன்படுத்தப்பட்டது. தேர்தலுக்கான நடத்தை விதிமுறைகள் அமலாகும் ஒரு மணி நேரத்திற்கு முன்பு, ரூ.14,000 கோடி எடுக்கப்பட்டு மாநிலத்தில் உள்ள 1.25 கோடி பெண்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

நான் சொன்னது போல், இது எங்கள் தகவல். அது தவறாக இருந்தால், நான் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். ஆனால் அது உண்மையாக இருந்தால், இது எவ்வளவு தூரம் நெறிமுறை சார்ந்தது என்ற கேள்வி எழுகிறது. அரசாங்கம் நிதியை பயன்படுத்திய பின்னர், தேர்தலுக்குப் பிறகு வேறு வகையில் விளக்கம் அளிக்க முடியும்.

மொத்தமுள்ள நான்கு கோடி பெண்களில் 2.5 கோடி பேர் இன்னும் அந்தத் தொகையைப் பெறவில்லை. தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சிக்கு வராவிட்டால் இந்த தொகை தங்களுக்கு கிடைக்காது என்று அவர்கள் நினைத்தனர். எங்கள் கட்சியின் தோல்விக்கு கடைசி நிமிடத்தில் ரூ.10,000 மாற்றப்பட்டது மற்றும் பெண்களுக்கு வழங்கிய நலத்திட்டங்கள் முக்கிய காரணம்" என்று பவன் வர்மா கூறினார்.

பிஹார் தேர்தலில் பிரசாந்த் கிஷோர் தலைமையிலான ஜன் சுராஜ் கட்சி படுதோல்வியடைந்தது. அக்கட்சி போட்டியிட்ட 238 தொகுதிகளில் 236 இடங்களில் டெபாசிட் இழந்தது, இந்த தேர்தலில் அக்கட்சிக்கு 3.44 சதவீதம் வாக்குகள் மட்டுமே கிடைத்தது.

# எதிர்க்கட்சிகளுக்கு பிஹார் தேர்தலில் பெரும் தோல்வி ஏன் ?



புதுடெல்லி, நவ.17:

பிஹார் தேர்தலில் மொத்தமுள்ள 243 தொகுதிகளில் ஆளும் என்டிஏ கூட்டணி 202 இடங்களை பெற்றுள்ளது. அதேசமயம் ஆர்ஜேடி தலைமையிலான மெகா கூட்டணி 35 ஆக சுருங்கி விட்டது. ஆர்ஜேடி 25 இடங்களை மட்டுமே பெற்றது.

இதில் முக்கிய ஆதரவாளர்களான யாதவ் மற்றும் முஸ்லிம்கள் எதிர்க்கட்சிகளுக்கு வாக்களிக்காதது ஏன் என்ற கேள்வி எழுந்துள்ளது. தேர்தல் ஆணையத்தின் முக்கிய நடவடிக்கையான எஸ்ஐஆர் (வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்) முதல் மாநிலமாக பிஹாரில் அமலானது.

இது தொடர்பாக காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி பிஹாரில் வாக்காளர் அதிகார யாத்திரை நடத்தினார். இதன் உச்சமாக மெகா கூட்டணியின் முதல்வர் வேட்பாளராக ஆர்ஜேடி தலைவர் தேஜஸ்வி யாதவ் அறிவிக்கப்பட்டார். இவை எதுவுமே மெகா கூட்டணிக்கு பலன் அளிக்கவில்லை.

இதன் பின்னணியில் சில முக்கிய காரணங்கள் கூறப்படுகின்றன. இதில் ஒன்றாக மெகா கூட்டணியில் தொடக்கம் முதலாகவே நம்பிக்கையின்மை நிலவியது. தனது தந்தை லாலுவுக்கு பிறகு மெகா கூட்டணிக்கு தேஜஸ்வி தலைமை தாங்க விரும்பினார். இவருக்கு பின் இருக்கையில் அமர காங்கிரஸ் விரும்பவில்லை. யாத்திரையில் கலந்துகொண்ட அனைத்து கட்சிகளும் தேஜஸ்வியை முதல்வர் வேட்பாளராக ஏற்றுக்கொண்ட போதிலும் ராகுல் மட்டும் மவுனம் காத்தார்.

இதனிடையே இடதுசாரிகளும், விகாஸ் இன்சான் கட்சி (விஐபி) தலைவர் முகேஷ் சாஹ்னியும் வெளிப்படையாக அதிக தொகுதிகள் கோரினர். இப்பிரச்சினையை பேசித் தீர்க்க பெரிய எதிர்பார்ப்புடன் டெல்லி சென்ற தேஜஸ்விக்கு ஏமாற்றமே மிஞ்சியது. இவரை சந்திப்பதை ராகுல் தவிர்த்து விட்டதாக தகவல் வெளியானது. இறுதியில் வேறுவழியின்றி கட்டாயத்தின் பேரில் முதல்வர் வேட்பாளராக தேஜஸ்வி அறிவிக்கப்பட்டார். இதுவும் மெகா கூட்டணியின் ஒரு முக்கியப் பின்னடைவாக பார்க்கப்படுகிறது.

அதேபோல் விஐபி கட்சித் தலைவர் முகேஷ் சாஹ்னியை துணை முதல்வர் வேட்பாளராக அறிவித்ததும் பெரிய தவறாகக் கருதப்படுகிறது. ஏனெனில், இந்த அறிவிப்பு ஆளும் என்டிஏவால் ஏற்கெனவே தீவிரமாக முன்னிறுத்தப்பட்டு வந்த மகா தலித் சமூகத்தை அந்நியப்படுத்தியது. மேலும், மெகா கூட்டணி ஆட்சி அமைந்தால் மற்றொரு துணை முதல்வர் உண்டு என்றவர்கள் அவரது பெயரை அறிவிக்கவில்லை. இது பிஹாரில் சுமார் 20 சதவீதம் உள்ள முஸ்லிம்களை கோபப்படுத்தியது. இதுவும் முஸ்லிம் பகுதியில் மெகா கூட்டணியின் பலவீனமான பிரச்சாரமும் இழப்பை ஏற்படுத்தி விட்டது. வழக்கமாக முஸ்லிம்களின் வாக்குகளை பிரிக்கும் ஒவைசி இந்த முறை மெகா கூட்டணியில் இணைய விரும்பினார். ஆனால், மெகா கூட்டணி அவரை புறக்கணித்தது. இதன் விளைவும் தேர்தல் முடிவுகளில் வெளிப்படையாகத் தெரிகிறது.பாஜக போட்டியிட்ட 101 தொகுதிகளில் 12-ல் தோல்வி அடைந்தது. இந்த 12-ல் 5 தொகுதிகளை ஏஐஎம் ஐஎம் கட்சியிடம் பாஜக இழந்துள்ளது.

பிஹாரின் முக்கியத் எதிர்கட்சித் தலைவரான தேஜஸ்வியுடன் மக்களவை எதிர்க்கட்சித் தலைவரான ராகுல் காந்தி மேடை ஏறினாலும் அது ஏனோ பெரிதாகச் சிறக்கவில்லை. ககரியா பிரச்சாரத்தின் போது ராகுல், அத்தொகுதி மீனவர்களுடன் தண்ணீரில் குதித்து மீன் பிடித்ததற்கும் உரிய வாக்குகள் கிடைக்காதது போலானது.

கடந்த 2004 முதல் 20 ஆண்டுகளாக ராகுல் அரசியலில் உள்ளார்.

அவரது இந்த அனுபவத்திற்கு 55 வயதில் இதுபோன்ற சிறுபிள்ளைத்தனமான சாகசங்கள் தேவையில்லை என இப்போது விமர்சிக்கப்படுகிறது.

தேர்தல் வியூக நிபுணர் பிரசாந்த் கிஷோரின் ஜன் சுராஜ் கட்சியாலும் ராகுலுக்கு அதிகமான இழப்பு ஏற்பட்டுள்ளது. பிரியங்கா காந்தியின் பிரச்சாரமும் எடுபடவில்லை. 20 வருடங்களாக தொடரும் என்டிஏ ஆட்சிக்கு எதிரான வாக்குகள் தமக்கு நிச்சயம் வெற்றித் தரும் என்ற மெகா கூட்டணியின் கணிப்பு தவறாகப் போனது. இப்போது பிஹாரின் வெற்றியால் தமிழ்நாடு மற்றும் கேரளாவுக்கும் பாஜக சவால் விடுகிறது.

# மெக்சிகோவில் வன்முறையில் முடிந்த அரசுக்கு எதிரான ஜென்ஸீ இளைஞர்கள் போராட்டம்

**பெர்லின், நவ.17:**

மெக்சிகோ நாட்டில் அரசுக்கு, அதிபருக்கு எதிராக நடந்த ஜென்ஸீ இளைஞர்கள் முன்னெடுத்த போராட்டம் வன்முறையில் முடிந்தது.

வட அமெரிக்கா கண்டத்தில் உள்ள மெக்சிகோ நாட்டில் சனிக்கிழமையன்று அதிபரைக் கண்டித்து, அரசை எதிர்த்து ஆயிரக்கணக்கான ஜென்ஸீ இளைஞர்கள் போராட்டத்தில் குதித்தனர். மெக்சிகோவில் கடந்த அக்டோபர் 2024 முதக் க்ளாடியா ஷீன்பாம் என்பவர் அதிபராக இருக்கிறார். மெக்சிகோவில் ஊழலும், வன்முறையும் ஷீன்பாம் ஆட்சியில் பெருகிவிட்டது என்பது இளைஞர்களின் குற்றச்சாட்டு.

இந்நிலையில் நேற்று மெக்சிகோ தலைநகரில் ஜென்ஸீ இளைஞர்கள் திரண்டனர். ஆரம்பத்தில் அதிபர் மாளிகையை நோக்கி திரண்ட இளைஞர்கள் அமைதியாகவே கோஷங்களை எழுப்பினர். நேரம் செல்லச் செல்ல போராட்டக் களத்தில் இளைஞர்களோடு இன்னும் சிலரும் சேர்ந்தனர். பின்னர், அவர்கள் அதிபர் மாளிகையை முற்றுகையிட்டு சூறையாட முயன்றனர். அப்போது பாதுகாப்புப் படையினருக்கும் ஜென்ஸீ இளைஞர்களுக்கும் இடையே கடும் மோதம் ஏற்பட்டது. மேலும், மெக்சிகோவில் உயர் பதவியில் இருப்போரின் படுகொலை சர்வசாதாரணமாகிவிட்டது என்பது அவர்களின் குற்றச்சாட்டு.

அண்மையில் மெக்சிகோவின் உருவாப்பான் நகரின் மேயர் கார்லஸ் ரோட்ரிகுவேஸ் படுகொலை செய்யப்பட்டார். நகரில் போதைப் பொருள் கடத்தல் கும்பல்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுத்த அவர் கொல்லப்பட்டார். இதனாலும் ஜென்ஸீ இளைஞர்கள் கடும் ஆத்திரத்தில் இருந்ததாகத் தெரிகிறது. நாட்டில் பெருகிவரும் ஊழல், கிரிமினல் குற்றங்கள், உயர் பதவி வகிப்போருக்கு பாதுகாப்பின்மை எனப்பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து இளைஞர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றைய போராட்டத்தில் சுமார் 100 போலீஸ் அதிகாரிகள் காயமடைந்தனர். போராட்டக்காரர்களில் 20 பேர் காயமடைந்தனர்.

பைரேஸ்ட் கொடி - போராட்டத்தில் ஈடுபட்ட ஜென்ஸீ இளைஞர்கள் கடற்கொள்ளையர்களை அடையாளப்படுத்தும் கருப்பு நிறத்தில் வெள்ளை எலும்புகூடு தலை உள்ள கொடியை ஏந்திவந்தனர். அவர்கள் நாட்டில் ஆட்சி நடக்கவில்லை கொள்ளையடிக்கும் கூட்டம் அதிகாரம் செலுத்துகிறது என்று முழங்கினர். மேலும் அதிபர் வசிப்பிடத்தை நெருங்கவிடாமல் போலீஸார் பாதுகாப்பு வளையத்தை தவலுப்படுத்தியபோது, 'இப்படித்தான் நீங்கள் மேயர் கார்லஸ் ரோட்ரிகஸையும் பாதுகாத்திருக்க வேண்டும் என அவசமாக முழங்கியதோடு போலீஸார் மீது கையில் கிடைத்த பொருளை எல்லாம் தூக்கி வீசினர்.

இந்நிலையில் இந்தப் போராட்டங்கள் குறித்து அதிபர் ஷீன்பாம் கூறுகையில், "வலதுசாரி கட்சிகள் தான் இந்தப் போராட்டத்தை தூண்டி விட்டுள்ளன. இதுமட்டுமல்லாது மேலும் சமூகவலைதளங்கள் வாயிலாக இந்தப் பெருங்கூட்டத்தைத் திரட்டியுள்ளனர்." என்றார்.

இலங்கை, வங்கதேசம், நேபாளம் என ஜென்ஸீ போராட்டம் சமீப காலமாக கவனம்பெற்ற நிலையில் தற்போது மெக்சிகோவிலும் போராட்டம் நடைபெற்றுள்ளது.

## கட்டாய ராணுவ சேவை: போருக்கு தயாராகிறதா ஜெர்மனி?



**நியூயார்க், நவ.17:**

ஜெர்மனியில் 18 வயதடைந்த அனைவரும் ராணுவத்தில் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும் என்று அரசு அறி வித்துள்ளது. இது தன்னார்வ சேவை எனவும் தெரிவித்துள்ளது. இந்நிலையில் அரசு ராணுவ வீரர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளது. இது தற்காப்பு அல்ல போருக்கான நடவடிக்கை. கட்டாய ராணுவச் சேவை போருக்குத் தயாராவதைத் தான் காட்டுகிறது என அந்நாட்டின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செவிம் டாக்டெலென் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பு சூடான் நிலைமை பற்றி விவாதம்



சூடானின் எல்-பாஷர் நகரை கைப் பற்றிய துணை ராணுவம் இனப்படு கொலைகளையும் வன்முறைகளையும் கட்டவிழ்த்துள்ளது. இத்தகைய கொடூரக் குற்றங்கள் குறித்து விவாதிக்க ஐ.நா உயர்மட்ட மனித உரிமைகள் அமைப்பு ஒரு சிறப்புக் கூட்டத்தை நடத்தியுள்ளது. மேலும் இந்த அமைப்பு நிபுணர்கள் குழு மூலம் எல்-பாஷர் நகர் மருத்துவமனையில் நடத்தப்பட்ட படுகொலைகள், பொதுமக்கள் மீதான படுகொலைகள், பாலியல் வன்கொடுமைகள் குறித்து விசாரிக்க உள்ளது.

## வெனிசுலா : ராணுவ நடவடிக்கையை தீவிரப்படுத்தும் அமெரிக்கா

அமெரிக்காவின் கடற்படை லத்தீன் அமெ ரிக்க கடல் பகுதிகளில் ராணுவ நடவடிக்கை யை தீவிரப்படுத்துவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. அமெரிக்கப் பாதுகாப்புத் துறை செயலாளர் பீட் ஹெக்செத் "ஆபரேஷன் சதர்ன் ஸ்பியர்" மூலம் இந்த தாக்குதல் தீவி ரப்படுத்தப்படும் என தெரிவித்துள்ளார். வெனி சுலாவில் ஆட்சியை கவிழ்க்க இந்த நடவடிக்கை யை அமெரிக்கா மேற்கொண்டு வருகிறது. இதுவரை அக்கடல் பகுதியில் 20 கப்பல்கள் மீது குண்டு வீசி 76 பேரை படுகொலை செய்துள்ளது அமெரிக்க ராணுவம்.

## அத்தியாவசிய விவசாயப் பொருட்கள் மீதான பரஸ்பர வரியை ரத்து செய்தார் டிரம்ப்



**வாஷிங்டன், நவ.17:**

அமெரிக்காவில் கடந்த ஜனவரியில் 2-வது முறை ஜனாதிபதியாக பதவியேற்றுக் கொண்ட டொனால்டு டிரம்ப், பரஸ்பர வரி என்ற பெயரில், உலக நாடுகள் மீது அளவுக்கதிகமான வரிகளை விதித்து வருகிறார். இந்த வரி விதிப்பால் உலக நாடுகள் மட்டுமின்றி, அமெரிக்காவில் உள்ள மக்களும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அமெரிக்கர்கள் அதிகம் பயன்படுத்தும் மாட்டிறைச்சி, காபி, பழங்கள் போன்ற உணவுப் பொருட்களின் விலையும் கடுமையாக அதிகரித்தது. இதனால், மக்கள் கடும் அதிருப்தி அடைந்தனர். இதன் தாக்கம் சமீபத்தில் நடந்த நியூயார்க் மேயர், நியூ ஜெர்சி மற்றும் விர்ஜினியா மாகாணங்களுக்கான கவர்னர் தேர்தல்களில் எதிரொலித்தது. இந்தத் தேர்தல்களில் டிரம்பின் குடியரசு கட்சிபடு தோல்வியை சந்தித்தது.

இதையடுத்து, மாட்டிறைச்சி, அன்னாசி பழம், காபி, வாழைப்பழங்கள், தேநீர், பழச்சாறுகள், கொக்கோ, சில உரங்கள் உள்ளிட்ட பல்வேறு வேளாண் பொருட்கள் மீதான பரஸ்பர வரிகளை நீக்குவதாக டிரம்ப் அறிவித்தார்.


ஜனாதிபதி டிரம்ப்பின் இந்த அதிரடி நடவடிக்கைக்கு அமெரிக்க உணவு தொழில்துறை சங்கங்கள் வரவேற்பு தெரிவித்துள்ளன. அமெரிக்க மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் விலைகள் இந்த உத்தரவினால் குறையும் என அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

## பாலஸ்தீன கைதிகளை கொலை செய்ய இஸ்ரேல் மசோதா நிறைவேற்றம்



இஸ்ரேல் சிறைகளில் உள்ள பாலஸ்தீன கைதிகளுக்கு மரணதண்டனை கொடுக்க அந்நாட்டு நாடாளுமன்றத்தில் மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது. இஸ்ரேலியர்களை கொன்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட கைதிகளு க்கு இந்த தண்டனை வழங்கப்படும் என கூறப்படுகிறது. இஸ்ரேல் சிறையில் உள்ள பல பாலஸ்தீனக் கைதிகள் பொய்க் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் இந்த முடிவு கொலை செய்யும் நடவடிக்கையே என எதிர்ப்புகள் எழுந்துள்ளன.

## லிபியக் கடல் பகுதியில் 71 புலம் பெயர்ந்தோர் மீட்பு



புலம்பெயர்ந்து படகில் பயணித்து வந்த 71 அகதிகளை லிபியா கடலோரக் காவல்படை யினர் மீட்டுள்ளனர். கடலோரக் காவல்படையின் தகவல் அடிப்படையில் அவர்களில் 70 பேர்கள் வங்கதேசத்தை சேர்ந்தவர்கள் எனவும் ஒருவர் எகிப்து நாட்டை சேர்ந்தவர் எனவும் தெரிய வந்துள்ளது. மீட்கப்பட்டவர்களுக்கு மருத்துவ மற்றும் மனிதாபிமான உதவிகள் வழங்கப்பட்ட பின்னர், அவர்கள் வழக்கமான சட்ட நடைமுறைகளை நிறைவு செய்வதற்காக முகாம்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இங்கிலாந்தில் குழந்தைகளை பலாத்காரம் செய்த பராமரிப்பு மைய ஊழியருக்கு 10 ஆண்டு சிறை



**லண்டன், நவ.17:**

இங்கிலாந்தின் சர்ரே நகரில் குழந்தைகள் பராமரிப்பு மையம் செயல்படுகிறது. அங்கு தாமஸ் வாலர் (வயது 18) என்ற வாலிபர் ஊழியராக பணிபுரிந்து வந்தார். குழந்தைகளை இயற்கை உபாதைக்கு அழைத்து செல்வது, அவர்களுக்கு உடை மாற்றி விடுவது ஆகிய வேலைகள் அவருக்கு ஒதுக்கப்பட்டு இருந்தன.

ஆனால் இயற்கை உபாதைக்கு அழைத்து சென்ற இடத்தில் குழந்தைகளை அவர் பலாத்காரம் செய்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. இதுகுறித்து போலீசார் நடத்திய விசாரணையில் பல குழந்தைகளின் ஆபாச புகைப்படங்களும் அவரது செல்போனில் இருந்தன.

இதனையடுத்து போலீசார் அவரை கைது செய்து கோர்ட்டில் ஆஜர்படுத்தினர். இந்த வழக்கு விசாரணையில் அவர் மீதான குற்றச்சாட்டு உறுதியானது. எனவே தாமஸ் வாலருக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து கோர்ட்டு தீர்ப்பளித்துள்ளது.

## போர் கைதிகள் பரிமாற்ற பணியில் உக்ரைன்... அதிபர் ஜெலன்ஸ்கி தகவல்

**கீவ், நவ.17:**



உக்ரைன் நாட்டுக்கு எதிராக 3 ஆண்டுகளுக்கு முன் ரஷியா போர் தொடுத்தது. தொடக்கத்தில் பல நகரங்களை ரஷியா கைப்பற்றியது. எனினும், அவற்றை உக்ரைன் படைகள் மீட்டன. உக்ரைனுக்கு அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஜெர்மனி போன்ற நாடுகள் ஆயுதங்கள் மற்றும் நிதியுதவி ஆகியவற்றை செய்து வருகின்றன.

ரஷியாவுக்கு, நட்பு நாடான வடகொரியா, ராணுவ தளவாடங்கள் மற்றும் வீரர்களை அனுப்பி மறைமுக உதவி செய்கிறது என கூறப்படுகிறது. போரால் பெண்கள், குழந்தைகள் மற்றும் வீரர்கள் என இரு தரப்பிலும் ஆயிரக்கணக்கில் பலியாகி உள்ளனர். லட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டு உள்ளனர். லட்சக்கணக்கானோர் வீடுகளை விட்டு அடைக்கலம் தேடி வேறு இடங்களுக்கு தப்பியோடி விட்டனர்.

இந்நிலையில், போரை முடிவுக்கு கொண்டு வரும் மத்தியஸ்த பேச்சுவார்த்தையில் அமெரிக்கா ஈடுபட்டது. அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார். ஆனால், ரஷியாவோ போரை நிறுத்தும் முடிவுக்கு வரவில்லை. அதற்கான பேச்சுவார்த்தையிலும் உடன்பாடு ஏற்படவில்லை.

இந்த நிலையில், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி செய்தியாளர்களிடம் இன்று கூறும்போது, ரஷியாவுடன் கைதிகள் பரிமாற்றத்திற்கான பணிகள் நடந்து வருகின்றன. போர் கைதிகளை திரும்ப பெறுவதற்கானபலகூட்டங்கள், பேச்சுவார்த்தைகள் மற்றும் தொலைபேசி அழைப்புகள் மேற்கொள்ளும் முயற்சிகள் நடந்து வருகின்றன என்றார்.

இதனை உறுதிப்படுத்தும் வகையில், துருக்கி மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தின் மத்தியஸ்த பேச்சுவார்த்தையின் உதவியுடன் ஆலோசனைகள் நடந்து வருகின்றன என உக்ரைனின் தேச பாதுகாப்பு மற்றும் ராணுவ கவுன்சிலின் செயலாளர் ரஸ்டெம் உமரோவ் கூறியுள்ளார்.

இதன்படி, துருக்கியின் இஸ்தான்புல் நகரில் போர் கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தம் ஏற்படுத்த இருதரப்பினரும் ஒப்புதல் அளித்துள்ளனர் என்றார்.

இதன் அடிப்படையில், 1,200 உக்ரைனியர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்றும் கூறினார். எனினும், இதுபற்றி ரஷியா உடனடியாக எதுவும் தெரிவிக்கவில்லை.

### சுற்றுலாவாசியின் தவறால்...

## சீனாவில் 1,500 ஆண்டுகள் பழமையான கோவிலில் தீ

**பீஜிங், நவ.17:**

தீ விபத்து ஏற்பட்டு, மூன்று மாடி கட்டிடத்தின் மேலிருந்து கீழ் பகுதி வரை தீ மளமளவென பரவியது.

சீனாவின் ஜியாங்சு மாகாணத்தில் உள்ள ஜாங்ஜியாகாங் பகுதியில் உள்ள பெங்ஹுவாங் மலையில் கோவில் ஒன்று உள்ளது. இந்த கோவில் கிறிஸ்து பிறப்புக்கு பின்னர் 536-ம் ஆண்டு எழுப்பப்பட்டது. இந்த கோவிலின் துணை கட்டிடம் ஒன்று பக்கத்தில் அமைந்துள்ளது.

அந்த கட்டிடத்திற்கு சுற்றுலா பயணிகள் வந்து பார்வையிட்டு செல்வதுண்டு.

1,500 ஆண்டுகள் பழமையான கோவிலின் துணை கட்டிடங்களில் ஒன்றாக இந்த கோவில் வேறொரு பழமையான கட்டிடத்தின் பிரதிபலிப்பாக கட்டப்பட்டு இருந்தது.

இந்நிலையில், அப்படி வந்த சுற்றுலாவாசிகளில் ஒருவர் மெழுகு வர்த்தியையும், நறுமணம் தரும் பத்தியையும் ஏற்றும்போது தவறாக கையாண்டிருக்கிறார் என கூறப்படுகிறது.

இந்த சம்பவத்தில் தீ விபத்து ஏற்பட்டு, மூன்று மாடி கட்டிடத்தின் மேலிருந்து கீழ் பகுதி வரை தீ மளமளவென பரவியது.

இதுபற்றிய வீடியோ ஒன்றும் வைரலானது. அதில், கட்டிடத்தின் கூரையின் துண்டுகள் தீப்பிடித்து எரிந்தபடியே விழுகின்றன.

இதனால், வான் வரை அடர்த்தியான கரும் புகை எழுந்தது. அந்த கட்டிடம் முற்றிலும் சேதமடைந்தது.

எனினும் இதனால், உயிரிழப்புகள் எதுவும் இல்லை. சுற்றியுள்ள வனப்பகுதிகளுக்கு தீ பரவவில்லை.

இதனால், கோவிலுக்கு எந்த பாதிப்பும் இல்லை. 2009-ம் ஆண்டு அக்டோபரில் கட்டப்பட்ட இந்த துணை கட்டிடத்தில், எந்த கலாசார நினைவு சின்னங்களும் இல்லை என அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.